ஆண்டு 7] ஸ்தாபிதம்: நவம்பர்' 47 : : செப்டம்பர் 1954 [இதழ் 9

# மஞ்சரி

மாதத்தின் சுவையான மலர்க்கதம்பம்

## ஊரும் உலகமும்

★

போர்ச்சுகல் சர்வாதிகாரியான ஸாலாஸர் ஒரு கிழவர். அவருக்கு எண்பது வயதுக்கு மேல் ஆகிவிட்டதாம். "இந்த வயதில் அவருடைய அரசியல் அபிப்பிராயங்களை மாற்றிக் கொள்ளச் சொன்னால் முடியுமா? கொஞ்சம் பொறுமையாயிருங்கள். அவர் காலத்துக்குப் பின் கோவா விஷயம் சௌஜன்யமாய்த் தீர்ந்துவிடும்" என்று நேருவுக்குப் பிரிட்டிஷ் சர்க்கார் உபதேசம் செய்கிறார்களாம். இது வேடிக்கையாக இல்லையா? ஒரே ஒரு மனிதர் பரலோகம் செல்வதற்காக மக்களின் சுதந்தர உணர்ச்சி வெள்ளம் தடைப்பட்டு நிற்குமா? கோவா நிலைமையை நேரில் கண்டறிய நடுநிலைமையான சில நாட்டுப் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு கமிஷனை நியமிக்கலாம் என்று கோவா சொல்லிற்று. சரி என்று ஒப்புக்கொண்டது இந்தியா. ஆனால், அந்த நடுநிலைமையாளரின் அலுவல் என்ன? இதைப்பற்றி இப்போது கோவா கோணல் கட்சியெல்லாம் பேசத் தொடங்கிவிட்டது. கோவாவை விட்டு, போர்ச்சுகல் சர்க்கார் போகவே முடியாதாம். சுதந்தர இந்தியாவும், போர்ச்சுகல் ஆதிக்கத்துக்குட்பட்ட கோவாவும் சௌஜன்யமான 'அண்டை வீட்டார்'களாக வாழ்வது எப்படி என்பதுபற்றித்தான் நடுநிலைமையாளர் ஆராயலாமாம். இது கோவா சர்க்காரின் விதண்டாவாதம். எகிப்திய சர்க்காரின் பத்திரிகையான 'அல் கௌமோர் ஹியா' சொல்வதே போல, "ஒன்று, தாமாகப் போர்ச்சுகீஸியர் வெளியேறவேண்டும்; அல்லது, பலாத்காரமாக அவர்களை விரட்டவேண்டும்". இந்த இரண்டில் ஒன்றுதான் கோவா பிரச்னை தீர வழி.

* * *

அணுகுண்டு கிலியை இருந்த இடம் தெரியாமல் பறந்து போகச் செய்யக்கூடிய பெருங் கிலி ஒன்றை, யாதவ்புர் காலேஜ் கணிதப் பேராசிரியரான டாக்டர் எஸ். கே. பானர்ஜி கிளப்பிவிட்டிருக்கிறார். ஹிமாலயப் பிரதேசத்துப் பூகம்பங்களை அவர் இப்போது ஆராய்ந்துகொண்டிருக்கிறாராம். அவருடைய கணக்குப்படி சென்ற இருநூறு வருஷங்களில் வட இந்தியாவில் இருபத்தைந்து பயங்கர பூகம்பங்கள் தோன்றியிருக்கின்றன. வரும்

இருநூறு வருஷங்களிலும் இவை மாதிரியே இருபத்தைந்து பயங்கர பூகம்பங்கள் தோன்றப் போகின்றனவாம். 1934-இல் பிஹாரைக் குலுக்கிய பெரும் பூகம்பம் பத்து லட்சம் அணுகுண்டுகளுக்குச் சமமானதாம்; 1950-இல் அஸ்ஸாமை நிர்த்தூளி செய்த பூகம்பமோ ஒரு கோடி அணுகுண்டுகளுக்குச் சமமானதாம். இவ்வளவுதானா! பூ! பூகம்பங்களைவிட மிக அற்பமானதுதானா அணுகுண்டு! இப்படித் தோன்றும் நமக்கு. ஆனால், சில வித்தியாசங்கள் உண்டு. பூகம்பம், குறிப்பிட்ட பிரதேசத்தில்தான் நிகழும்; நினைத்த இடமெல்லாம் நிகழாது. அணுகுண்டோ, ஜனக் கும்பல் மிகுந்த நகரமாக, பெருங் கைத்தொழில்கள் நடக்கும் தொழிற்சாலைகளாகக் குறி பார்த்து வந்து விழும். இயற்கைக்கு மனிதனைப்போல் அவ்வளவு புத்திசாலித்தனம் ஏது? தவிர, பூகம்பம் வருகிறவரையில், மனிதன் பத்திரமாக உலகத்தைப் பாதுகாத்து வைத்திருக்கிறானே, இல்லையோ? அதைத்தான் நாம் கண்டோமா?

* * *

ஐரோப்பிய நாடுகள் சில சேர்ந்த வட அட்லாண்டிக் தற்காப்பு ஸ்தாபனம் என்ற ஒன்று அமெரிக்க முயற்சியால் அமைந்தது. இதற்கு 'நேட்டோ' என்று பெயர். இது கம்யூனிஸம் பரவாமல் தடுப்பதற்கே ஏற்பட்டதாம். ஆகவே, இது தங்களுக்கு விரோதமானது என்று பாவித்து, ருஷியர்கள் ஓயாமல் கூச்சல் போட்டுக்கொண் டிருக்கிறார்கள். இப்போது இதே மாதிரி தென் கிழக்கு ஆசியத் தற்காப்பு ஸ்தாபனம் என்ற ஒன்றை அமைக்க அமெரிக்கர் பிள்ளையார் சுழி போட்டிருக்கிறார்கள். இதற்கு 'ஸியாட்டோ' என்று பெயராம். இதற்கான பூர்வாங்கக் கூட்டம், செப்டம்பர் 6-ஆம் உ பிலிப்பைன் தீவில் பாகுயியோ என்ற இடத்தில் கூடப் போகிறதாம். ஐக்கிய அமெரிக்கா, பிரான்ஸ், பிரிட்டன், ஆஸ்திரேலியா, நியூஜீலந்து, தாய்லந்து, பிலிப்பைன், பாகிஸ்தான் இந்த நாடுகள் அந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளப் போகின்றனவாம். கொழும்பு மகாநாட்டில் கலந்துகொண்ட நாடுகளில் இந்தியா, பர்மா, இலங்கை, இந்தோனீஷியா ஆகிய நாலும் 'ஸியாட்டோ'வில் சேர மறுத்து விட்டன; பாகிஸ்தான் ஒன்று மட்டுமே கலந்துகொள்ள இசைந்திருக்கிறது. அமெரிக்காவின் இந்தப் புதிய முயற்சியால், வீணே ருஷியாவின் சலசலப்புத்தான் அதிகரிக்கும். அதோடு இது தனக்கே எதிரானது என்று சீனா வேறு எண்ணத் தொடங்கியிருக்கிறது. இந்தியா போன்ற ஆசிய நாடுகளை, எக்கட்சியிலும் சேராத நடுநிலைமை நாடுகள் என்று இது வரைக்கும் உலகம் மதித்து வருகிறது. அதைக் கெடுக்கக்கூடியது இந்த 'ஸியாட்டோ'. கொழும்பு மகாநாட்டு நாடுகளில் பாகிஸ்தான் மட்டும் இப்படி இதில் கலந்துகொள்ள இசைந்ததை, ஆசியாவின் துர்ப்பாக்கியம் என்றுதான் சொல்லவேண்டும்.

அடியோடு கொடுத்து ஒழிக்க முடியாத பொருள் அன்பு; அது திரும்பி வந்துவிடும்.

—ஸிட்னீ ஸ்கால்ஸ்கி

# ஐரோப்பாவில் தமிழ்

டாக்டர் வே. ராகவன்

**ஆங்கில 'ஸ்வதந்த்ரா' அருமையான ஸேவை ஒன்று செய்யத்தொடங்கியிருக்கிறது. பலமொழி இலக்கிய வளர்ச்சி பற்றியும் மூன்று மாதத்துக்கு ஒரு முறை 'ஸப்ளிமெண்ட்' என்ற விசேஷ அநுபந்தம் வெளியிட்டு வருகிறது. முதலில் தெலுங்கு இலக்கியம்பற்றியும் இப்போது தமிழ் இலக்கியம்பற்றியும் கதை, கட்டுரைகள் அடங்கிய அநுபந்தங்கள் வெளியிட்டுள்ளது. கன்னடம், மலையாளம் இவற்றைத் தொடர்ந்து வேறு பல மொழிகள்பற்றிய அநுபந்தங்களும் இனி வெளியிடும் என்று அறிகிறோம். 'ஸ்வதந்த்ரா'வின் இலக்கிய ஆசிரியர் மஞ்சேரி ஈச்வரன் மிக்க ரஸமான முறையில் இந்தப் பணியைப் புரிந்து வருகிறார். தமிழ் அநுபந்தத்திலிருந்து எடுத்துள்ள இந்தக் கட்டுரையை எழுதியிருப்பவர் சம்ஸ்கிருதத்தில் சிறந்த ஆராய்ச்சியாளர். சமீபத்தில் ஐரோப்பாவுக்கு விஜயம் செய்து வந்திருப்பவர்.**

முறைப்படுத்தித் தொகுத்து அட்டவணை தயாரிக்காமல் சம்ஸ்கிருத ஏட்டுச் சுவடிகள் பல ஐரோப்பாவில் ஏராளமாக இருந்தன. அவைகளை ஆராய்ந்து முறைப்படுத்தி வைக்கச் சமீபத்தில் ஐரோப்பாவுக்குப் போயிருந்தேன். அதுதான் முக்கியமான வேலை என்றாலும், அதோடு சம்பந்தப்பட்ட இன்னும் சில காரியங்களையும் கூடவே கவனிக்க நேர்ந்தது. இந்தியக் கலைகள், ஆர்க்கியாலஜி, தமிழ் ஆராய்ச்சி, பழைய சுவடிகள் இவை தவிரச் சங்கீதம், நடனம் இந்தக் கலைகளில் எனக்குள்ள தனிப்பற்றுதல் இந்த மாதிரி எல்லாம் சேர்ந்துகொண்டதே இதன் காரணம்.

இந்திய ஏட்டுச் சுவடிகள் எல்லாமே குறிப்பிட்ட ஒருவரின் மேற்பார்வையில் இருந்தன. சில சமயம் தென்னிந்தியச் சம்ஸ்கிருதச் சுவடிகளைக் கிரந்த எழுத்தில் எழுதி இருந்ததால், தவறி அவைகளையும் 'தமிழ்' என்று போட நேர்ந்திருக்கலாம். ஆகவே, தமிழ் ஏட்டுச் சுவடிகளையும் பரிசோதிக்க வேண்டியிருந்தது. சில சமயம் உள்ளூர் 'லைப்ரரி'களைச் சேர்ந்தவர்கள், அங்கேயுள்ள தமிழ் ஏட்டுச் சுவடிகளை முறையாகத் தொகுத்து அட்டவணை தயாரித்துத் தரச் சொன்னார்கள். அப்படியே செய்துகொடுத்தேன்.

சில இடங்களில் சம்ஸ்கிருதத் துறையில் ஈடுபட்டிருந்தவர்களே திராவிட மொழிபற்றிய ஆராய்ச்சி வேலையிலும் கவனம் செலுத்தி வந்தார்கள். ஆகவே, திராவிட இலக்கிய சம்பந்தமாக

காப்பிரைட்: ஸ்வதந்த்ரா (ஆங்கிலம்: 14-8-'54), சென்னை.

வும் அக்கறை செலுத்த வேண்டி யது அவசியமாயிற்று. எனக்கும் இயல்பாகவே அதில் ஈடுபாடு உண்டு. அறிவுக்குத்தான் பாகுபாடு உண்டா? சீரிய விஞ்ஞான உணர்ச்சியே முக்கியமாகும்.

திராவிட மொழி பற்றிய ஆராய்ச்சியில் முதல் முதலாக ஈடுபட்டவர்கள் ஐரோப்பியர் களே; தமிழுக்குக் கால்டுவெல் லும், கன்னடத்துக்குக் கிட்டலும், தெலுங்குக்குப் பிரவுனும், மலையா ளத்துக்குக் குண்டர்ட்டும் அரும் பாடுபட்டார்கள். மேல்நாட்டில் இன்னும் இந்தத் துறையில் ஆராய்ச்சி நடந்துதான் வரு கிறது; இருந்தாலும், தக்க முறை யில் இது வளர்ச்சி பெறவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். இவர்களைத் தவிர, இந்தியாவில் வெகு காலம் பொதுமக்களிடையே பிரசார வேலையில் ஈடுபட்டிருந்த பாதிரிகள், ஐரோப்பிய சர்வகலா சாலைகளில் அங்கங்கே இந்த மாதிரி துறையில் ஈடுபட்டவர்கள் இவர்களெல்லாம் பெரும்பாலும் இந்தோ-ஐரோப்பிய மொழி இலக் கணத்திலும், சம்ஸ்கிருத ஆராய்ச் சியிலுமே கவனம் செலுத்தி வந் தார்கள். ஆனல் இப்போது நிலைமை மாறிவிட்டது. அங் கங்கே சர்வகலாசாலைகளில் மறுபடியும் திராவிட மொழி ஆராய்ச்சியில் ஊக்கம் செலுத்தி வருகிறார்கள். இந்தோ-ஐரோப் பிய ஆராய்ச்சி நல்ல முறையில் தொடர்ந்து மிக விரிவாக நடந்து விட்டதால், இனிப் புதிய துறைக ளில் ஆராய்ச்சி செய்தால்தான் பலன் ஏற்படும்.

லண்டனிலுள்ள கீழ்நாட்டு-ஆப்பிரிக்க மொழி ஆராய்ச்சிக் கல்லூரியில் தமிழையும் பிற திராவிட இன மொழிகளையும் பயில்கிறார்கள். இங்கே உள்ள இந்திய மொழி ஆராய்ச்சி இலாகா விலும், பொதுப்பட மொழிகளை யெல்லாம்பற்றி ஆராயும் இலாகா விலும் தமிழைப்பற்றியும் அக்கறை செலுத்தி வருகிறார்கள். பொது இலாகாவைக் கவனித்து வருபவர் புரொபஸர் ஃபர்த் என்ற பிரபல மொழி ஆராய்ச்சியாளர். இவர் மலையாளம், கன்னடம் இரண்டி லும் ஓரளவு ஆராய்ச்சி செய்திருக் கிறார். "இந்திய மொழிகள் எல்லாவற்றிலும் எழுத்தின் சரி யான உச்சரிப்பு இன்னபடி இருக் கும் என்று, நம் கைவசம் விஞ் ஞான முறையில் அமைந்த சாத னங்களைக் கொண்டு தெரிந்து கொள்ள வேண்டும். இதுதான் இப்போது மிகவும் அவசியம்" என் கிறார் ஃபர்த். அவர் இலாகாவில் மிஸஸ் விட்லீ என்ற ஓர் அம்மாள் இருக்கிறாள். இவள் தென்னிந்தி யாவில் இருந்தவள்; மலையாளம், கன்னடம் இரண்டைப்பற்றியும் புஸ்தகங்கள் எழுதியிருக்கிறாள். அந்த அந்த மொழியைப் பேசுபவர் களில் ஒருவருக்கு ஸ்காலர்ஷிப் அளித்து எழுத்தொலி சம்பந்த மான ஆராய்ச்சிக்கு அவரைப் பயன் படுத்திக்கொள்ளலாம் என்பது ஃபர்த்தின் திட்டம். தமிழைப்பற் றித் தாம் முந்தி எழுதியதைச் சற்றே திருத்தி எழுத வேண்டும் என்று அவருக்குக் கொஞ்சநாளாக விருப்பம். ஆகவே, சென்னைச் சர்வ கலாசாலையில் தேறித் தமிழில் எம். ஏ. பட்டம் பெற்ற ஒரு வரைத் தமக்கு உதவியாக அமர்த் திக்கொண்டிருக்கிறார். இந்திய இலாகாவில் தமிழுக்கென்று ஒரு பிரிவு உண்டு; அதில் இரண்டு பேர் இருக்கிறார்கள். காப்டன் பதி என்

பவர் இந்த இலாகாவின் முக்கிய அதிகாரி. சென்னைச் சர்க்காரின் கல்வி இலாகாவில் இருந்த மிஸ்டர் தாம்ஸன் என்பவர் கொஞ்ச காலத்துக்கு முன்னால் இங்கே தமிழ் ஆசிரியராக இருந்தார். மிஸ்டர் ஜான் மார் என்பவரை லண்டன் சர்வகலாசாலை, தமிழ் ஆராய்ச்சிக்காக ஸ்காலர்ஷிப் கொடுத்து நம் நாட்டுக்கு அனுப்பியிருக்கிறது. தமிழ் இலக்கிய சம்பந்தமாகக் கட்டுரை ஒன்று எழுதுவதற்கு வேண்டிய தகவல் எல்லாம் இவர் சேகரித்துவருகிறார். ஆகவே, இவர் இங்கிலாந்துக்குத் திரும்பிய பின் மேலே சொன்ன இந்திய மொழி இலாகா பின்னும் ஊக்கத்தோடும் வலிவோடும் வேலை செய்யும் என்று சொல்லலாம். லண்டனிலுள்ள இந்தக் கல்லூரியின் தமிழ்ப் பிரிவிலும், பாரிஸிலுள்ள மொழி ஆராய்ச்சிக் கல்லூரியிலும் தான் தமிழ் மொழி கற்றுக்கொடுத்துத் தமிழ் இலக்கியத்தையும் பாடமாகப் போதிக்கிறார்கள். ஆயினும், திராவிட மொழியிலக்கண சம்பந்தமான ஆராய்ச்சி பின்னும் சிறப்பாக நடப்பது, ஆக்ஸ்போர்டு சர்வகலாசாலையிலும் ஐரோப்பாவில் போடன் என்ற இடத்திலுந்தான். போடனிலுள்ள சம்ஸ்கிருத புரொபஸர் இப்போது ஐரோப்பாவில் இருக்கும் கீழ்நாட்டு மொழி ஆராய்ச்சியாளர்களுக்குள் முக்கியமானவர். ஆக்ஸ்போர்டு சர்வகலாசாலையைச் சேர்ந்த புரொபஸர் டி. பர்ரோ என்பவர், திராவிட மொழிகள் சம்பந்தமாக லண்டன் கீழ்நாட்டு ஆப்பிரிக்கக் கல்லூரி வெளியீடுகளில் தொடர்ந்து பல கட்டுரைகள் எழுதியிருக்கிறார். சம்ஸ்கிருதத்தில் வழங்கும் சில சொற்களைத் தொகுத்து, அவை திராவிட மொழியிலிருந்து வந்தவை என்பதை ஒரு கட்டுரையில் எடுத்துக் காட்டியிருக்கிறார். எஃப். ஓ. ஷார்டர் என்பவர் முதல் முதலாகத் திராவிட மொழிகளுக்கும் யூரல் இன மொழிகளுக்கும் சம்பந்தம் உண்டு என்று ஆராய்ந்து கண்டறிந்தவர். அவரது ஆராய்ச்சியைத் தொடர்ந்து நடத்தி வருகிறார் புரொபஸர் பர்ரோ. திராவிட மொழிகளில், உடலையும் அதிலுள்ள உறுப்புக்களையும் குறிக்கும் சொற்கள், யூரல் மொழி இனத்தைச் சேர்ந்தவை என்பதை இவர் நிரூபித்திருக்கிறார். ஆனால் இதைவிட இவர் செய்துள்ள இன்னும் முக்கியமான காரியம், திராவிட மொழிகளில் பொதுவாக அமைந்த சொற்களை ஒப்பிட்டுத் தொகுத்து வைத்திருப்பதுதான். அமெரிக்க அறிஞரான எமனு என்பவரோடு சேர்ந்து இந்த வேலையில் இவர் ஈடுபட்டிருக்கிறார். சென்னைச் சர்வகலாசாலைத் திராவிட மொழி இலாகா இது சம்பந்தமாகத் தயாரித்துத் தொகுத்திருப்பதை விடப் பரந்த விதத்தில் இதை இவர் செய்திருக்கிறார்; அதாவது, இலக்கியமே இல்லாத பிற திராவிட இன மொழிகளிலுள்ள சொற்களையும் ஒப்பிட்டுத் தொகுத்திருக்கிறார்.

ஹாலந்தில் உள்ள லீடன் சர்வகலாசாலையில் சம்ஸ்கிருதப் புரொபஸராக இருப்பவர் டாக்டர் குயிபர். இவர் சம்ஸ்கிருதத்தில் உள்ள முண்டா சொற்களைப் பற்றி ஒரு சிறு புத்தகம் எழுதியிருக்கிறார். இவரே திராவிட மொழிகளைப் பற்றியும் ஆராய்ந்து வருகிறார். இவர் ஒரு தமிழ் மாணவரைக் கூடவே வைத்துக்கொண்டு

தமிழ்மொழி பயின்று வருகிறார்; தமிழ் எழுத்து உச்சரிப்புச் சம்பந்தமாக ஆராயவும் இந்த மாணவர் இவருக்கு உதவி வருகிறார். பல தமிழ்ப்பாட புத்தகங்களிலிருந்தும், கவிதைகளிலிருந்தும் என்னைச் சிற்சில பகுதிகளைப் படிக்கச் சொல்லி 'டேப்-ரிகார்டிங்' செய்துகொண்டார்.

டென்மார்க்கின் தலைநகரான கோபன்ஹேகனிலே சம்ஸ்கிருத புரொபஸராக இருப்பவர் டாக்டர் ஹெண்ட்ரிக்சன். இவர் பாளி பாஷை சம்பந்தமாகச் செய்திருக்கும் ஆராய்ச்சியில் ஒரு முக்கியமான தகவலை வெளியிட்டிருக்கிறார். சிங்கள மொழி மூலம் தமிழிலிருந்து சிற்சில வாக்கிய அமைப்புக்களை, பாளி பாஷை ஏற்றுக்கொண்டிருக்கிறது என்பதுதான் அது.

ஸ்வீடனிலுள்ள உப்பஸாலா என்ற இடத்தில் எம். சைமன்ஸன் என்ற வாலிபர் சம்ஸ்கிருத ஆராய்ச்சியில் ஈடுபட்டவர். திபேத் மொழி சம்பந்தமாக இவர் ஆராய்ந்து வருகிறார். அதோடு திராவிட எழுத்து ஒலி சம்பந்தமான ஆராய்ச்சியிலும் அக்கறை கொண்டிருக்கிறார்.

ஆஸ்திரியாவிலும் ஹங்கேரியிலுங்கூடத் திராவிட மொழி ஆராய்ச்சியில் அக்கறை செலுத்தி வருகிறார்கள். வியன்னாவில் இந்திய வைஸ்-கான்ஸலாக இருப்பவர் டாக்டர் கே. வி. ராமஸ்வாமி. நான் அங்கே போயிருந்தபோது இவர் திராவிட மொழி சம்பந்தமான கட்டுரை ஒன்றை எழுதிக்கொண்டிருந்தார். அதை வியன்னா சர்வகலாசாலையார் பார்வையிட அனுப்பப் போவதாகத் தெரிந்தது. ஹங்கேரிக்கு நான் போகாவிட்டாலும் திராவிட மொழி சம்பந்தமாக அங்கும் ஆராய்ச்சி நடக்கிறதென்று தகவல் தெரிந்துகொண்டேன்; ஹங்கேரிய மொழிக்கும் திராவிடத்துக்கும் தொடர்பு உண்டு என்பதைச் சிலர் அங்கே ஆராய்ந்து கண்டிருக்கிறார்கள்.

ஜெர்மனியில் கிறிஸ்தவப்பாதிரிமார்கள் தமிழைப் பொறுத்தவரை ஓரளவு அக்கறை செலுத்தி வருகிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். தமிழ் இலக்கண சம்பந்தமான ஒரு நூலைப் பாதிரி ஒருவர் எழுதியிருப்பதாகத் தெரிந்தது. பெர்லினில் இருக்கும்போது லீப்ஸிக் நகரத்தில் பாதிரிகளிடம் தமிழ் நூல்கள் பல இருப்பதாகச் சிலபேர் சொன்னார்கள். ஆனால் போக்குவரத்துச் சம்பந்தமான சிக்கல்களும் தடைகளும் இருந்ததால் கிழக்கு ஜெர்மனிக்குப் போக முடியவில்லை.

லண்டனுக்கு அடுத்தபடியாகப் பாரிஸில்தான் தமிழை உண்மையாகவே அக்கறையோடு பயின்று வருகிறார்கள். இதற்குக் காரணம் புதுச்சேரிக்கும் பிரெஞ்சுக்காரர்களுக்கும் அரசியல் தொடர்பு இருப்பதே. அப்படி இந்தத் தொடர்பு நீடிக்கா விட்டாலும் தமிழைப்பற்றிய அக்கறை குன்றாது என்றுதான் தோன்றுகிறது. 1821-இலேயே பாரிஸில் கீழ் நாட்டு மொழிக் கல்லூரியை நிறுவிவிட்டார்கள். அது இன்னும் நடந்து வருகிறது. இங்கேதான் ஜூல்ஸ் பிளாக் என்ற பிரபல மொழி ஆராய்ச்சியாளர் இருந்தார். சமீபத்தில்தான் அவர் காலமானார். அவர் திராவிட மொழிகளைப்பற்றி எழுதிய நூல் ஒன்றைப் புனாவிலுள்ள டெக்கான்

ஆராய்ச்சிக் கழகத்தார் மொழி பெயர்த்து வெளியிட்டிருக்கிறார்கள். பல ஆண்டுகளுக்குமுன் ஜூலியன் வின்ஸோன் என்ற அறிஞரும் தமிழுக்காக அரும்பாடு பட்டிருக்கிறார். இவர், தமிழ் ஆராய்ச்சி தொடர்ந்து பாரிஸில் நடப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் வேறு செய்துவிட்டுப் போனார். இப்போது இங்கே பி. மேய்ல் என்பவர் தமிழ் கற்றுத் தருகிறார். இவர் கொஞ்ச காலத்துக்கு முன் இந்தியாவில் இருந்தவர்தான். இவருக்குத் துணையாக ஒரு தமிழரும் இந்த வேலையில் ஈடுபட்டிருக்கிறார். தமிழ் சம்பந்தமாக முகவுரையாக, பி. மேய்ல் ஒரு நூல் எழுதியிருக்கிறார். அதோடு, தமிழ் இலக்கியங்களில் குறிப்பிடும் யவனர் என்பவர்களைப்பற்றியும் நன்கு ஆராய்ந்திருக்கிறார். ஜூல்ஸ் பிளாக்குக்குப் பிறகு இங்கே சம்ஸ்கிருத புரொபஸராக இருப்பவர் டாக்டர் ஜே. ஃபிலியோஜத். பொதுவாகத் திராவிட மொழியிலக்கணத்தைப் பற்றி இவருக்கு அக்கறை உண்டு. ஆயினும் நான் சந்தித்த இந்திய மொழி ஆராய்ச்சியாளர்களுக்குள் இவர்தான் தமிழ் இலக்கியத்திலும் கலாசாரத் தொடர்பிலும் விசேஷ சிரத்தை செலுத்தி வருகிறார். இவர் தென்னிந்தியாவிலும் இந்தோ-சீனாவிலும் சுற்றிப் பார்த்திருக்கிறார். பழங்காலத்தில் இந்தோ-சீனாவுக்கும் இந்தியாவுக்கும் தொடர்பு ஏற்பட்டு அங்கே இந்திய நாகரிகம் ஓங்கியிருந்ததைத் தம் நூலில் இவர் குறிப்பிடும் போது, "தென்னிந்திய மதங்களின் வரலாற்றையும் ஆகமங்களையும்பற்றித் தெரிந்திருக்க வேண்டும்" என்ற உண்மையை உணர்ந்து எழுதியிருக்கிறார். இதைத் தவிரப் பழந்தமிழ் இலக்கிய சம்பந்தமாகப் பின்னும் ஊக்கம் ஏற்பட வேண்டும் என்று இவர் முயன்று வருகிறார். ஏற்கனவே ஆண்டாள் பாசுரங்களைப்பற்றிப் பிரசங்கங்கள் செய்துவருகிறார். திருக்குறள், திருவாய்மொழி இந்த இரண்டையும் பிரெஞ்சு பாஷையில் மொழிபெயர்த்து வருகிறார்.

மேலும் மேலும் சீரிய முறையில் திராவிட மொழிகளைப்பற்றியும், தமிழ் இலக்கியம், சரித்திரம் சம்பந்தமாகவும் ஆராயப் போதுமான வசதிகள் ஐரோப்பாவில் இன்னும் ஏற்படவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். இந்த விஷயத்தில் தென்னிந்திய அறிஞர்கள் ஒன்று செய்தால் ஐரோப்பிய ஆராய்ச்சிக்காரருக்கு மிக்க உதவியாக இருக்கும். அந்த அந்தப் பிரதேசத்தில் வழங்கும் பேச்சு வழக்கைக் கவனித்து, கிராமபோனில் 'ரிகார்டு' செய்யவேண்டும்; அதோடு நம் பழைய இலக்கண நூல்களை ஆங்கிலத்தில் தக்க குறிப்புகளுடன் மொழிபெயர்த்து உதவ வேண்டும்; நம் இலக்கிய வரலாற்றில் சிறந்தோங்கி விளங்கும் மற்றப் பழைய நூல்களையும் தொடர்ந்து அதேமாதிரி மொழிபெயர்த்து வரவேண்டும்.

### கை விளக்கு

என் பாதைக்கு வழி காட்டும் ஒரே ஒரு கை விளக்குத் தான் என்னிடம் இருக்கிறது. அது என் அநுபவமே.

—பாட்ரிக் ஹென்ரி



# பரசுராமர்

"குசிக வம்சத்தில் பிறந்த குசாம்புஜ மன்னனுக்குக் காதி என்று ஒரு மகன் இருந்தான். அவனுடைய மகள் சத்தியவதி. 'இவளை எனக்கு மணம் செய்துகொடு' என்று பிருகு வம்சத்தில் பிறந்த ரிசிக முனிவர் கேட்டார். தன் பெண்ணுக்கு அவர் ஏற்ற வரன் அல்ல என்று எண்ணினான் காதி. ஆனால் நேரில் மறுத்துச் சொல்ல அவனுக்குத் துணிவில்லை. அதனால் முனிவரைப் பார்த்து, 'ஸ்வாமி, எங்கள் குசிக கோத்திரத்தில் பெண் கிடைப்பதே சிரமம். ஆகையால், ஒன்று செய்யுங்கள்: ஒரு காது மட்டும் கறுப்பாகவும் மற்ற உடல் பாகமெல்லாம் சந்திரனைப்போல் வெளுப்பாகவும் அமைந்த ஆயிரம் குதிரைகளை என் மகளுக்குக் கொடுத்தால் அவளை உங்களுக்கு மணம் செய்து கொடுக்கிறேன்' என்றான்.

"இதைக் கேட்டதும் ரிசிகர் வருண பகவானிடம் போனார்; வருணனைக் கேட்டு, காதி சொன்னபடியே ஆயிரம் குதிரைகளை வாங்கி வந்தார். அவைகளைக் காதிக்குக் கொடுத்தார். அவனும் வேறு வழி இல்லாமல் தன் மகளை முனிவருக்கு மணம் செய்து கொடுத்தான்.

"ஒரு நாள் ரிசிகரிடம் அவருடைய மனைவியும் மாமியாரும் தங்களுக்குக் குழந்தை வேண்டும் என்று வேண்டிக் கொண்டார்கள். அப்படியே அவரும் இரண்டு பேருக்கும் தனித் தனியாக அன்னம் தயார் செய்து, வேறு வேறு மந்திரங்களைச் சொல்லி மந்திரித்து வைத்தார். பிறகு ஸ்நானம் செய்யப் போனார்.

"அப்போது சத்தியவதியின் தாய், 'மனைவியிடம் அதிக அன்போடு முனிவர் விசேஷமாக மந்திரம் ஜபித்து அன்னம் தயாரித்திருப்பார்' என்று எண்ணினாள். அதனால் பெண்ணிடம், 'அந்த அன்னத்தை எனக்குக் கொடேன்' என்று கேட்டாள். அவளும்



**கிருஷ்ண பகவானின் லீலைகளை மட்டுமல்ல; இன்னும் எத்தனையோ அரிய கதைகளையும் சொல்வது பாகவதம். அதில் ஒரு பகுதி இது.**

தாயின்மேல் இருந்த அன்பினால் அதைக் கொடுத்துவிட்டாள். இப்படி இரண்டு பேரும் அன்னத்தை மாற்றி உண்டுவிட்டார்கள்.

“முனிவருக்கு இது தெரிந்ததும் மனைவியிடம், ‘அடடா! இப்படிச் செய்துவிட்டாயே! உனக்கு மிகவும் கொடிய குணமுள்ள பிள்ளை பிறப்பான்; உன் தாய்க்குப் பிரம்மஞானியான சிறந்த மகன் பிறப்பானே!’ என்றார்.

“சத்தியவதி வருத்தமுற்றாள்; அவரை வணங்கி, எனக்கு அந்த மாதிரி மகன் வேண்டாமே! நல்ல மகனைப் பிறக்கும்படி ஆசீர்வதித்து அருள்புரியுங்கள்’ என்று வேண்டினாள். முனிவரும் மனம் இரங்கினார்; ‘அப்படியே ஆகட்டும். இருந்தாலும் உனக்குப் பிறக்கும் பிள்ளையின் மகன்தான் சிறந்த குணம் உள்ளவனாக இருப்பான்’ என்றார்.

“சத்தியவதிக்கு ஜமதக்கினி மகனாகப் பிறந்தார். அவளுடைய தாயின் வயிற்றில் விசுவாமித்திரர் பிறந்தார். குசிக வம்சத்தில் பிறந்த சத்தியவதி பிறகு கௌசிகை என்ற புண்ணிய நதியாக மாறிவிட்டாள்.

“ஜமதக்கினி ரேணு முனிவரின் மகளான ரேணுகையை மணந்துகொண்டார். இவர்களுக்கு வசுமான் முதலிய அநேகம் மக்கள் பிறந்தார்கள். கடைசி மகன் பெயர் ராமர். பகவான் வாசுதேவருடைய அம்சம் என்று இவரைப் புகழ்வது உண்டு. கார்த்தவீரியனின் வம்சத்தை இவர்தான் அழித்தார். இருபத்தொரு தடவை பூமியைச் சுற்றி, உலகத்தில் தீய வழியில் ஈடுபட்ட க்ஷத்திரியர்களை இராதபடி செய்தார்.”

இப்படிச் சுகமுனிவர் சொல்லி வரும்போது பரீட்சித்து மன்னன், “இந்த ராமர் எதற்காக இப்படி க்ஷத்திரிய வம்சத்தை அழித்தார்? அதைச் சொல்லவேண்டும்” என்று கேட்டுக்கொண்டான். சுக முனிவர் சொல்லலானார்:

“க்ஷத்திரியர்களில் சிறந்தவன் கார்த்தவீரியன். அவன் தத்தாத்திரேயரை வழிபட்டு, யாரும் தன்னை வெல்ல முடியாதபடி

ஆயிரம் கைகளைப் பெற்றான்; அதோடு எல்லா விதமான சித்திகளும் கிடைத்தன. தன் விருப்பப்படி இன்பத்தை அநுபவித்து வந்தான். ஒரு சமயம் அவன் தன் கழுத்தில் வைஜயந்தி என்ற மாலையை அணிந்துகொண்டு பல பெண்மணிகளுடன் நர்மதை நதியில் விளையாடிக்கொண்டிருந்தான். அப்போது தன் ஆயிரம் கைகளாலும் நீரோட்டத்தைத் தடுத்தான். இதனால் நீர் கரைப்பக்கம் பாய்ந்தது. அங்கே ராவணனுடைய ஆசிரமம் இருந்தது. அது நீரில் மூழ்கிவிட்டது. ராவணனுக்கு ஒரே கோபம். அவன் கார்த்தவீரியனோடு சண்டையிட வந்தான். அப்போது கார்த்தவீரியன் விளையாட்டாகவே ராவணனைக் குரங்கு போல் கட்டி மாகிஷ்மதி நகருக்குக் கொண்டுபோய்ச் சிறையில் அடைத்தான். பிறகு ராவணனுடைய தந்தையான புலஸ்திய முனிவர் கேட்டுக்கொள்ளவே அவனைக் கார்த்தவீரியன் விடுதலை செய்தான்.

"ஒரு நாள் கார்த்தவீரியன் காட்டிலே வேட்டையாடிக்கொண்டே ஜமதக்கினியின் ஆசிரமத்துக்கு வந்தான். முனிவர் காமதேநுவின் உதவியால், கார்த்தவீரியனுக்கும் அவனுடைய படைவீரர்களுக்கும் விருந்தளிக்கப் பிரமாதமான ஏற்பாடுகள் செய்தார். ஆனால் கார்த்தவீரியன், முனிவருக்குத் தன்னைவிடச் செல்வம் மிகுதியாக இருப்பதைக் கண்டு அவர்மேல் பொறாமை கொண்டான். ஆகவே, அவருடைய உபசாரத்தை ஏற்க மறுத்தான். காமதேநுவை அழைத்துப் போக விரும்பினான். அதை இழுத்து வரும்படி ஆட்களை ஏவினான். அவர்களும் பலாத்காரமாக அதை இழுத்துக்கொண்டு மாகிஷ்மதிக்குப் போனார்கள்.

"அப்போது ஜமதக்கினியின் கடைசி மகனான ராமர் ஆசிரமத்தில் இல்லை. திரும்பி வந்ததும் நடந்தது தெரிந்தது. கோபம் தாங்கவில்லை. பயங்கரமான கோடரி, வில், அம்பறாத் தூணி இவைகளோடு மாகிஷ்மதிக்குப் போனார். அவரைக் கண்டதும் எல்லாரும் பயந்துவிட்டார்கள். அவர் வருவது தெரிந்ததும் கார்த்தவீரியன் அவரை எதிர்க்கத் தன் படைகளை அனுப்பினான். ராமர் சிரமம் இல்லாமல் அவைகளை அழித்துவிட்டார். பிறகு கார்த்தவீரியன் தானே வந்து போரிடத் தொடங்கினான். ராமர் அவனுடைய கைகளைத் தம் கோடரியால் முதலில் வெட்டினார். பிறகு அவன் தலையையும் வெட்டிக் கீழே தள்ளினார். தங்கள் தகப்பன் இறந்ததைப் பார்த்ததும் கார்த்தவீரியனுடைய நூறு பிள்ளைகளும் பயந்து அங்கிருந்து ஓடிவிட்டார்கள்.

"பிறகு ராமர் காமதேநுவைத் தம்மோடு திரும்ப அழைத்து வந்தார்; தந்தையின் எதிரே நிறுத்தினார். அவரிடமும் சகோதரர்களிடமும் தாம் கார்த்தவீரியனைக் கொன்றுவிட்டதாகச் சொன்னார். அதற்கு ஜமதக்கினி முனிவர், 'ராமா, நீ செய்தது தவறான காரியம். அரசன் என்றால் எல்லாத் தேவர்களின் உருவுமே ஒன்றாக அமைந்தவன். அவனைக் கொன்றது பெரும்பாவமாகும். நாமோ முனிவர்கள்; நமக்குப் பொறுமைதான் முக்கியம். உலகத்தில் பொறுமை

யால்தான் செல்வத்தை அடைய முடியும். பிரம்மாகூட அதனால் தான் உயர்ந்த நிலையை அடைந்தார். முடியரசனைக் கொன்றது சரியல்ல. இந்தப் பாவத்தைப் போக்க உடனே பகவானைத் தியானித்துக்கொண்டு தீர்த்தயாத்திரை போய் விட்டு வா' என்றார்.

"அப்படியே ராமரும் ஒரு வருஷ காலம் தீர்த்த யாத்திரை போய்த் திரும்பிவந்தார். ஒரு நாள் அவருடைய தாய் ரேணுகை பூஜைக்கு ஜலம் கொண்டுவரக் குடத்தை எடுத்துக்கொண்டு கங்கைக்குச் சென்றாள். அங்கே சித்திராங்கன் என்ற கந்தர்வன் தேவமாதர்களுடன் நீரில் விளையாடிக்கொண்டிருந்தான். ரேணுகை அவனுடைய அழகில் சற்றே ஈடுபட்டு மெய்மறந்து அவனைப் பார்த்தபடி இருந்தாள். ஹோமவேளை தவறியதை அவள் கவனிக்கவில்லை. கடைசியில் சுய நினைவு வந்ததும், 'முனிவர் சபித்துவிடுவாரே!' என்று அச்சத்தோடு வேகமாய்க் குடத்தை எடுத்துவந்து அவர் எதிரில் வைத்தாள்.

"அவளைப் பார்த்ததுமே அவள் செய்த தவறு முனிவருக்குத் தெரிந்துவிட்டது. உடனே கோபம் பொங்கத் தம் பிள்ளைகளைக் கூப்பிட்டார். அவளைக் கொல்லும்படி உத்தரவிட்டார். ராமரைத் தவிர மற்றவர்களுக்குத் தங்கள் தாயைக் கொல்ல மனம் வரவில்லை. அதனால் அவர்கள் முடியாது என்று சொல்லி விட்டார்கள். ஆனால் ராமருக்குத் தம் தந்தையின் பெருமை தெரியும். அவரை அழைத்து முனிவர், 'என் உத்தரவை மீறிய இவர்களையும் உன் தாயோடு சேர்த்துக் கொல்' என்றார்.

ராமர் அப்படியே அவர்களைக் கொன்றுவிட்டார். முனிவர் மகிழ்ச்சியுற்று, 'உனக்கு என்ன வரம் வேண்டுமோ, கேள்' என்றார். உடனே ராமர், 'இவர்கள் எல்லாருமே உயிர் பெற்று எழுந்திருக்க வேண்டும். நான் கொன்றதாகக்கூட இவர்களுக்கு நினைவு இருக்கக்கூடாது' என்று கேட்டுக்கொண்டார். முனிவரும், 'அப்படியே ஆகட்டும்' என்றார். எல்லாருமே முன்போல் உயிர் பெற்று எழுந்தார்கள்.

"கார்த்தவீரியனின் மக்கள் ராமரிடம் பகைகொண்டு பழி வாங்கச் சந்தர்ப்பம் பார்த்திருந்தார்கள். ஒரு நாள் ராமர் தம் தமையன்மாரோடு காட்டுக்குப் போயிருந்தார். அப்போது கார்த்தவீரியனின் மக்கள் ஜமதக்கினியின் ஆசிரமத்தில் நுழைந்தார்கள். அவர் அக்கினி ஹோத்திர சாலையில் பகவானைத் தியானித்தபடி இருந்தார். அவர்கள் அவரைக் கொன்று அவருடைய தலையையும் அறுத்துக் கொண்டு போய்விட்டார்கள். ரேணுகை எவ்வளவு சொல்லியும் அவர்கள் கேட்கவில்லை. அவள் வருத்தம் தாங்காமல், 'ராமா, அப்பாடா வா!" என்று உரக்கக் கூவினாள். தூரத்தில் இருந்த ராமருக்கு அது கேட்டது. அவர் ஆசிரமத்தை நோக்கி ஓடி வந்தார். தந்தை இறந்து கிடக்கும் அலங்கோலத்தைக் கண்டார். தந்தையின் உடலைத் தமையன்மாரிடம் ஒப்பித்துவிட்டுக் கோடரியைக் கையில் ஏந்தினார். தமக்கு வந்த கோபத்தில் க்ஷத்திரியர்களையே

அழித்துவிடப் போவதாக விரதம் பூண்டார்.

"மாகிஷ்மதிக்கு விரைந்து போய்க் கார்த்தவீரியனுடைய மக்களைக் கொன்று மலைபோல் அவர்கள் தலையைக் குவித்தார். அப்போது அவர் பெருக்கிய ரத்தம் ஆறாக ஓடியது. பிறகு உலகத்தை இருபத்தொரு தடவை சுற்றி க்ஷத்திரியர்களைக் கொல்லலானார்.

"கடைசியில் தம் தந்தையின் தலையை எடுத்து உடலோடு சேர்த்துப் பழையபடி உயிர் பெற்று எழுந்திருக்கும்படி பகவான் நாராயணரை வேண்டினார்; பல யாகங்கள் செய்தார். அவை பூர்த்தியானதும் ஜமதக்கினி உயிர் பெற்று எழுந்தார். மனோரூபத்தோடு நட்சத்திர மண்டலத்தில் சேர்ந்து ஒளிரலானார். ஸப்த ரிஷிகளில் ஒருவராக விளங்கினார்.

"கோடரியை ஆயுதமாகக் கொண்டதால் பரசுராமர் என்று பெயர் பெற்றவரான ராமரும் அடுத்த மனு அந்தரத்தில் அதே இடம் பெற்று வேதத்தை எங்கும் பரவச்செய்வார். இப்போது அவர் எல்லாரும் புகழும்படி மன அமைதியோடு மகேந்திர மலையில் இருக்கிறார்" என்று சுக முனிவர் சொல்லி முடித்தார்.

## பெண்கள் உயர வழி

பெண்களை (ஏன், ஆண்களையும் கூடத்தான்) உயர்த்த வழி, ஆணுக்கும் பெண்ணுக்கும் காதல் இல்லாமலே நட்பு உண்டாகச் செய்வதுதான். அதுவும் கலியாணமான ஆண்களுக்கும் கலியாணமான பெண்களுக்கும் இந்த நட்பு ஏற்பட்டால், இன்னும் மேலாகும். —ஃப்ளாரன்ஸ் நைட்டிங்கேல்

## மரியாதையும் தந்திரமும்

ஒரு ஹோட்டலில் புதிதாக வேலைக்கு வந்த ஆளுக்கு, அவன் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று, பெரிய மேஸ்திரி போதனை செய்தான்.

"இங்கே மரியாதையும், தந்திரமுந்தான் மிக முக்கியம். என்ன, தெரிந்ததா?"

"மரியாதை என்றால், தெரிகிறது. தந்திரம் என்கிறீர்களே, அதென்ன?"

"இதோ பார்! ஓர் உதாரணம் சொல்லுகிறேன்: நான் ஒரு நாள் ஒரு ஸ்நான அறையை என்னவோ ஆளில்லையென்று எண்ணித் திறந்துவிட்டேன். உள்ளே ஓர் அம்மாள் குளித்துக்கொண்டிருந்தாள். டக்கென்று கதவை மூடியபடி, 'மன்னிக்க வேண்டும், ஸார்' என்றேன். 'மன்னிக்க வேண்டும்' என்றது மரியாதை; ஆனால், 'ஸார்' என்றது தந்திரம்."

—'பேஜெண்ட்'

# துப்பறியும் நாய்கள்

*பி. ஜி. ஸுர்வே*

**வெளி நாடுகளிலும் இந்தியாவில் பல நகரங்களிலும் இந்த நாய்கள் அற்புதமான செயல்களைச் சாதித்திருக்கின்றன. சமீபத்தில் சென்னையிலும் திருடர்களைக் கண்டுபிடிக்க இவை உதவியிருக்கின்றன.**

கடந்த ஆண்டில் என். வி. காட்கீல் பிரயாணம் செய்த போது அவருடைய பொருள்கள் திருட்டுப் போயின. ஓடின திருடர்களைக் கண்டு பிடிப்பதற்குப் பம்பாய்ப் போலீசார் சில நாய்களைப் பயன்படுத்தினார்கள். இந்த நாய்கள் திருடர்களை எப்படிக் கண்டு பிடிக்கின்றன என்பது ஆச்சரியமான விஷயம்.

'பிளட் ஹவுண்டு' என்ற இனத்தைச் சேர்ந்த இந்த நாய்களைத் துப்பறியும் இலாகாக்களில் வளர்க்கிறார்கள். வெளி நாடுகளில் இந்த நாய்கள் எத்தனையோ அற்புதமான வேலைகளைச் செய்திருக்கின்றன.

சில வருஷங்களுக்கு முன்பு அமெரிக்காவில் ஸிங்ஸிங் சிறையிலிருந்து இரண்டு கைதிகள் ஒரு நாள் நள்ளிரவில் வாயிற் காவலனைக் கொன்று ஓடிவிட்டார்கள். சிறைக்கு அருகில் இருந்த ஹட்ஸன் ஆற்றுக்கு அக்கரையில் அவர்கள் புகலடைந்தார்கள். போலீசாருக்கு லஞ்சம் கொடுத்து அவர்கள் தப்பித்துக்கொண்டும் இருப்பார்கள். ஆனால் துப்பறியும் இலாகாவில் இருந்த போலீசார் அவர்களைக் கண்டுபிடித்துவிட்டார்கள்.

எந்தச் செம்படவனுடைய படகில் அவர்கள் ஆற்றைக் கடந்தார்களோ அவனுடைய குடிசையருகில் இரண்டு துப்பறியும் நாய்கள் ஒரு நாள் காலையில் மோப்பம் பிடித்துக்கொண்டு வந்து நின்றன. அவற்றோடு நியூ யார்க் ஸி. ஐ. டி. போலீசாரும் இருந்தார்கள். அந்த நாய்கள் அவர்களை மேலே இழுத்துக்கொண்டு போயின.

அந்தக் கைதிகளுடைய துணிகளை முதலில் அந்த நாய்களுக்கு மோப்பம் பிடிக்கக் கொடுத்தார்கள். மோப்பம் பிடித்துக் குற்றவாளியைக் கண்டு பிடிப்பதில் இந்த நாய்களுக்கு இருக்கும் சக்தி இணையற்றது. அந்த மோப்பத்தைக் கொண்டுதான் இவை ஆற்றுக்கு வந்து அதைக் கடந்து, மண்ணை மோந்துகொண்டே ஒவ்வோர் அடியாகச் சென்று ஓர் உயர்ந்த மேட்டின் அருகில் வந்தன. குற்றவாளிகள் அந்த மேட்டின்மேல் இருப்பதை நாய்கள் காலைத் தூக்கி எடுத்துக் காண்பித்தன.

போலீசார் அந்த மேட்டின் மேல் ஏறியதும் அதற்குள் ஒரு குகை தென்பட்டது. அதற்குள்ளேதான் கைதிகள் பதுங்கி

காப்பிரைட்: மனோஹர் (மராட்டி: ஆகஸ்ட் '54), கிர்லோஸ்கர்வாடி, ஸாதாரா.

யிருக்க வேண்டும் என்று நம்பிய போலீஸ்காரர்கள், "வெளியே வருகிறீர்களா, சுட்டு விடட்டுமா?" என்று கத்தினர்கள்.

அடுத்த கணமே கைதிகள் இருவரும் கையைத் தூக்கிக் கொண்டு வெளியே வந்தார்கள். அவர்களில் ஒருவன் நாய்களைப் பார்த்ததுமே, "ஐயையோ! பிளட் ஹவுண்ட்ஸா!" என்று கத்தினன்.

அவன் அப்படிக் கத்தியதற்குக் காரணம் உண்டு. குற்றவாளியைக் கண்டு பிடித்ததுமே 'பிளட் ஹவுண்ட்' என்ற நாய் அவன் ரத்தத்தைக் குடித்துவிடும் என்று பெரும்பாலான மக்கள் நினைக்கிறார்கள். அது தவறு. நல்ல ரத்தமுள்ள, அதாவது நல்ல இனத்தில் பிறந்த நாய் என்பது தான் 'பிளட் ஹவுண்ட்' என்பதற்கு அர்த்தம். நல்ல முறையில் வளர்ந்த எந்த நாயும் கடித்து ஹிம்சை செய்யாது.

சிறு முயல் முதல் பெரிய மான் வரைக்கும் எந்த விலங்கையும் தேடிக் கண்டு பிடிக்கும் வல்லமை இந்த வேட்டை நாய்க்கு உண்டு. ஆனால் மனிதர்களைக் கண்டுபிடிப்பதற்கு மட்டும் இதற்கு முதலில் பயிற்சி தருகிறார்கள். குட்டியாக இருக்கும்போதே இந்தப் பயிற்சியைத் தொடங்குகிறார்கள்.

சிறுவர்களின் ஒரு பெரிய கூட்டத்தில் குறிப்பிட்ட ஒரு பையனைத் தேடிக் கண்டு பிடிப்பது எப்படி என்பதை முதலில் கற்பிப்பார்கள். வாத்தியார் முதலில் எல்லாப் பையன்களின் கையிலும் ஆட்டு ஈரலைத் தடவுவார். பிறகு பையனுடைய சட்டைப் பையில் ஆட்டு ஈரல் அடங்கிய ஒரு டப்பியைப் போடுவார். குறிப்பிட்ட ஒரு பையனை நாய்க் குட்டி தேடப் போகு முன்பு, வாத்தியார் அந்தப் பையனுடைய துணிகளை நாயிடம் மோப்பம் பிடிக்கக் கொடுப்பார். நாய்க் குட்டி ஈரலின் மணத்தைக் கொண்டு தவறான பையனைப் பிடித்தால், அதை அடிப்பார்கள்; சரியான பையனைப் பிடித்தால், அந்தப் பையனுடைய சட்டைப் பையில் இருக்கும் ஈரல் நாய்க்குத் தின்னக் கிடைக்கும்.

இதற்குப் பிறகு மற்றொரு பயிற்சி ஆரம்பிக்கிறது. பத்து அல்லது பன்னிரண்டு பையன்களின் துணிகளை நாய்க் குட்டியிடம் மோப்பம் பிடிக்கக் கொடுத்துவிட்டுப் பின்பு அந்தப் பையன்களை ஓடவிடுவார்கள். பையன்கள் ஓடும்போது வழியில் அங்கங்கே சின்னஞ் சிறு காகிதத் துணுக்குகளைப் போட்டுக் கொண்டு போக வேண்டும். பின்னல் ஓடும் நாய் சரியான வழியில் செல்கிறதா என்பதை அந்தக் காகிதத் துணுக்குகளைக் கொண்டு வாத்தியார் கண்டு பிடிப்பார். நாய் தவறான வழியில் சென்றால் உதை கிடைக்கும். பையன்கள் மரத்தில் ஏறியிருந்தால் நாய் மேலே மோப்பம் பிடித்து வானத்தைக் காட்டும். பிறகு வெறுங் காற்றைக் கொண்டு மோப்பம் பிடிப்பதில் இவை வல்லமை பெறுகின்றன.

ஓர் ஊரில் வயற்காட்டில் கொலை நடந்தது. அருகிலே போலீசாருக்கு ஒரு கந்தைத் துணி கிடைத்தது. அதை நாயினிடம் கொடுத்து மோப்பம் பிடிக்கச் செய்து, அந்த நாயைத் தொடர்ந்து சென்றார்கள். நாய் பல மைல்கள் ஓடி, ஒரு பங்களா வாசலில் வந்து நின்

றது. வெளியே ஒரு பழைய கார் இருந்தது. அதன் எஞ்சின் இன்னமும் சூடாகவே இருந்தது. அந்தக் காரில்தான் குற்றவாளி ஓடி வந்தான் என்பது தெரிந்தது. நாய் பின் பக்கம் ஓடி ஒரு குடிசையின் கதவைத் தட்டியது. கிழவி ஒருத்தி வந்து கதவைத் திறந்து, "இங்கு யாரும் ஒளிந்திருக்கவில்லையே!" என்றாள். நாய் குடிசைக்குள் நுழைந்து மேலே ஒரு பரணைக் காட்டியது. போலீசார் அந்தப் பரணில் ஏறியதும் ஒரு கதவு புலப்பட்டது. அதைத் திறந்ததும் உள்ளே இருந்த குற்றவாளி எழுந்து வெளியே வந்தான். அவன் தானே கொலை செய்ததை ஒப்புக்கொண்டான்.

'பிளட் ஹவுண்டு' இன நாய்களைக் குற்றவாளிகளைக் கண்டு பிடிக்க மட்டுமே பயன்படுத்துகிறார்கள் என்பதில்லை. கூட்டத்தில் தவறிவிட்டவர்களையும், விபத்தில் மறைந்து போன உடல்களையும், வெள்ளத்தில் மூழ்கினவர்களையும் கண்டு பிடிக்க இவை மிகவும் உதவி செய்கின்றன. கார், மோட்டார் சைக்கிள் முதலிய வண்டிகள் திருட்டுப் போய், போலீசாருக்குப் புலன் கிடைக்கவில்லையென்றால் அப்பொழுதும் இந்த நாய்கள் உதவிக்கு வருகின்றன. இன்று வரைக்கும் நாம் நாய்களின் அன்பையும் விசுவாசத்தையும் வீரத்தையும்பற்றி எவ்வளவோ கதைகள் கேட்டிருக்கிறோம்; ஆனால் ரகசியப் போலீசாருக்குப் பேருதவி செய்யும் இந்த நாய்கள் மிகவும் அதிசயமானவை.

## சோல்ஜர் கடமை

புதிதாகச் சேனையில் சேர்ந்த ஒரு சோல்ஜரை ஆத்திரத்தோடு உறுத்து விழித்தார் ஸார்ஜெண்ட். "சூப்பில் மண் இருக்கிறதென்று புகார் செய்கிறாய்?" என்று கேட்டார்.

"ஆமாம், ஸார்."

"நீ சேனையில் சேர்ந்தது உன் நாட்டுக்குச் சேவை செய்யவா? இல்லை, சூப் குடித்துக்கொண்டிருக்கவா?"

"நாட்டுக்குச் சேவை செய்யத்தான், ஸார். ஆனால், அதை விழுங்க அல்ல."

—'ஸ்டெர்லிங் ஸ்பார்க்ஸ்'

## விருந்தாளிகள் வந்தால்—?

ராணுவத்தின் சமையல்கார ஸார்ஜெண்ட் அன்று சமையலை முடித்துவிட்டான். அன்று 'டியூட்டி' பார்த்த அதிகாரி வந்து, "ஸார்ஜெண்ட், இவ்வளவுதானா குழம்பு வைத்திருக்கிறாய்? இன்று முப்பது விருந்தாளிகள் வேறே வருகிறார்களே!" என்றான்.

"பூ! இவ்வளவுதானே! அதிலே நாலைந்து வாளி தண்ணீரை எடுத்து ஊற்று."

—'டப்ளின் ஒப்பீனியன்'

# யந்திர வாழ்க்கை

ஆசாரிய தர்மாதிகாரி

**ஹிந்தி 'ஸர்வோதய' பத்திரிகையின் ஆசிரியர் இவர். செங்கல்பட்டு ஜில்லா பூதான ஊழியர்களின் பயிற்சி முகாமில் சமீபத்தில் இவர் பேசிய பேச்சின் சாரம் இது**

ஸர்வோதய இயக்கத்தில் எல்லாரும் பங்கெடுத்துக் கொள்கிருர்கள். ஸர்வோதயம் ஒரு வாதமோ அல்லது சம்பிரதாயமோ அல்ல. வாதம் என்ருல் அதற்கு எதிர்வாதம் ஒன்று நிச்சயமாக இருக்கும். அதில் எல்லாரும் ஒன்று சேர முடியாது. ஒரு சங்கீதக் கச்சேரி நடக்கிறது. பாடுகிருர் ஒருவர்; வீணை வாசிக்கிருர் ஒருவர்; மிருதங்கம் அடிக்கிருர் இன்னொருவர். மூன்று பேரும் சேர்ந்து இசைத்தால்தான் கேட்க முடியும். மூன்று பேரும் ஒருவரையொருவர் எதிர்த்தால், அங்கே கேட்பது சங்கீதமாகவா இருக்கும்?

வாழ்க்கை என்பது ஒரு கலை. அது பல இணைப்புகளினுல் வளர்ச்சி அடையும். வீணை வாசிப்பவர்களின் திறமையும் முன்னேற்றமும் பாடுகிறவர்களுக்கு விரோதமாக இருக்காது. மிருதங்கம் வாசிப்பவர் மேலும் வளர்ச்சி அடையலாம். ஆனுல் அந்த வளர்ச்சி வீணை வாசிப்பவருக்குப் பகையானதல்ல; தடையாகவும் இருக்காது.

ஸர்வோதய ஸமுதாயத்தில் இப்படி ஒன்று கலந்த இணைப்பான வளர்ச்சிதான் மக்களுக்கு ஏற்படும். இன்றுள்ள முரண்பாடுகள் இருக்க மாட்டா. பணக்காரர்கள் வளர்வதன் மூலம் ஏழைமையும் பலாத்காரமும் தோன்றுகின்றன. ஏழைமை போக வேண்டுமானுல், யாரையும் பணக்காரர் ஆக விடக்கூடாது; ஏழையையும் ஏழையாக விடக்கூடாது. எதுவும் மாருமல் பணக்காரன் பணக்காரனுகவும் ஏழை ஏழையாகவுமே இருக்க வேண்டும் என்று ஒரு சிலர் எண்ணுகிருர்கள். முன்னேற்றம் என்ருல் அங்கே தாழ்மை மறைந்தாக வேண்டும்.

ஒரு தாயார் பையனை இரவு எங்கேயோ வெளியே போய்வரச் சொன்னுள். பையன், "இருட்டாக இருக்கிறதே!" என்ருன். உடனே தாயார் ஒரு டார்ச் விளக்கைக் கையில் எடுத்துக்கொண்டு, "எங்கே இருட்டு?" என்று கேட்டாள். "விளக்கின் ஒளி வந்ததால் இருட்டில்லை" என்ருன் பையன். இருட்டும் ஒளியும் எப்படி ஒன்று சேர்ந்திருக்க முடியாதோ, அதே போல வறுமையும் முன்னேற்றமும் ஒன்று சேர்ந்திருப்பது சாத்தியமில்லை.

ஏற்றத் தாழ்வை அகற்ற வேண்டும் என்றுதான் எல்லாரும் சொல்லுகிருர்கள். ஆனுல் ஒவ்வொருவரும் தங்களுக்கென்று தனி வாதம் வகுத்துக்கொண்

காப்பிரைட்: ஸர்வோதயம் (தமிழ்: ஆகஸ்ட் '54), தபால் பெட்டி-9, திருப்பூர்.

டிருக்கிறார்கள். மனிதனைவிட வாதம் பெரிதாகிவிட்டது. ஸர்வோதயம் என்பது ஒரு வாதமல்ல. தலைக்குத் தகுந்த குல்லாய் என்பதற்கு மாறாக, குல்லாய்க்குத் தகுந்த தலை என்கிறார்கள் அரசியல்வாதிகள். கார்ல் மார்க்ஸ் பெயராலும், காந்திஜி பெயராலும் கட்சிகள் வலுக்கின்றன. ஆனால் மக்களைப் பற்றிக் கவலைப்படுகிறவர் இல்லை. எதன் பெயராலாவது மனிதனை மனிதன் எதிர்ப்பதைத் தான் காண்கிறோம்.

கல்கத்தாவில் ஒரு சமணக் கோயில் உண்டு. நண்பர்கள் அங்கே என்னை அழைத்துச் சென்றார்கள். ஆலயத்தில் அமர்ந்த ஜைன விக்கிரகங்கள் எந்த ஆடையும் ஆபரணமும் அணியவில்லை. அந்தத் தீர்த்தங்கரர்களின் வடிவத்தைப் பார்த்துத் திரும்பும்போது, கோயிலின் வாசலில் காவல்காரர்கள் உருவிய கத்தியுடன் நின்றுகொண்டிருந்தார்கள். "இவர்கள் ஏன் இங்கே?" என்று கேட்டேன்.

அஹிம்ஸையே உருவான ஜைன தீர்த்தங்கரர் ஆலயத்தில்-பற்றுதல் அற்று முற்றும் துறந்து நிர்வாணமாய் இருக்கும் பெரியோன் கோயிலில்-உருவிய கத்தியுடன் காவலாளி நிற்பானேன்?

"கோயில் பீடங்களிலும் சுவரிலும் மண்டபத்திலும் ஏராளமான பொன்னும் மணியும் பதித்திருக்கிறார்கள். அவற்றைப் பாதுகாப்பதற்கே அவர்கள் நிற்கிறார்கள்" என்று அங்கே இருந்த நண்பர்கள் சொன்னார்கள்.

இப்படித்தான், லட்சியம் ஒரு புறமும் அதைக் காப்பாற்றுவதற்காகச் சம்பிரதாயங்கள் ஒரு புறமும் தோன்றுகின்றன. இவை முடிவில் போர்க்களத்திலே கொண்டுபோய் விடுகின்றன.

சிவாஜி, நெப்போலியன், ராணா பிரதாப் போன்ற போர்வீரர்களைப் பற்றி ஒவ்வொரு நாடும் பெருமைப்படுவதுண்டு. ஆனால் இன்றைய யுத்தத்தில் அந்த மாதிரி வீரர்களுக்கு-அவர்கள் காட்டிய துணிவுக்கு-வேலையே இல்லை. ஒரே அணுகுண்டு லட்சக்கணக்கான சிவாஜிகளைக் கொன்று குவித்துவிடும். எல்லாம் யந்திர மயம். எவ்வளவு அதிகமாக யந்திரங்கள் பெருகுகின்றனவோ, அந்த அளவுக்கு மனிதத்தன்மை போய்விடுகிறது.

மனிதன் பயன்பட மாட்டான் என்கிறபோதுதான் யந்திரம் வேண்டும். "காலையில் 5 மணிக்கு எழுந்திருக்க வேண்டும். தாங்கள் என்னை எழுப்பிவிடுகிறீர்களா?" என்று நண்பர் ஜகந்நாதனைக் கேட்டேன்.

"சரி" என்றார்.

"நீங்களே தூங்கிவிட்டால் என்ன செய்வது?" என்றேன்.

"நான் அலாரம் கடிகாரம் வைத்திருக்கிறேன்" என்றார். காலையில் எழுந்திருப்பதற்குக் கடிகாரத்தின்மீது நம்பிக்கை!

இந்த உணர்ச்சி வெகு வேகமாக வளர்ந்து வருகிறது. மனிதத்தன்மை அழிந்துகொண்டிருக்கிறது என்பதற்கே இது அடையாளம். மனிதனைவிட யந்திரம் முக்கியமாகிவிட்டது. காந்தீய வாதமா, மார்க்ஸீய வாதமா என்ற பிரச்னையே இல்லை. மனிதத்தன்மைகள் அழிந்து போகின்றன. அதைத் தடுத்தாக வேண்டும்.

மனிதனின் வீரத்தைக் காட்ட இப்போது ஒன்றுமில்லை. அதற்கு அவசியமும் இல்லை. போர்க்களத்

தில் ஒரு வீரனுக்குக் கௌரவம் ஏன் கொடுக்கிறார்கள்? போர்க் களத்தில் தன் உயிர் போய்விடும் என்ற நிச்சயத்தோடு அவன் செல்கிறான். தன் உயிரை அர்ப்பணம் செய்யவே செல்கிறான். மற்றவர்களைத் திறமையாகக் கொல்லப் போகிறான் என்பதற்காக அவனுக்குக் கௌரவம் இல்லை. கொல்லுகிறவனுக்குக் கௌரவம் என்றால், தூக்கிலிடும் தொழிலுடையவனுக்கும் கசாப்புக்கடைத் தொழிலுக்கும் அல்லவா கௌரவம் இருக்கும்?

யுத்தத்தில் மனிதனுக்கு வேலை இல்லை. அவனுடைய வீரத்துக்கு இடமில்லை. பிரசாரத்துக்காவது மனிதன் பயன்படுவானா என்றால், விஞ்ஞான யந்திரம் அவனை அங்கேயும் ஆட்கொண்டு விடுகிறது. காந்திஜியின் பிரார்த்தனை இசைத்தட்டுக்கள் இருக்கின்றன. அவருடைய பேச்சுக்களை 'ரிக்கார்டு' செய்திருக்கிறார்கள். அவர் வேண்டாம்; அவர் இல்லாமலே அவருடைய சொற்பொழிவுகளைக் கேட்கலாம்!

சைகால் என்ற சினிமா நடிகர் இறந்துவிட்டார். இன்னும் அவருடைய பாடல்களைக் கேட்கலாம்; அவருடைய உருவத்தைப் பார்க்கலாம். அவர் அவசியமில்லை.

நர்கிஸ் என்ற பெண்மணி சினிமாவில் ஓர் அழகி. அவளுக்குக் குரல் இனிமையில்லை. ஆனால் லதா மங்கேஷ்கர் என்ற பாடகி இனிமையான குரல் உடையவள். உண்மையாகவே தனக்கில்லாத குரலுடன், அதாவது, லதா மங்கேஷ்கரின் குரலுடன் இனிமையாகப் பாடுகிறாள் நர்கிஸ்! யந்திரம் எல்லாம் செய்துவிடுகிறது. மனிதனுக்கு உலகத்தில் இடமில்லை.

இந்த ஆபத்தான நிலைமையைச் சீர்திருத்தி விஞ்ஞானத்துக்குள்ள மதிப்பை மனித மேன்மைக்கு ஏற்றதாக மாற்றுவதே நம் நோக்கம். ஏன் என்றால் உற்பத்தியில் கூட மனிதத்தன்மையைப் புகுத்த வேண்டியிருக்கிறது.

புரட்சியில் ஏற்படும் புதுமை என்ன என்றால், தனி மனிதனுக்கு மாத்திரம் உரிமையாகவும் சொந்தமாகவும் நன்மையாகவும் இருந்ததை யெல்லாம், சமூகத்துக்கு - எல்லா மனிதர்களுக்கும் - பொதுவானதாக ஆக்குவதே.

சத்தியம், அஹிம்ஸை இவற்றை எல்லாத் துறைகளிலும் மனிதன் கடைப்பிடித்தாக வேண்டும்.

சென்னைச் சர்வகலாசாலையில் பி. ஏ. பட்டம் பெற்ற ஒருவன் தன் பெற்றோர்களுக்குப் பயனில்லை. எங்கே சென்றாலும் வேலை கிடைக்கவில்லை. படித்தும் பயனற்று வாழ்விலே வெறுப்புற்று வாலிபர்கள் திரிகிறார்கள். யுத்தத்தினால் பயனில்லை. கட்சி அரசியலால் பயனில்லை. இவை எல்லாம் மனித ஜாதிக்கு உதவி செய்யவில்லை. மனிதனின் வாழ்விலே புதிய ஒளியளிக்கும் புதிய அஹிம்ஸா சமுதாயம் ஏற்பட, பூமிதானந்தான் முதற் படியாகும்.

## இப்படிப் பலர்!

அவன் எப்படிப் பேசுகிறான், தெரியுமோ? காலைச் செய்திப் பத்திரிகையின் பிரதி ஒன்றே ஒன்றுதான் அச்சானது போலவும், அந்த ஒன்றும் அவன் கையிலே அகப்பட்டுவிட்டது போலவுந்தான் பேசுகிறான். —டின்னுலி ஜான்ஸன்

சைவர், வைஷ்ணவர், கிறிஸ்துவர், முஸ்லிம்கள் ஆகிய சகலரும் இதைக் கொண்டாடுகிறார்கள்.

# இலங்கையின் புனித மலை

எஸ்மீ ரான்கைன்

இலங்கைத் தீவின் நடுவில் அநேக மலைகள் உண்டு. இவைகளில் ஒன்று மிகவும் செங்குத்தானது; 7,300 அடி உயரம் உள்ளது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்தே, தொடர்ந்து இலக்கியங்களில் இதைப்பற்றிய விவரம் வந்திருக்கிறதென்றால், பாருங்களேன். அந்தக் காலத்திலிருந்தே இதைப் புண்ணிய ஸ்தலமாக இலங்கை வாசிகள் கருதி வந்திருக்கிறார்கள். இந்தச் சிகரத்துக்கு யாத்திரை சென்று வரும் வழக்கம் இன்று நேற்றல்ல; நூலறிவு தோன்றிய பழங்காலத்துக்கு முன்பே இருந்ததுதான்.



கோபுர வாசல்

பௌத்த நூலான 'மகாவம்ச'த்தில் இதைப் 'புண்ணிய பர்வதம்' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். புத்தர் இங்கே தர்மோபதேசம் செய்தபிறகு, தம் காலடிச் சின்னம் ஒன்றை அதற்கு அடையாளமாக அருளிவிட்டுப்போனதாக ஐதிகம்.

ஆனால் பிற மதத்தைச் சேர்ந்தவர்களும் இந்த இடத்தைத் தங்கள் புண்ணிய ஸ்தலமாகவே கருதி வருகிறார்கள். அதற்கேற்ற புராணக் கதைகளும் வழங்குகின்றன.

கிறிஸ்து பிறப்பதற்கு ஆறு நூற்றாண்டுகளுக்கு முன் இலங்கையின்மேல் சிங்களவர் படையெடுத்தார்கள். அப்போது அங்கே வாழ்ந்துவந்த பழங்குடிகள் இங்கே ஓடிவந்து ஒளிந்துகொண்டார்கள். படிகம் முதலிய மதிப்புள்ள கற்கள் இங்கே கிடைப்பதாக ஆதி காலத்திலேயேகூடப் பலருக்குத் தெரிந்திருக்க வேண்டும்.

முன்னே மாலுமிகள் திசை தவறாமல் இருப்பதற்காக இந்தச் சிகரத்தை அடையாளமாக வைத்துக்கொண்டு கடலில் செல்வது வழக்கம்.

'ராஜாவளீய' என்ற பழைய சிங்கள நூலில், "விஜயன் என்ற இளவரசனும் அவனுடைய தோழர்களும் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் நடுவில் எங்கே தங்குவது என்று தெரியாமல் தவித்துக்கொண்டிருந்தார்கள்.

மூலம்: ஸண்டே கிரானிக்கிள் (ஆங்கிலம்: 4-7-'54), பம்பாய்.

அப்போது இந்தச் சிகரம் தூரத்தில் மங்கலாகத் தெரிந்தது. உடனே இதை நோக்கிப் புறப்பட்டு வந்தார்கள்'' என்று சொல்லியிருக்கிறது.

இப்ன் பட்டோ என்ற அராபிய யாத்திரிகர், ''கரைக்கு வந்து சேருவதற்கு ஒன்பது நாள் தொலைவில் இருக்கும்போதே இந்தச் சிகரம் தெரிந்தது'' என்று எழுதியிருக்கிறார்.

பின்னால் வந்த போர்ச்சுகீசிய வியாபாரிகளும் இதே மாதிரிதான் இந்தச் சிகரத்தை முக்கிய அடையாளமாக வைத்துக்கொண்டு கடலில் போக்குவரத்து நடத்திவந்தார்கள்.

கி. பி. 6-ஆம் நூற்றாண்டில் இங்கே வந்த பாஹியன் என்ற யாத்திரிகர் இந்தப் புண்ணிய ஸ்தலத்தைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். 16-ஆம் நூற்றாண்டில் வந்த பார்பரோஸா என்ற போர்ச்சுகீசியரும் இப்படி எழுதியிருக்கிறார்.

கொழும்பு முதலிய மேற்குக் கரையோரப் பிரதேசங்களிலிருந்து பார்த்தால், இதன் உச்சி நன்றாகத் தெரியும்.

இப்போது இதற்கு 'ஆதாம் சிகரம்' என்று பெயர். வட ஆப்பிரிக்காவிலிருந்து வியாபாரம் செய்ய வந்த மூர் ஜாதியாரும் சீனர்களும் சமரசபாவமுள்ள 'க்நாஸ்டிக்ஸ்' என்ற ஒரு வகைக் கிறிஸ்துவர்களும் இங்கே பதிந்திருக்கும் சுவட்டை, ஆதி மனிதனை ஆதாம் என்பவனுடைய காலடிச் சின்னம் என்றே கருதுகிறார்கள். வெவ்வேறு மதத்தைச் சேர்ந்தவர்கள் வெவ்வேறு விதமாக இதற்குப் பெயர் இட்டிருக்கிறார்கள்.

முஸ்லிம்கள் இதை 'ஆதாம் மலை' என்கிறார்கள். ''ஆதி மனிதனை ஆதாமைச் சொர்க்கத்திலிருந்து தள்ளினபோது அவன் இங்கே வந்து சேர்ந்தான்; தான் செய்த பாவத்தைப் போக்க இங்கே ஒற்றைக் காலில் நின்று இருநூறு ஆண்டுகள் தவம் செய்தான். பிறகு தன் மனைவி ஏவாளைத் தேடிக்கொண்டு உலகம் முழுதும் சுற்றினான். கடைசியில் அரேபியாவில் மெக்காவில் அவளைக் கண்டான். அங்கிருந்து அவளை அழைத்துக்கொண்டு இலங்கைக்கு வந்து சேர்ந்தான். பூலோக சொர்க்கமாக அது விளங்கியதே இதற்குக் காரணம்'' என்று அவர்கள் நம்புகிறார்கள்.

பொதுவாக, இந்துக்கள் இதைச் 'சொர்க்காரோகணம்' என்கிறார்கள். ''இந்த மலைச்சாரலில் இருக்கும் மரங்களெல்லாங்கூடச் சிகரத்துக்கு வணங்குவதுபோல் வளைந்திருக்கின்றன, பாருங்கள்'' என்கிறார்கள் அவர்கள்.

சைவர்கள், ''சிவபெருமான் ஊழிக் கூத்தாடின இடம் இது! அவருடைய பாதம் பட்ட அடையாளம் இது!'' என்கிறார்கள். அவர்கள் இதைச் 'சிவனொளி பாதம்' என்று அழைக்கிறார்கள்.

வைஷ்ணவர்களோ இதைச் 'சமந்தகூடம்' என்கிறார்கள். இலங்கையில் ஸ்ரீ ராமருடன் எழுந்தருளிய இளைய பெருமாளாகிய லட்சுமணரை உத்தேசித்து இதைப் புனித ஸ்தலமாக இவர்கள் கொண்டாடி வருகிறார்கள்.

சூரிய வழிபாட்டுக்கும் இந்த இடத்துக்கும் சம்பந்தம் இருக்கலாம் என்று தோன்றுகிறது. சமன் என்ற லட்சுமணர் சூரிய வம்சத்தைச் சேர்ந்தவர். ஆகையால் அவ

ரும் மஞ்சள் நிறமாக இருப்பார் என்று ஐதிகம். இங்கே ஆண்டு தோறும் கோடிக்கணக்கில் சின்ன மஞ்சள் வண்ணத்திப் பூச்சிகள் வந்து இறகைப் பலிகொடுப்பது வழக்கம். தாங்களாகவே தான் இப்படிச் செய்கின்றனவோ வேறு எந்தக் காரணத்தாலோ அதுதான் தெரியவில்லை; ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம்: ஒவ்வோர் ஆண்டு முடிவிலும் இப்படி ஏராளமான வண்ணத்திப் பூச்சிகள் இங்கே வருகின்றன. சில சமயம் மலைப்பாறைகளை இவை கப்பிக் கொள்வதால், "இதென்ன, போர் போராக மஞ்சள் வண்ணத்



சமந்தகூடம்

திப் பூச்சி குவிந்து கிடக்கிறதே!" என்றுகூடத் தோன்றும்.

சூரியன்கூட இந்தப் புண்ணிய ஸ்தலத்தை வணங்குகிறான் என்ற கற்பனை இதனாலும் ஏற்பட்டிருக்கலாம்.

சூரியோதயத்தின்போது மட்டும் இந்தச் சிகரம் தொலைவிலிருந்து சற்று நேரம் தெரியும். அந்தக் காட்சி தெய்விகப் பொலிவுடன் அற்புதமாக இருக்கும். இப்படித் தெரிவதாலும் காலையில் சூரியன் இதன் பின்னால் மறைந்து ஒளிந்து எட்டிப் பார்ப்பதுபோல் தோன்றுவதாலும் மேலே சொன்ன கற்பனை ஏற்பட்டிருக்கலாம்.

இதையெல்லாம் நம்பாத பேர்வழிகள்கூட அங்கிருந்து சூரியோதயக் காட்சியைப் பார்க்க வேண்டுமென்று, மிகவும் சிரமப்பட்டு இரவெல்லாம் மலை ஏறிச் செல்கிறார்கள். மத நம்பிக்கை உள்ளவர்களும் இரவில்தான் மலை ஏறுகிறார்கள். ஆனால் அவர்கள் சூரியோதய நேரத்தில் பிரார்த்தனை செலுத்த வேண்டுமென்றுதான் அங்கே போகிறார்கள்.

பௌத்தர்கள் இந்தச் சிகரத்தை 'ஸ்ரீபாதம்' என்கிறார்கள். ஞானம் பெற்றுப் புத்தராகி எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு கௌதமர் இங்கே வந்து தம் கொள்கைகளைப் போதித்தாராம்.

கி. பி. 4-ஆம் நூற்றாண்டில் எழுதிய ஓர் ஏட்டுச் சுவடியில் இந்தச் சிகரத்தைப்பற்றிய சரித்திர பூர்வமான தகவல் முதல் முதலாக வெளியாகியிருக்கிறது. அபிஸீனியாவைச் சேர்ந்த கோப்டிக் என்ற ஆதி கிறிஸ்துவ சமூகத்தவரான வாலெண்டைன் என்பவர் அதை எழுதியதாகச் சொல்கிறார்கள். "ஆதாமின் காலடிச் சுவட்டைப் பாதுகாப்பதற்கென்றே ஒரு தேவதையை ஏசுநாதர் நியமித்தார்" என்று அதில் குறித்திருக்கிறார் வாலண்டைன்.

ஒரு நூற்றாண்டுக்குப் பிறகு எகிப்திலுள்ள அலெக்சாண்டிரியாவில் வாழ்ந்த க்ரோரீன் என்ற கோப்டிக் (அபிஸீனிய) கிறிஸ்துவ குரு, "இது சுத்தத் தவறு. அந்தக் காலடிச் சுவடு ஆதாமினுடையதல்ல; சாத்தானைச் சொர்க்கத்திலிருந்து தள்ளினபோது அவன்

இங்கே வந்து இறங்கினன்" என்று பழைய கொள்கையை மறுத்திருக்கிறார்.

ஆதி கிறிஸ்துவர்கள், "இது இந்தியாவில் தோன்றிய முதல் கிறிஸ்தவ மகனான ஸெயிண்ட் தாமஸின் அடிச் சுவடு" என்று நம்புகிறார்கள்.

சமீப காலத்தில் அதிக சிரமம் இல்லாதபடி மலைமேல் ஏறப் படிகள் அமைத்திருக்கிறார்கள். ஆனால் ஐம்பது ஆண்டுகளுக்கு முன் அங்கங்கே இணைந்திருக்கும் கனமான சங்கிலியைப் பிடித்துக்கொண்டு கடந்து செல்லவேண்டியிருந்தது.

நடுவில் கொஞ்சநாள் வழியே கூட மறைந்துவிட்டதாம். மறுபடியும் அதை இப்படிக் கண்டுபிடித்தார்கள் என்பதற்கு ரசமான ஒரு கதை வழங்குகிறது.

இரண்டு சகோதரர்கள் இருந்தார்கள். இரண்டு பேருமே கள்ளங்கவடில்லாதவர்கள். இருந்தாலும் இளையவன் ஒரு வேலையும் செய்யாமல் புத்தகம் படிப்பதிலேயே காலங் கழித்து வந்தான். மூத்தவனுக்குத் தம்பியிடம் வாஞ்சை அதிகம்; அதனால், 'இருந்தால் இருக்கட்டுமே!' என்று தம்பியை ஒன்றும் சொல்வதில்லை.

மூத்தவனுக்கு மனைவியிடமுள்ள ஆசை சொல்லி முடியாது. ஆனால் அவன் எண்ணிவந்தபடி அவள் அவ்வளவு யோக்கியமானவள் என்று சொல்வதற்கில்லை. வீட்டிலேயே எப்போதும் இருந்த இளையவன் கண்ணுக்கு அழகாக இருப்பான். 'இந்த அழகெல்லாம் வீணைகப் போகிறதே! இப்படி எப்போதும் படித்துக்கொண்டே வெட்டிப் போது போக்குகிறனே' என்று இருந்தது அவளுக்கு.

அவள் நயமாகப் பேசி அவனை வளையக் கட்டி உள்பக்கம் வரச் சொன்னாள். கள்ளங் கவடு இல்லாமல் அவனும் உள்ளே போனான். ஆனால் அவள் எண்ணம் இன்னது என்று தெரிந்ததும் திடுக்கிட்டுப் போனான். "இதென்ன அக்கிரமம்? என் அண்ணியாக இருந்து இப்படி மோசமாக நடந்துகொள்கிறாயே?" என்று கேட்டு அவளைக் கண்டபடி திட்டினன்.

வீட்டுக்குத் தன் புருஷன் வந்தவுடனே அவள், தன் மைத்துனன் தன்னைக் கெடுக்க வந்ததாக அவனிடம் சொன்னாள்; உடனே இளையவனை வீட்டை விரட்டும்படியும் சொன்னாள்.

இளையவன் என்னதான் உண்மையைச் சொல்லியும் மூத்தவன் காதில் ஏறினல்தானே? "என் சொந்தத் தம்பியாக இருந்து என்னை ஏமாற்றினயேடா!" என்று சொல்லிக் கோடரியால் இளையவனுடைய கையையும் காலையும் வெட்டிப் போட்டுவிட்டான்.

ஆனல் ஒரு கிழவி இளையவன் மேல் இரக்கங்கொண்டு அவனைத் தன் வீட்டுக்குத் தூக்கிப் போய்க் காயத்தை ஆற்றி அவனை அக்கறையோடு கவனித்து வந்தாள். அங்கே அவன், புத்தகங்களைப் படித்துக்கொண்டு நிம்மதியாகக் காலந் தள்ளி வந்தான்.

அப்போது பட்டிகா என்ற அரசன் இலங்கையை ஆண்டு வந்தான். அவனுக்கு அழகான வஸ்து எதுவாக இருந்தாலும் மிகவும் பிடிக்கும். தலைநகரைச் சுற்றி அவனுடைய உத்தியான வனம் ஒரு யோஜனை அளவுக்குப் பரவியிருந்தது. மிகவும் தெய்வபக்தி உள்ளவன். மலர் என்றால் அவ



மலை உச்சிக்குச் செல்லும் படிகள்

னுக்கு மிகவும் ஆசை. அடிக்கடி பூக்காட்சிகள் ஏற்பாடு செய்து மக்களை மகிழ்வித்து வந்தான்.

தலைநகரில் மகாதூபம் என்ற ஒரு பெரிய கோயில் இருந்தது. அழகிய மலர்களால் பூக்கூடை போலவே அதை அலங்காரம் செய்து வைத்தான்.

ஒரு நாள் அங்கிருந்த தோட்டக்காரன் அரசனிடம் வந்து, "நல்ல பூக்களெல்லாம் திருட்டுப் போய்விடுகின்றன. இரவெல்லாம் கண் கொட்டாமல் கவனித்துத் தான் வருகிறோம். அப்படியும் திருடனைக் கண்டுபிடிக்க முடியவில்லை" என்று முறையிட்டான்.

அரசனுக்கேகூட மலர்கள் சில சமயம் கிடைப்பதில்லை. இதனால் அவனுக்கு ஒரே கவலை.

திருடனைப் பிடித்துத் தருகிறவர்களுக்கு நல்ல வெகுமானம் கிடைக்கும் என்று நாடெங்கும் பறை அறைந்தார்கள்.

இந்தத் தகவலையெல்லாம் கிழவியை விசாரித்து அந்த மொண்டி வாலிபன் தெரிந்துகொண்டான். அவன் எல்லாச் சாஸ்திரங்களையும் நன்றாகக் கற்றிருந்ததால், தான் எப்படியாவது திருடனைக் கண்டு பிடித்துக் கொடுப்பதாக அரசனிடம் தெரிவிக்கச் சொன்னான். அரசனும் உடனே அவனை அழைத்து அரண்மனைத் தோட்டத்திலே ஒரு சிறு குடிசையில் தங்கியிருக்கச் சொன்னான்.

நடு நிசி. ஒண்டியாகக் காவல் காத்து வந்தான் அந்த வாலிபன். நேரம் ஆக ஆக அவனுக்குச் சலிப்பு ஏற்பட்டு வந்தது. அப்போது வெளியே ஏதோ அபூர்வமான ஒளி வீசியது. 'சில ஸ்தோத்திரங்களைப் பாடினால், ஊனக் கண்ணுக்குத் தெரியாத தெய்விகப் பொருள்கள்கூடப் பளிச்சென்று தெரியும்' என்று பல நூல்களை ஆராய்ந்ததிலிருந்து அவன் தெரிந்துகொண்டிருந்தான். அவைகளை மிகவும் பக்தி சிரத்தையோடு பாடலானான்.

அப்போது ஏழு தேவமாதர்கள் தோட்டத்தில் நடமாடுவது தெரிந்தது. அவர்களிடமிருந்து தான் அந்தத் திவ்விய ஒளி வீசியது. அவர்கள் பூப் பறிப்பதை நிறுத்திவிட்டு அந்தக் குடிசைக்குள் நுழைந்தார்கள். மந்திர வசப்பட்ட மாதிரி அந்தப் பாடல்களின் இனிமையில் ஈடுபட்டிருந்தார்கள். பொழுது விடிந்தால் தேவதைகள் பூலோகத்தில் இருக்கமாட்டார்கள்; ஆகவே, கிழக்கு வெளுக்கத் தொடங்கியதுமே வேண்டா வெறுப்பாக அங்கிருந்து அவர்கள் புறப்பட்டுப் போய்விட்டார்கள்.

அன்று தன் தோட்டத்தில் பூக்கள் நிறைந்து குலுங்குவதைக் கண்டதும் அரசனுக்கு ஒரே மகிழ்ச்சி. இருந்தாலும் இத்தனை நாள் வந்து திருடிப் போனவர்கள் யார் என்று பார்க்க அவனுக்கு ஆவல். வாலிபன் அவர்களை எப்படி யாவது கையும் பிடியுமாகப் பிடித்துக் கொடுக்க வேண்டும் என்பதற்காக, அரசன் வெகுமானத்தை உடனே தரவில்லை. மறுநாள் இரவும் அந்த மொண்டி வாலிபன் காவல் காத்து வந்தான்.

நடுநிசி. மறுபடியும் அந்தத்தேவ மாதர்கள் அங்கே வந்தார்கள். முந்திய நாள் பாடிய பாடலை மறுபடி கேட்க வேண்டுமென்று அவர்களுக்கு ஆவல். ஆனால் குடிசைக் கதவு தாழிட்டிருந்தது. "கொஞ்சம் கதவைத் திற. உன் பாட்டைக் கேட்கவேண்டும்" என்று அவர்கள் கேட்டுப் பார்த்தார்கள். அதற்கு அவன், "எனக்குத்தான் கை கால் இல்லையே! எப்படித் திறப்பேன்?............நீங்கள்தான் தேவதைகளாயிற்றே! உங்கள் மாயா சக்தியால் மறுபடியும் கைகால் வளரும்படி செய்யுங்களேன்" என்றான்.

அவர்களும் அவ்விதமே அருள் புரிந்தார்கள். மறுபடியும் அவன் அந்தப் பாடல்களைப் பாடலானான்.

பொழுது விடியும் சமயம். அவர்கள் பூலோகத்தை விட்டுப் புறப்படப் போனார்கள். அப்போது அந்த வாலிபன் அவர்களில் ஒருத்தியை மெதுவாகத் தொட்டு நிறுத்தினான். மனிதஸ்பரிசம் படவே அவளால் நகர முடியவில்லை. தன்னை விட்டு விடும்படி அவள் கெஞ்சினாள். ஆனால் அவன் விட்டால்தானே? பொழுது விடிந்ததும் அவளை அரசனிடம் அழைத்துச் சென்று நடந்ததைச் சொன்னான்.

அரசன் ஆச்சரியமுற்று, "பெண்ணே, நீ யார்? என் தோட்டத்தில் வந்து ஏன் தினமும் பூவைத் திருடுகிறாய்?" என்றான்.

"நானும் என் தோழிமாரும் தேவலோகத்திலுள்ள தவந்திஸ்ஸ உத்தியான வனத்தில் வசிப்பவர்கள். ஒவ்வொரு நாள் இரவும் இங்கிருந்து பூப் பறித்துப் புத்த பகவானுடைய ஸ்ரீபாதத்தில் வைத்துப் பூஜித்து வருகிறோம். என்னை விடுவித்தீர்களானால் ஸ்ரீபாத மலையுச்சிக்கு வழி காட்டுகிறேன். இங்கிருந்து மலர் தூவிக்கொண்டே போகிறேன். தேவர்கள் மட்டுமே இப்போது அங்கே தொழுது வருகிறார்கள். நீங்கள் மனிதர்களாக இருந்தாலும், இனிமேல் அங்கே வந்து தரிசிக்கலாம்" என்றாள்.

அரசனுக்கு ஒரே மகிழ்ச்சி. 'நம் தோட்டத்துப் பூ, பகவானுடைய பூஜைக்குப் பயன்படுகிறது' என்று எண்ண எண்ண அவனுக்குப் பெருமை தாங்கவில்லை. அவன் அவளை வணங்கி, "தாயே, இனி நீங்களும் உங்கள் தோழிமாரும் தாராளமாக இங்கே வந்து பூப் பறித்துக்கொள்ளுங்கள்" என்று சொல்லி அவளை விடுவித்தான்.

அவளும் தான் வாக்களித்தபடியே ஸ்ரீபாத மலைச்சாரலில் உள்ள காட்டில் மலர் தூவிக்கொண்டே மலையுச்சியிலுள்ள கோயிலுக்கு வழிகாட்டினளாம்.

எப்படியோ, அழகை விரும்பிப் போற்றிய ஓர் அரசனும், கல்வியில் கரைகண்ட ஒரு மொண்டியும் செய்த புண்ணியத்தின் பலனாக அந்தச் சிகரத்துக்குப் போய் வர மறுபடியும் வழி திறந்தது.

ஆண்கள்தான் வீரர்களா? வீரப் பெண்மணிகளும் பலர் இருந்திருக்கிறார்கள்.

# கன்னட வீரப் பெண்மணிகள்

## கே. என். கோபாலகிருஷ்ண

அக்கா தேவி: கல்யாண சாளுக்கிய வம்சத்தில் புகழ் பெற்ற அக்கா தேவி தன் ஆட்சிக் காலத்தை, சுகமும் பக்தியும் வேடிக்கையும் கலந்த உற்சாகமான காலம் என்று கவிகள் புகழும்படி செய்தாள்; தன் கணவனுக்கு அரசியல் துறையில் பல அரும் பெரும் பணிகளில் வலக்கை போல் உதவி வந்தாள். அவன் பெயர் ஜயசிம்மன். அவன் இளமையிலேயே இறந்துவிட்டான். இவர்களுக்குச் சோழர்கள் பரம விரோதிகள். அவர்களுடைய படையெடுப்புக்கு ஈடு கொடுக்க வேண்டியிருந்தது. தன் துக்கத்தை ஒரு புறம் ஒதுக்கிவிட்டுக் கதம்பர் குலச் சின்னமாகிய வானரக் கொடியை உயர்த்தினாள்.

அப்பொழுது அவளுடைய குழந்தைகள் சிறியவர்களே. நாட்டில் குழப்பம் இருந்தது. ஆனாலும் உரம் பெற்ற மனம் உள்ள அக்கா தேவி தன்னைக் குழப்பிய பிரச்னைகளுக்குப் பரிகாரம் தேடி ராஜ்யத்தின் எல்லையை விஸ்தாரமாக்கினாள். ராஜகுரு, மந்திரிகள், மற்றத் தலைவர்கள் எல்லோரும் ராணிக்கு ஆதரவு காட்டினார்கள். கேவலம் ஒரு பெண்தானே என்று அலட்சியம் செய்யவில்லை. மாங்கலியத்தை இழந்தாலும் தான் நாட்டின் க்ஷேமத்துக்காகப் பாடுபட முடியும் என்ற உறுதியோடு அவள் இருந்தாள்.

அக்கா தேவிக்குப் புதிய பேரிடி ஒன்று காத்திருந்தது. அவளுடைய மூத்த மகன் மயூர வர்மா பட்டத்துக்கு வரப்போகும் நிலையில் திடீரென்று இறந்து விட்டான். பிறகு இளைய மகனைச் சிம்மாசனம் ஏற்றி, அவனைக் கோகாவிக் கௌடன் என்பவன் தன் கைப் பொம்மை யாக்கிக் கொண்டு கலகத்தை எழுப்பினான். இதனால் அவனுடன் போர் புரிய நேர்ந்தது. இந்தப் போரில் இவள் 'ரண பைரவி' என்ற பெயர் பெற்றாள். இவள் புகழ் எட்டுத் திக்கிலும் பரவியது. இந்த வீரப் பெண்மணி, கி. பி. 1066-இல் தார்வார் ஜில்லாவின் ஒரு பகுதியை ஆண்டு வந்தாள். இவள் நாட்டுக்குச் செய்த சேவை, கன்னட நாட்டினரின் பெருமையைப் பல மடங்கு உயர்த்திவிட்டது. கன்னட நாட்டுச் சரித்திரத்தில் வீரப் பெண்களில் தலை சிறந்தவள் அக்கா தேவியே.

கர்நாட ராணி: இவளும் சிறு வயதிலேயே கணவனை இழந்துவிட்டாள். இவள் மிகவும் துணிவுடன் இருந்து தன் சிறு குழந்தையைப் பாதுகாத்தாள். கி.பி. 1623-இல் 'கேரு ஸொப்பே' என்னும் இடத்தில் இருந்து ஆண்டாள். ராஜ்யத்தை முன்னுக்குக் கொண்டு வர வேண்டிய அவசியம் நேர்ந்

காப்பிரைட்: பிரஜாமத (கன்னடம்), பங்களூர்.

தது. ஆனால் நாட்டுத் தலைவர்கள் பயங்கொள்ளிகளாக இருந்தார்கள். இதனால் இவள் சக்தியும் மங்கியது. விஜயநகரச் சிற்றரசர்களில் வெங்கடப்ப நாயக்கன் முதலாக வந்தவன். மிகத் துணிகரமானவன். அவன் இவள் ராஜ்யத்தின்மேல் படையெடுத்தான். அதிகார தோரணையில் அவன் எழுதிய கடிதம் கண்டதும் ராணியின் தலை சுற்றியது. ஆனால் கைகால்கள் சோரவில்லை. பயந்து சுதந்தரத்தை இழக்க விரும்பவில்லை. இவளுடைய துணைவர்கள் இவள் பேச்சைக் காதில் வாங்கிக்கொள்ளவில்லை. பல தடவை தன்னிடம் உதவி பெற்ற போர்ச்சுகீசியரின் துணையைப் பெற்றாள். தன் மனிதரே உதவாதபொழுது பிற நாட்டினர் என்ன சாதித்துவிடுவார்கள்? பிறர் தன் அரண்மனையில் கால் இடுவதைப் பார்க்கச் சகியாமல் தன் குழந்தையுடன் காடு புகுந்தாள்.

மல்லம்மாஜி: மூர்த்தி சிறிதாயினும் கீர்த்தி பெரிது என்பது போல் பௌவடியை ஆண்ட மல்லம்மாஜி பராக்கிரமம் மிகுந்தவள். இவளுடைய கணவன் மராட்டியருடன் யுத்தம் செய்தபோது உயிருக்கே ஆபத்தான காயம்பட்டுச் சாகும் தறுவாயில் இருந்தான். தலைவன் இல்லாத சைனியங்கள் திக்குத் திசை தெரியாமல் சிதறத் தொடங்கின. இந்தச் செய்தியைக் கேட்டதும் மல்லம்மாஜி தன் குழந்தையைப் பாதுகாப்பாளரிடம் ஒப்பித்துவிட்டு வீராவேசத்துடன் யுத்தகளத்தில் பாய்ந்தாள். தொட்டிலாட்டிய கை கத்தி பிடித்தது. ராணியின் வரவு அவளுடைய படை வீரர்களுக்குப் புத்துயிர் ஊட்டியது. சற்று நேரத்தில் பகைவர்களைத் துரத்தி யடித்துவிட்டுக் கோட்டை வாயிலை அடைத்துவிட்டுக் கணவனிடம் போனாள். அவளுடைய வெற்றி ராயருக்குப் பரமானந்த மூட்டியது. ராஜ்யத்தின் சுதந்தரத்தைக் காக்கும்படி சொல்லிவிட்டு அவர் உயிர் விட்டார். சிவாஜி ஒரு பெண்ணுக்குத் தோற்றுவிடுவாரா? முற்றுகை ஆரம்பமாயிற்று. இருபத்தேழு நாட்கள் போர் நடந்தது. உணவுப் பொருள்கள் செலவாகிவிட்டன. கோட்டைக் கதவைத் திறக்காவிட்டால் வழியில்லையென்பதை உணர்ந்து கதவைத் திறந்து தன் துணைவர்களுடன் சிவாஜியின் படைகள் மேல் பாய்ந்தாள். எதிர்த்தவர்களையெல்லாம் கொன்று குவித்தாள். தோல்வியையே அறியாத ராணியின் பெருமையை மகாராஷ்டிரர் கண்டனர். கடல் போன்ற படையின் முன் சில மனிதர் என்ன செய்ய முடியும்? கடைசியில் ராணியும் மெய்காப்பாளரும் மட்டுமே மிகுந்தார்கள். எதிரித் தலைவன் ஒருவன் ராணியினுடைய குதிரையின் கால்களை வெட்டினான். அந்த நிலையில் அருகில் இருந்த காட்டில் ராணி புகுந்தாள். உடலில் பல இடங்களில் காயம் ஏற்பட்டதால் அங்கேயே மூர்ச்சை அடைந்தாள். அப்பொழுது எதிரிகள் அவளைச் சிறைப்படுத்திச் சிவாஜியின் முன் கொண்டு போய் நிறுத்தினார்கள். பின்பு இரு சாராரும் நல்லபடியாக ஒப்பந்தம் செய்துகொண்டார்கள். பௌவடியை அடுத்த ஊர்களில் பல இடத்தில் இன்னும் வீரர்களுடைய நடுகற்களைக் காணலாம்.

சின்னம்மாஜி: கெளதி நாட்டின் கஷ்ட காலத்திலும், தன் ஒப்பற்ற வீரத்தாலும் தளராத தைரியத்தாலும் குற்றமற்ற அரசியல் ஞானத்தாலும் அதற்குப் புதிய களையை உண்டாக்கியவள் ராணி சின்னம்மாஜி. இவளுடைய கணவன் கடமையில் தவறியவன். இவள் சரியான ஹிந்து பதிவிரதையாகத் திகழ்ந்தாள். அரசனுடைய மரணத்தால் பல தொல்லைகளுக்கு உள்ளாகிய கெளதி நாட்டை ஆபத்தில் மூழ்காமல் காக்கக் கங்கணங் கட்டிக் கொண்டாள். விதவையான துக்கத்தை ஒரு புறம் ஒதுக்கினள்.

துணிவோடு ராஜ்ய பாரத்தை ஏற்று, நாட்டிலுள்ள கலவரத்தை நீக்கினள். அநியாயமாகத் தன் கணவனை சோமசேகர நாயகனைக் கொன்ற ஜின்னோபந்த் என்பவனைத் தகுந்தபடி பழி வாங்கினள். சின்னம்மாஜியின் கழுகுப் பார்வைக்குத் தப்ப முடியாதென்று கண்டு ஏமாந்த கலகக்காரர், ராஜ்யத்தையே இவளிடமிருந்து பறித்து விடச் சதி செய்தார்கள். தீர்க்கதரிசியான சின்னம்மாஜி ஊகத்தால் விஷயத்தை அறிந்து அவர்களுடைய பெயர்கூட இல்லாமல் அழித்துவிட்டாள். கி. பி. 1677-இல் புவனகிரி அரண்மனையில் இவளுக்கு முடிசூட்டினர்கள்.

சிவாஜியின் இரண்டாம் மகனை ராஜாராமனுக்கு இவள் இடங் கொடுத்ததால் ஒளரங்கஜேபின் உத்தரவு மூலம் அஜம்தாரா என்பவன் கணக்கற்ற சேனையுடன் இவளுடைய ராஜ்யத்தை வளைத்துக்கொண்டான். ராணியின் உழைப்பால் நல்ல தேர்ச்சி பெற்ற சைனியத்தின் முன் மொகலாயரின் கை வரிசை பயனற்றுப் போய்விட்டது.

ஒபவ்வா: ஒபி என்பவன் ஒரு சாமான்யப் பெண். ஒரு காவற்காரனுடைய மனைவி. கத்தி வீசிப் பழக்கம் இல்லை. எழுதப் படிக்கத் தெரியாத பாமரப் பெண். இப்படிப்பட்டவள் ஓர் உலக்கையை ஆயுதமாகக் கொண்டு சித்திரதுர்க்கம் என்ற கோட்டையைக் காப்பாற்றினள். இது நாடறிந்த செய்தி. அவள் காட்டிய உறுதியும் வீரமும் அவள் ஒரு பெண் என்பதையே மறக்கச் செய்துவிட்டன. சமூகத்தின் கட்டுப்பாடுகளுக்கு அடங்கிய சாதாரணப் பெண்ணாயிருந்தும் சர்வாதிகாரம் பெற்ற படைத்தலைவனைப் போல் அவள் போரிட்டு வீர சுவர்க்கம் பெற்றாள். அந்தப் போரில் கோட்டைக்குள் நுழைய முடியாமல் தோற்று ஹைதர் திரும்பி ஓடிவிட்டான்.

இப்படி அந்த நாளில் கன்னட நாட்டில் பல வீரப் பெண்மணிகள் கடமையைக் கைவிடாமல் உறுதியாக நின்று நாட்டைக் காப்பாற்றியிருக்கிறார்கள்.

### விசேஷச் சலுகைகள்

பிரத்தியேக அந்தஸ்தையும் சலுகையையும் நான் வெறுக்கிறேன். பொது ஜனங்களுடன் பகிர்ந்துகொள்ள முடியாத எதையும் தேசத் தொண்டன் பெற்றிருக்கலாகாது.

—காந்திஜி

# முப்பது வயதான மதம்

★

**இந்த இருபதாம் நூற்றுண்டிலேகூட ஒரு மதம் புதிதாய்த் தோன்றியிருப்பது ஆச்சரியமில்லையா? இது எங்கே தோன்றியிருக்கிறது தெரியுமோ? சைகோனுக்குக் கொஞ்ச தூரத்தில்தான். காலின் ஜாக்ஸன் என்பவர் சொல்லும் விவரங்களே இந்தக் கட்டுரைக்கு ஆதாரம்.**

காவோ டாய் மதம் என்பது உலகத்திலேயே மிகப் புதிய மதம்; மிகவும் விசித்திரமான மதம். இந்த மதம் தோன்றி முப்பதே வருஷந்தான் ஆகிறது. கிறிஸ்துவ மதம், பௌத்த மதம், கன்ஃபூஷஸ் மதம், டாவோ மதம் இப்படிப்பட்ட பல மதங்களின் கதம்பம் இது. இந்த விசித்திர மதம் இப்போது இந்தோசீனுவிலும், இதர ஆசிய நாடுகளிலும் பரவிக்கொண் டிருக்கிறது.

சைகோன் நகரத்துக்கு ஐம்பது மைல் வடக்கே டேனின் என்ற இடந்தான் இந்த மதத்தின் மூலஸ்தானம். டேனின் ஒரு பெரிய நகரம் அல்ல. பெரிதும் வளர்ந்த ஒரு கிராமம் என்றே அதைச் சொல்ல வேண்டும்.

இந்த மதத்தைப் பின்பற்றியிருக்கும் மக்கள் சுமார் 20-லட்சம் பேர். 20-ஆயிரம் வீரர்களைக் கொண்ட சேனை ஒன்று இதற்கு இருக்கிறது. இந்த மதம் கம்யூனிஸத்துக்கு விரோதமானது. ஆகவே, இந்த வீரர்களும் வியட்நாம் அரசரான பாவோ டாய் என்பவருக்கே கட்டுப்பட்டு நடக்கிறார்கள்.



பிரதம குருவின் சர்ப்ப சிம்மாசனம்

டேனின் கிராமத்துக்கு அப்பால், இந்த மதத்தினரின் புனித மலை ஒன்று ஓங்கி நிமிர்ந்து நிற்

கிறது. ஆனால், அந்த மலை இப்போது வியட்மின் 'சைத்தான்'களின் வசம் சிக்கியிருக்கிறதாம்!

காவோ டாய் மதத்தினரின் சேனை, ஜனநாயக ரீதியில் அமைந்ததாம். அதன் சாதாரண சோல்ஜர்களுக்கும் சரி, படை அதிகாரிகளுக்கும் சரி, ஒரே அளவான சம்பளமே கொடுக்கிறார்கள். தலைமைக் காரியாலயத்தில் உள்ள படை அதிகாரிகள் மிகவும் எளிய வாழ்வு வாழ்கிறார்கள். வாரத்தில் ஆறு நாள் தூங்குவது, மாதத்தில் பத்து நாள் உபவாசம் கிடப்பது இந்த இரண்டுந்தான் அங்கே இவர்கள் கடமை. வீரர்கள் அத்தனை பேரும் கண்டிப்பாகச் சைவ உணவே உண்கிறார்கள்.



பலவிதச் சிற்ப ரீதிகளும் கலந்த ஆலயம்

வி வான் ட்ரங் என்ற வியட்நாம்காரர்தான் இந்த மதத்தின் ஸ்தாபகர்; ஆதிகுரு. இதை ஸ்தாபிட்பதற்கு முன் சோலான் என்ற இடத்தில் அவர் ஆடம்பர போகங்களுடன் வாழ்ந்து வந்தார். பெரிய பணக்காரர். அபினிப் புகை குடிப்பதில் அவருக்கு மிக்க ஆனந்தம். 1925-இல் ஒரு நாள் இரவு நடந்த 'ஸேயாங்ஸ்' என்ற ஆவி ஆராய்ச்சிக் கூட்டம் ஒன்றில், பரம் பொருளின் தர்சனம் அவருக்குக் கிடைத்ததாம். அந்த நிமிஷத்திலிருந்தே, அவர் அடியோடு மாறிப் புது மனிதர் ஆகிவிட்டார். அபினி குடிப்பதை அறவே கைவிட்டார்.

நகரத்தை விட்டுக் கிளம்பினார். 'காவோ டாய்' என்ற பரம் பொருளின் கட்டளைப்படி, டேனின் என்ற கிராமத்தில், இந்தப் புது மதத்தை ஸ்தாபித்தார். பலபேர் அவருக்குச் சிஷ்யர்களானார்கள். 1934-இல் ஆதி குரு வி வான் ட்ரங் காலமாகிவிட்டார்.

இப்போது குருபீடத்தை வகிப்பவர் ஃபாம் காஸ் டாக். 'ட்ரி ஹ்யூ குவ்' (பிரகாச ஆவி அரண்மனை) என்ற சிறு கட்டிடத்தில் இவர் வகிக்கிறார். இந்த 'அரண்மனை' வாசல் வழியாகச் செல்கிறவரெல்லாம், பயபக்தியோடு இதற்கு வணக்கம் செலுத்திவிட்டே போகிறார்கள்.

காவோ டாய் ஆலயம் மிக்க விசித்திரமான கட்டிடம். விநோதச் சிற்பங்களும், பச்சை, மஞ்சள், நீலம், சிவப்பு ஆகிய பல நிறங்களும் அதில் செறிந்திருக்

கின்றன. பிரெஞ்சுக் கத்தோலிக்க மோஸ்தரில் இரண்டு கோபுரங்கள்; சீன ரீதியில் கதவுகள்; கோதிக் பாணியில் தூண்கள்! இப்படிப் பலவிதச் சிற்பக் கலவையாக இது விளங்குகிறது.

கோயிலுக்கு உள்ளே போனால், இன்னும் விசித்திரமாயிருக்கிறது. உள்ளே நுழைந்ததும் இருக்கும் மண்டபச் சுவரில் ஏதோ எழுதிக்கொண்டிருக்கிற மாதிரி மூன்று உருவங்கள் தென்படுகின்றன. அந்த மூன்றில் ஒன்று, பிரெஞ்சு காவலாசிரியர் விக்டர் ஹ்யூகோ; இன்னொன்று, பிரபல தலைவர் ஸன் யாட் ஸென்; மூன்றாவது, பதினாறும் நூற்றாண்டின் மகோன்னத வியட்நாம் கவிஞர் ங்குயென் பின் கியெம். இந்த மூன்று பேருமே காவோ டாய் மதத்தின் மகாத்மாக்கள். இவர்கள்தான் சூட்சும உலகத்தில் இருந்துகொண்டு இந்த மதத்தினருக்குச் செய்திகள் அனுப்புகிறவர்களாம்.

மைய மண்டபத்தில் வரிசையாகப் பல தூண்கள் நிற்கின்றன. ஒவ்வொன்றையும் பலவர்ண ராட்சச உருவம் ஒன்று இறுகக் கட்டிப் பின்னிக்கொண்டிருப்பது போல் அமைத்திருக்கிறார்கள். சிவப்பும் பச்சையும் மஞ்சளுமாய் அமைந்திருக்கும் அந்த உருவத்தின் நாவு செக்கச் செவேலென்று பயங்கரமாய் வெளியே நீட்டிக்கொண்டிருக்கிறது. அதன் தலை உப்பிப் பருத்திருக்கிறது. மேலே மச்சின் அடிப்புறம் லேசான நீலவர்ணமாயிருக்கிறது. லட்சக்கணக்கான சிறு சிறு நிலைக்கண்ணாடிகள் அதில் பதிந்து பளீர் பளீர் என்று நவரத்தினங்கள் போல் ஜொலித்துக்கொண்டிருக்கின்றன. அது ஏதோ மாய உலகம் போல்தான் பார்ப்பவருக்குத் தோன்றும்.

பிரார்த்தனைப் பீடத்துக்கு முன்னே ஒன்பது பெரிய மேடைகள் அமைத்திருக்கிறார்கள். இவைகளுக்கு எதிரே ஒன்பது உதவி குருமார்கள் அமர ஒன்பது பீடங்கள் இருக்கின்றன. அவைகளுக்கெல்லாம் மேலே பிரதம குருவின் சிம்மாசனம் அமைந்திருக்கிறது. அது ஏதோ ஏழு சர்ப்பங்களைக் கொண்டு பின்னிய கூண்டு போல் தோன்றுகிறது. அவைகளில் நான்கு பிரம்மாண்டமான சர்ப்பங்கள் தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டிருக்கின்றன. அவை தீய ஆவிகளாம். மூன்று சிறு சர்ப்பங்கள் தலையை உயர்த்தி நிமிர்ந்து நிற்கின்றன. அவை நல்ல ஆவிகளாம்.

சிம்மாசனத்துக்குப் பின்னே நூறடி நீளம் உள்ள மஞ்சள் திரைகளும் நீலத்திரைகளும் தொங்குகின்றன. அவைகளுக்கு அப்பால் அந்தரத்திலே மிதப்பதுபோல நீலகோளம் ஒன்று மங்கிய விளக்கொளியுடன் தொங்குகிறது. அதில் பல நட்சத்திரங்களை வரைந்திருக்கிறார்கள். அவைகளுக்கு நடுவிலே, மனிதனின் கண் போன்ற பெரிய உருவம் ஒன்றைத் தீட்டியிருக்கிறார்கள். அந்தக் கண் நம்மை உறுத்து விழித்துப் பார்ப்பது போல் அமைந்திருக்கிறது. அந்த விழிதான் இந்த மதத்தினரின் முக்கியமான சின்னமாம். அகில பிரபஞ்சத்தின் அகில மனச்சாட்சியை அந்த விழி குறிக்கிறதாம்.

கீழ்நாடு, மேல்நாடு இரண்டின் சகல மதங்களிலும் உள்ள சிறந்த உபதேசங்களையெல்லாம் ஐக்கியப்படுத்துவதே காவோ டாய் மதத்தின் நோக்கம். ஆவியுலக மகாத்

மாக்களிடமிருந்து வரும் செய்திகளைக் குறித்துக்கொள்வதற்காக கார்பீல்லி ஆ பெக் என்ற விசேஷ யந்திரம் ஒன்றை இந்த மதத்தின் பிரதம குரு வைத்திருக்கிறார். உதவி குருமாரில் ஒருவருக்காவது வேறு யாருக்காவது ஆவேசம் வரும். அப்போது அவர் இந்த யந்திரத்தை உபயோகித்து, மகாத்மாக்களின் செய்திகளைப் பெற்று எழுதிவிடுவாராம். இப்படிச் செய்தி கொடுப்பதில் முதன்மையான மகாத்மா, விக்டர் ஹ்யூகோ தானாம். இதனால் அவரையே பிரதம மகாத்மாவாக மதிக்கிறார்கள். அவர் காலமான பிறகு பதினொரு நாவல்களை எழுதி ஆவியுலகச் செய்தி மூலம் அளித்திருக்கிறாராம். அந்த நாவல்களை இவர்களுடைய லைப்ரரியில் காணலாம்.



மகாத்மாக்களான விக்டர் ஹ்யூகோ; ஸன் யாட் ஸென்; ந்குயென் பின் கியெம்.

அகில பிரபஞ்சத்திடமும் அன்பு செலுத்த வேண்டும்; மனித சமூகம் முழுவதும் சகோதர பாவத்தோடு வாழ வேண்டும்; பிராணிகளிடம் கருணை காட்ட வேண்டும்; செடி கொடி மரங்களிடமெல்லாம் நல்ல முறையில் நடந்துகொள்ள வேண்டும்-இவையெல்லாம் காவோ டாய் மதத்தின் முக்கியமான கொள்கைகள்.

முக்கிய மகாத்மாக்களைத் தவிர, வேறு பெரியோர்களிடமிருந்தும் ஆவியுலகச் செய்தி இவர்களுக்கு வருவதுண்டாம். முக்கிய மகாத்மாக்களுக்கு அடுத்தபடியாக ஜோன் அவ் ஆர்க் என்ற பிரபல பிரெஞ்சு வீரப்பெண்மணி, சாட்டோப்ரயாங் என்ற புகழ் பெற்ற பிரெஞ்சு ஆசிரியர் இவர்களிடமிருந்து செய்திகள் வருகின்றனவாம். அமெரிக்காவின் முதல் ஜனாதிபதியான வாஷிங்டன், பிரசித்தி பெற்ற மூந்திய ஜனாதிபதிகளில் ஒருவரான ஃப்ராங்க்ளின் ரூஸ்வெல்ட், மகாத்மா காந்தி இவர்களிடமிருந்தும் செய்திகள் வருவதுண்டாம். ஆனால் நாலாவது மகாத்மாவாக நியமித்துக்கொள்ளக் கூடிய அளவுக்குச் செய்தி அளிப்பவர், அழியாப் புகழ் பெற்ற ஆங்கில நாடகாசிரியர் ஷேக்ஸ்பியர் தானாம்.

ஷேக்ஸ்பியருக்கு அடுத்தபடி இடம் பெறக் கூடிய ஐந்தாவது மகாத்மா இன்றைய பிரிட்டிஷ் பிரதம மந்திரியான சர்ச்சில் என்

கிறார்கள். அவரை மகாத்மாவாகச் செய்வதற்கு அவர் சாகும்வரை காத்திருக்க வேண்டியதில்லையாம். அதற்குரிய மதச் சடங்குகளை இப்போதே நிறைவேற்றி விடலாமாம். இப்படி அவரை மகாத்மா ஆக்கிவிட்டால், பிரிட்டனுக்கு ஏராள நன்மை உண்டாகுமாம்.

வருங்காலம் எப்படி இருக்கும் என்று பிரதம குருவை ஒருவர் கேட்டார். இன்னும் இரண்டொரு வருஷங்கள் வரைக்கும் உலகத்திலே சங்கடங்கள் நிறைந்திருக்கும் என்று அவர் பதிலளித்தார். ஆனால் இருபது வருஷத்துக்குப் பிறகு உலகத்திலே நிரந்தர சமாதானம் ஏற்பட்டுவிடுமாம். அது அமெரிக்காவின் ஹைட்ரஜன் குண்டினால் ஏற்படப் போகிறதோ அல்லது மனித சகோதரத்துவ உணர்ச்சியால் ஏற்படப் போகிறதோ, யார் கண்டார்?

## கடமையும் அதன் எல்லையும்

பூதான யக்ஞத்தில் ஊழியர்கள் தங்கள் சக்தி முழுவதையும் செலவிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டபொழுது அநேக ஆண்டுகளாகப் பற்பல வேலைகளில் ஈடுபட்டிருக்கும் தொண்டர்கள் சொல்லுகிறார்கள்: "நாங்கள் இதுவரை செய்துகொண் டிருக்கும் வேலையும் புண்ணிய காரியந்தான். பல ஆண்டுகளாக இந்த வேலையைச் செய்து வருகிறோம். இதைச் செய்வது எங்கள் கடமை. பூதான வேலை உயர்ந்த தத்துவம் அடங்கியதே. நாங்கள் இதுவரை செய்த வேலையும் கீதையின்படி எங்கள் ஸ்வதர்மந்தான். ஆகையால், அதை விட்டுவிட முடியாது. பரதர்மம் எவ்வளவுதான் உயர்ந்ததாக இருந்தாலும், அதை எடுத்து நடத்த முடியாது."

இப்படிப்பட்ட நண்பர்களுக்கு ஒரு வார்த்தை கூற விரும்புகிறேன். கடமையைப்பற்றிக் கருதுவது ஓர் எல்லைக்குட்பட்டுத்தான் இருக்கவேண்டும். பகவான் கிருஷ்ணர் தம் வாழ்நாள் முழுதும் ஆயுதம் எடுத்துச் சண்டை செய்யச் சபதம் செய்தார். அவர் மிகவும் பராக்கிரமசாலியான வீரர். ஒரு தடவை, 'என்னுடைய பிரதிக்ஞையின் வரையறையை அறிந்துகொண்டேன். இனி ஆயுதம் எடுக்கப் போவதில்லை' என்று சபதம் செய்தார். இவ்விதம் சபதம் எடுத்துக்கொண்டு பாண்டவர்களுக்கு உதவியாகச் சண்டைக்குச் சென்றார். கடைசியில் அவரே ஒரு தடவை ஆயுதம் எடுக்க நேர்ந்தது என்று மகாபாரதம் கூறுகிறது. புண்ணிய காரியம் என்றும், கடமை என்றும் கருதும் ஒரு வேலை ஓர் எல்லைக்குட்பட்டுத்தான் இருக்க முடியும். சில மாதங்களுக்குப் பின் அதையே ஓர் இடையூறாகக் கருத வேண்டி வரும்.

—விநோபா பாவே

ஊறியிருப்பதால் அப்புறம் இந்த நோயே நாய்க்கு வராது.

இந்த 'வாக்ஸின்' பாலைக் கண்டு பிடித்த விதம் இதுதான்: 1939-இல் அமெரிக்காவில் ஜார்ஜியா மாகாணத்திலுள்ள மக்கன் என்ற ஊரில் ஃப்ளூரி என்ற ஒரு பெண் குழந்தை நாய்க்கடியால் இந்த நோய் கண்டு இறந்துவிட்டாள். பிறகு அவள் பெற்றோர் ராக்ஃபெல்லர் நிலையத்தில் இது சம்பந்தமாக ஆராய்ச்சி செய்யும் விஞ்ஞானிகளிடம் தங்கள் பெண்ணின் மூளையைப் பரிசோதிக்க அநுமதித்தார்கள்.

அங்கே இருந்த டாக்டர் ஹரால்டு என். ஜான்ஸன் என்பவர் நோய்க் கிருமி ஊறிய தசைப் பகுதி ஒன்றை அந்த மூளையிலிருந்து எடுத்தார். முட்டை பொறித்து ஒரே நாளான கோழிக் குஞ்சு ஒன்றின் மூளையில் அதை இஞ்செக்ஷன் செய்தார். அது இறந்ததும் அந்தக் குஞ்சின் தசையை மற்றொன்றுக்கு இஞ்செக்ஷன் செய்தார். இப்படியே ஒவ்வொரு கோழிக் குஞ்சாக மொத்தம் 136 குஞ்சுகளுக்கு இந்த நோய்க் கிருமியைத் திரும்பத்திரும்ப இஞ்செக்ஷன் செய்து கொண்டே போனார்.

எல்லாம் செத்துவிட்டன; என்றாலும், இதில் ஒரு விசேஷம் இருப்பதைத் தெரிந்துகொண்டார் டாக்டர் ஜான்ஸன்.

நோய்க் கிருமி ஊறிய ஃப்ளூரி என்ற பெண்ணின் தசையை இஞ்செக்ஷன் செய்ததால் சுண்டெலி, முயல், நாய் இவைகளுக்கு அந்த நோய் கண்டாலும், அவை கடித்து மறுபடியும் நோய் பரவி யாருக்கும் ஓர் ஆபத்தும் ஏற்படவில்லை. இவைகளின் வாயில் ஊறின எச்சிலில் இந்தக் கிருமி இராமல் போனதே இதற்குக் காரணம்.

இன்னும் பல ஆண்டுகள் இப்படிப் பலர் இதைப் பரிசோதித்தார்கள். 'ஃப்ளூரி ஸ்ட்ரெயின்' என்ற இந்த நோய்க்கிருமிப் பாலை ஒன்றிலிருந்து மற்றொன்றுக்குத் திரும்பத் திரும்பத் தொடர்ச்சியாகச் சில பிராணிகளுக்குச் செலுத்தச் செலுத்த நோயின் வீரியமே குன்றிக் கடைசியில் அவை யாரையாவது கடித்தாலும் ஓர் ஆபத்துமே நேராது என்ற நிலை ஏற்பட்டது.

புதிய 'வாக்ஸின்' பாலை நாய்களுக்கு இஞ்செக்ஷன் செய்ததில் குறைந்த பட்சம் மூன்று ஆண்டுகளுக்கு-சில சமயம் நாலு ஆண்டுகள் வரையில்கூட-இந்த நோய் வராமல் பாதுகாத்தது.

பிறகு உலகத்திலுள்ள இன்னும் பல ஆராய்ச்சிச்சாலைகளில் இதை இன்னும் விரிவாகப் பரிசோதித்தார்கள். ஐக்கிய அமெரிக்காவில் பல ஜாதியைச் சேர்ந்த, 50,000 நாய்களுக்குமேல் இப்படி இஞ்செக்ஷன் செய்ததில் நல்ல பலன் ஏற்பட்டது.

நாய்களுக்கு இந்த நோயே வராதபடி தடுத்து விடுகிறது இந்த 'வாக்ஸின்' பால். "ஓர் இடத்தில் முக்கால்வாசி நாய்களுக்கு இப்படிக் குத்தி ஏற்றி விட்டாலே அப்புறம் அங்கே இந்த நோய் தலை காட்டுவதில்லை" என்று அமெரிக்கச் சுகாதார அதிகாரிகள் சொல்லுகிறார்கள்.

தப்பித் தவறி இந்த மாதிரி நோய் கண்ட நாய் கடித்துவிட்டால், சமீபத்தில் ஆராய்ந்து கண்டு பிடித்துள்ள 'ஸுபர்ஸீரம்' என்ற ஒரு வகைப் பாலையும் பாஸ்

டர் முறைப்படி தயாரித்த நாய்க் கடி 'வாக்ஸி'னையும் சேர்ந்தாற் போல் உடனே குத்திக்கொண்டு விட வேண்டும்; நாய்க்கடி நோய்க் கிருமிகளுக்கு மாற்றான 'ஆண்டி பாடீஸ்' என்ற சில எதிர்ப்புப் பொருள்கள் விரைவில் உடம்பில் உற்பத்தியாகிக் கிருமிகளை வலுக்க விடாமல் தடுத்துவிடும். நாய் கடித்து 72 மணி நோத்துக் குள்ளாக, இப்படிக் குத்திக் கொண்டுவிட வேண்டும்; அப் போதுதான் பலன் கிட்டும்.

இப்போது இந்த 'ஸுபர் வீரம்' மிதமான அளவிலேயே தயாரிப்பதால், சுகாதார அதிகாரி களே மிகவும் ஆபத்தான 'கேஸ்' களுக்கு உதவும்படி கேட்டால் தான், இதைக் கொடுக்கிறார்கள். ஐக்கிய அமெரிக்காவிலுள்ள டெக் ஸாஸ், மிசிகன் என்ற ஊர்களில் இரண்டு பெண் குழந்தைகளை வெறி நாய் கடித்து அவர்களுடைய உயி ருக்கே ஆபத்தாகிவிடும்போல் இருந்தது. அந்தச் சமயத்தில் இருந்த 'வீர'த்தை உபயோகித் தார்கள்; குழந்தைகள் விரைவில் தேறிவிட்டன.

இந்த 'ஸுபர்வீர'த்தின் மூலம் சிகிச்சை பெறும் புது முறை சில வருஷங்களில் உலகெங்கும் பிரபல மாகிவிடலாம்.

## எஞ்சினீரிங் பசு

ஐக்கிய அமெரிக்காவில் உள்ள மன்ஹாட்டன் தீவில் ஹட்ஸன் நதிக்கரையில் உள்ள ஒரு குன்றின் உச்சியில் வி. கே. ஜி. பில்லிங் என்ற கோடீசுவரர் ஒரு மாளிகை கட்டினார். செங்குத்தான அந்தக் குன்று கரடுமுரடுகள் நிறைந்திருந்தது. உச்சியில் உள்ள மாளிகைக்கு எந்த வழி யாக ரஸ்தா அமைப்பது என்று புரியாமல் கோடீசுவரர் திகைத்தார். இதுபற்றி ஒரு நண்பரை யோசனை கேட் டார்.

"இதென்ன பிரமாதம்! ஒரு பசுவைப் பிடியுங்கள். அது உதவி செய்யும்" என்றார் நண்பர்.

"பசுவையா?" என்றார் ஆச்சரியத்துடன் கோடீசுவரர்.

"ஆமாம், குன்றின் உச்சியில் ஒரு தொழுவம் அமைத்து அதில் பசுவைக் கட்டுங்கள். தினந்தோறும் பசுவைக் குன் றின் அடிவாரத்துக்குக் கொண்டுவந்து விட்டுவிடுங்கள். அது மேய்ந்துவிட்டு, தானாகக் குன்றின் உச்சிக்கு வழி கண்டுபிடித்துச் செல்லும். கொஞ்ச நாளில் மிகவும் சுலப மான வசதியான பாதை ஒன்றைப் பசு வகுத்துவிடும்" என்று விளக்கினார் நண்பர்.

கோடீசுவரர் அந்த யோசனைப்படியே செய்தார். வளைந்து வளைந்து செல்லும் சொகுசான பாதை ஒன்றைப் பசு வகுத்துவிட்டது. அப்படியே அதில் கப்பி போட்டு அழகான ரஸ்தா ஆக்கிவிட்டார் கோடீசுவரர்.

—'வால் ஸ்ட்ரீட் ஜர்னல்'

# நாய்க்கடிக்குப் புது மருந்து

★

**ததீசி முனிவர் தம் எலும்பை வஜ்ராயுதம் செய்யக் கொடுத்தார் என்பது புராணக் கதை. ஒரு சிறு பெண்ணின் மூளையே இந்தப் புது மருந்துக்கு மூலமாக உதவியிருக்கிறது. இந்த வரலாற்றுக்கு ஆதாரம் 'காரொனெட்'டில் டேனியெல் பி. லீ என்பவர் எழுதியுள்ள விவரம்.**

நம் நாட்டிலும் சரி, பிற நாடுகளிலும் சரி, வெறி பிடித்த நாய்கள் கடிப்பதால் ஒரு விதமான பயங்கர நோய் கண்டு அநேகம் பேர் அவதிப்படுகிறார்கள்.

சில ஆண்டுகளுக்கு முன், இஸ்ரேல் ராஜ்யம் ஏற்பட்ட புதிதில் அங்கே இந்த நோய் கண்டது. அந்த நாட்டின் சுகாதார அதிகாரிகளுக்கு இதுவே பெருந் தொல்லை யாகிவிட்டது. இரண்டு ஆண்டுகளுக்குள் இப்படிக் கடிபட்டவர் சுமார் 4,000 பேருக்கு மேல் பாஸ்டர் முறைப்படி சிகிச்சை பெற்று வந்தார்கள்; மிகவும் நிதானமாக நடக்கும் சிகிச்சை முறை அது. நாள் ஒன்றுக்கு 14 இஞ்செக்ஷனுக்குக் குறையாமல் செய்து கொள்ள வேண்டியிருக்கும். சில சமயம் 21 இஞ்செக்ஷன்கூடச் செய்துகொள்ள வேண்டி யிருக்கும். ஆனால் இதற்குள் நோய்க் கிருமி உள்ளே பெருகி யிருந்தால், இவ்வளவு சிரமப்பட்டுச் சிகிச்சை செய்தும் பலன் இராமல் போய்விடலாம். நாய்க்கடி பட்டவர்கள் உடனடியாகச் சிகிச்சை செய்துகொள்ளாவிட்டால் மிகவும் ஆபத்து; வெறி பிடித்துப் பயங்கரமாகச் சாவார்கள்.

இந்த நோய் பரவாதிருக்கத் துணைபுரிய வேண்டுமென்று இஸ்ரேல் சர்க்கார், உலக சுகாதார ஸ்தாபனத்தைக் கேட்டுக்கொண்டது. அந்த ஸ்தாபனத்தார் புது வித 'வாக்ஸின்' பால் ஒன்றைத் தயாரித்து உதவினார்கள். இந்த 'வாக்ஸின்' பாலை இதற்கு முன் பெரிய அளவில் உபயோகித்ததில்லை.

வெறி பிடித்த நாய்கள் தானே பெரும்பாலும் இந்த நோய்க்குக் காரணம்? ஆகவே, மொத்தம் எத்தனை நாய்கள் இருக்கின்றன என்று கணக்கிட்டார்கள். ஒவ்வொன்றுக்குமே இந்த 'வாக்ஸின்' பாலை இஞ்செக்ஷன் செய்தார்கள். நல்ல பலன் கிட்டியது. ஒரே ஆண்டுக்குள் இந்த நோய் கண்ட நாய்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்துவிட்டது. நாய்க் கடியால் ஓர் ஆசாமிகூடச் சாகவில்லை.

வைசூரி, காலரா, டிஃப்திரியா முதலிய கொள்ளை நோய்கள் வராதபடி காக்க முன்னெச்சரிக்கையாகவே அம்மை முதலியன குத்திக்கொள்வது போலத்தான் இதுவும் பயன்படுகிறது. நாய்களுக்கு இந்த நோய் வருவதற்கு முன்பே இந்தப் பால் உடம்பில்

# திருவாரூர் முத்துசாமிப் பிள்ளை

ஏ. கே. செட்டியார்

'உலகம் சுற்றும் தமிழன்' எழுதிய ஸ்ரீ செட்டியாரின் பிரயாணக் கட்டுரை என்றால் ஆர்வத்துடன் படிக்காத தமிழர் எவரும் இரார். சமீபத்தில் மற்றுமொரு முறை அமெரிக்கா சென்று விட்டுத் திரும்பியுள்ள அவர் 'குமரி மல'ரில் தம் அனுபவங்களை எழுதி வரத் தொடங்கியிருக்கிறார். அந்த வரிசையில் ஒன்று இது.

தென் அமெரிக்காவில், பிரிட்டிஷ் கயானாவில், ஜார்ஜ்டவுனில் என் ஹோட்டலின் முன்னால் இருந்த சிறிய தோட்டத்தில் உலாவிக்கொண்டிருந்தேன்.

வயதான ஓர் இந்தியர், மெள்ள நடந்து என்னிடம் வந்தார். "தாங்கள் இந்த ஊருக்குப் புதிய ஆள் போலத் தோன்றுகிறதே?" என்றார். "ஆம், ஐயா" என்று பதில் கூறினேன். "இந்தியாவில் எந்தப் பகுதியிலிருந்து வருகிறீர்கள்? என்ன பாஷை பேசுகிறீர்கள்?" என்றார்.

"சென்னை மாகாணம். பேசுவது தமிழ். செட்டியார் என்பது என் பெயர்" என்றேன். இதுவரை நடந்த பேச்செல்லாம் ஆங்கிலத்தில்.

அந்தப் பெரியவர் என் கைகளை இறுகப் பிடித்துக் கொண்டார். முகத்திலே மகிழ்ச்சி. கண்கள் பிரகாசித்தன. என்னை அன்புடன் நோக்கி, நல்ல சோழ நாட்டுத் தமிழிலே, "செட்டியார் ஐயா, என் பெயர் முத்துசாமிப் பிள்ளை. என் சொந்த ஊர் திருவாரூர். உங்களைப் பார்க்க ரொம்ப சந்தோஷம்" என்றார்.

என்னைப் பார்த்ததில் அவருக்கு எவ்வளவு சந்தோஷமோ அவ்வளவு சந்தோஷம் எனக்கும் அவரைப் பார்த்ததில். "ஐயா, தாங்கள் ஒரு வார்த்தை சொல்லி அனுப்பியிருந்தால் தங்களை வீட்டில் வந்து பார்த்திருப்பேன். இவ்வளவு வயதான தாங்கள் இவ்வாறு என்னைப் பார்க்க வருவது முறையல்ல" என்றேன்.

"எனக்கென்ன வயதாகி விட்டது? எழுபத்தாறு வயது தான் ஆகிறது. இன்றுதான் [illegible] தாக ஒரு வாக்ஸால் கார் வாங்கினேன். நாளைய தினம் அது வீட்டுக்கு வந்துவிடும். இந்த ஊரை நான்தான் உங்களுக்குச் சுற்றிக் காட்டப் போகிறேன்" என்று கூறி, மறு நாள் பகல்

காப்பிரைட்: குமரி மலர் (தமிழ்: ஜூலை '54), மௌப்ரேஸ் ரோடு, ராயப்பேட்டை, சென்னை.

தம் வீட்டுக்குச் சாப்பாட்டுக்கு நான் வரவேண்டும் என்றார்.

தாமஸ் தெரு, 271-ஆம் நம்பர் வீட்டில் வசிக்கிறார் முத்துசாமிப் பிள்ளை. வீட்டின் முன்புறமும் பின்புறமும் சிறு தோட்டம். அவரும் அவர் மனைவியும் காய்கறி பயிரிடுகிறார்கள். நல்ல பூஞ்செடிகளும் இருக்கின்றன. மாடி வீடு. மரத்தால் கட்டியது. கீழ் வீட்டில் மோட்டார் ஷெட், பழைய சாமான் அடையும் கிட்டங்கி. மேல் மாடியில் சிறிய ஹால், ஒரு படுக்கையறை, விருந்தினர் தங்கும் இடம், சாப்பிடும் இடம், சமையலறை, குளிப்பதற்கும் மற்றச் சௌகரியங்களுக்கும் உள்ள நாகரிக வசதிகள், நல்ல ரேடியோ, பெரிய பிரிஜிடேர், வசதியான சோபாக்கள், முத்துசாமிப் பிள்ளைக்காகத் தனியான ஒரு சாய்வு நாற்காலி.

தோட்டத்தில் வேலை பார்த்துக்கொண் டிருந்த முத்துசாமிப் பிள்ளை, என்னைக் கண்டதும் அவசரமாக வந்து வரவேற்றார். சிறிது நேரத்துக்கெல்லாம் அவருடைய மனைவியாரை அறிமுகப்படுத்தி வைத்தார். ''இந்த அம்மாள் பெயர் மீனாட்சி. இவள்தான் என் மனைவி. இவள் இங்கே பிறந்தவள்; தமிழ் நன்றாகத் தெரியாது; கொஞ்சம் பேசுவாள். இவள் தாயாரும் நானும் ஒரே கப்பலில் வந்தவர்கள்'' என்றார் பிள்ளை.

சிறிது நேரத்துக்கெல்லாம் சாப்பாடு தயாராயிற்று. அருமையான சாப்பாடு: நல்ல பருப்பு மசியல், கறியும் சோறும், ரசம், மசாலாவடை, சூயம். எல்லாம் சுடச் சுடவும் ருசியாகவும் இருந்தன. தாய் நாட்டை விட்டுப் பன்னிரண்டாயிரம் மைலுக்கு அப்பால் இருக்கும்பொழுது இதை விட வேறு என்ன வேண்டும்?

''செட்டியாரே, சாப்பாட்டுக்குப் பிறகு நல்ல சங்கீதம் கேட்க வேண்டாமா?'' என்றார் பிள்ளை.

''நல்லது'' என்றேன்.

ஐந்தாறு கிராமபோன் ரிகார்டுகளைக் கொண்டு வந்தார். 1902-ஆம் வருஷத்தில், அவர் பிரிட்டிஷ் கயானா வந்தபொழுது இவைகளை வாங்கி வந்தார். ஒன்றும் உடையாமல், ரிகார்டின் மேலுள்ள எழுத்துக்கள்கூட அழியாமல், பத்திரமாக இருந்தன. சாமான்களைப் பேணி வைத்துக்கொள்வதில் அவருக்கு இணை அவரே தான்! சமீபகாலத்தில் வந்த ரிகார்டுகள் சில இருக்கின்றன என்று கொண்டு வந்தார். இவை 1915-ஆம் வருஷத்தில் வாங்கிய ரிகார்டுகள்! யாரோ ஒரு நண்பர் இந்தியா சென்றபொழுது சொல்லி யனுப்பினாராம். அவர் வாங்கி வந்த ரிகார்டுகள் இவை. இவை என்ன மாதிரியான ரிகார்டுகள் என்று ஒரு வேளை நீங்கள் தெரிந்துகொள்ள விரும்பலாம். இதுதான் விவரம்:

1. பத்தினி கன்னகையே
   T. S. கிட்டுப் பிள்ளை
   மாலையோக முத்து
   T. K. ராமசாமி
2. போம் போம் இதுவும் கனமா
   ராம நீ சமானம்
   T. நாராயணசாமிப் பிள்ளை
3. வடிவேல் முருகா
   தாயுமானவர்
   A. K. தம்பி முத்து
4. கொழுக்கட்டை
   குடும்பச் சண்டை
   C. S. சாமண்ணா
5. தாலுகா கோர்ட் சீன்
   C. S. சாமண்ணா

6. குடு குடுப்புக்காரன்
C. S. சாமண்ணு
7. உன்னையும் இக் கெதி
(அரிச்சந்திரன்)
நீயே சகாயமென
T. S. கிட்டுப் பிள்ளை
8. வருகிறேன் என்று போன
T. S. கிட்டுப் பிள்ளை
உத்தம குண பரதா
T. K. ராமசாமிப் பத்தர்
9. ஓடே இரு புறமே குட்டி
ஜோக்கு ஜோக்குத்தான்
குட்டி
P. மாணிக்கம் பிள்ளை

* * *

அடுத்த வாரம் மறுபடியும் முத்துசாமிப் பிள்ளையின் வீட்டுச் சாப்பாட்டுக்குப் போயிருந்தேன்.

"செட்டியார் என்ன குலம்?" என்றார்.

"இந்தியா, ஜாதி வேற்றுமை இல்லாத தேசமாக இப்பொழுது உருவாகி வருகிறது. எல்லோரும் இந்தியர் என்றே கருத வேண்டும். யாரையாவது உங்கள் குலம் என்னவென்று கேட்பது அவரை அவமானப்படுத்துவது போல் ஆகும்" என்றேன்.

அதற்குப் பிள்ளை, தாம் பழைய காலத்து ஆள் என்றும், வித்தியாசமாகக் கருதிக் கேட்கவில்லை என்றும் கூறினார். பிறகு அவர் உற்சாகமாக, "அந்தக் காலத்தில் என் குலம் என்ன என்பதைச் சொல்கிறேன்.

'கள்ளர் மறவர்
கனத்ததோர் அகம்படியர்
மெள்ள மெள்ள வந்து
வேளாளர் ஆகிவிட்டார்.'

அந்த வேளாளன் நான்" என்றார். அவர் இந்தப் பாட்டை ராகத்துடன் நன்றாகப் பாடியது எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

அவருக்கு உற்சாகம் அதிகமாயிற்று. தம் வரலாற்றைக் கூற ஆரம்பித்தார்:

"எனக்குச் சொந்த ஊர் திருவாரூர். நீங்கள் போயிருக்கிறீர்களா? அங்கே பெரிய தேர் இருக்கிறது!

"என் தகப்பனார் பெயர் சுந்தரம் பிள்ளை. என் சிறு வயதிலேயே அவர் காலமானார். என் தாயார், என் அண்ணனையும் என்னையும் கூட்டிக்கொண்டு 1885-ஆம் வருஷத்தில் இந்தத் தேசத்துக்கு ஒப்பந்தக் கூலி முறையில் வந்தார். அப்பொழுது எனக்கு வயது எட்டு.

"என் தாயாரும் அண்ணனும் பட்ட கஷ்டங்கள் அதிகம். எங்கே பார்த்தாலும் காடுதான். இப்பொழுது நாம் இருக்கும் இந்த இடங் கூட ஒரே காடு. 1900-ஆம் வருஷத்தில் என் தாயார் இந்தியா திரும்பினாள். அண்ணனும் நானும் கூடவே சென்றோம். திருவாரூரில் ஒரு வருஷம் தங்கினோம். நான் மாட்டுவண்டி ஓட்டினேன். தினந்தோறும் கூலி இரண்டணா. இதைக் கொண்டு பிழைக்க முடியவில்லை. என் அண்ணனும் நானும் பட்டணத்துக்கு வந்து வண்ணாரப்பேட்டையில் கூலி வேலை செய்தோம். அந்தக் கஷ்டங்களை ஏன் கேட்கிறீர்கள்? சாப்பாடுகூடச் சரியாகக் கிடைக்கவில்லை. 1902-ஆம் வருஷத்தில் அண்ணனும் நானும் ஒப்பந்தக் கூலிகளாக இந்தத் தேசத்துக்கு வந்தோம்.

"கரும்புத் தோட்டம் ஒன்றில், ஒரு துரைக்கு வேலைக்காரப் பையனாக அமர்ந்தேன். அவர் தான் தோட்டத்துக்குப் பெரிய துரை. அவருக்குக் கீழே பல

துரைகள். அப்பொழுது தோட்டங்களில் பார்பர் சலூன் கிடையாது. ஒரு சீனன் பதினைந்து நாளைக்கு ஒரு முறை வந்து துரைகளுக்கு மயிர் வெட்டிவிடுவான். சீனன் மயிர் வெட்டும்பொழுது அக்கறையாகக் கூர்ந்து கவனித்து வந்தேன். நானும் ஒரு கத்தி, கத்தரிக்கோல் வாங்கி, என்னைப் போலுள்ள பையன்களுக்கெல்லாம் மயிர் வெட்டிப் பழகினேன்.

"ஒரு மாதம் சீனன் தோட்டத்துக்கு வரவில்லை; என் துரைக்கு மயிர் வளர்ந்துவிட்டது. அவரிடம் சென்று மயிர் வெட்டுவதாகக் கூறினேன். அவருக்கு என்மேல் பிரியந்தான் என்றாலும், எனக்குச் சரியாக மயிர் வெட்டத் தெரியாது என்று கருதிச் சிரித்தார். எனக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுக்கும்படி கெஞ்சிக் கேட்டுக் கொண்டேன். அரைகுறை மனத்தோடு அவரும் சம்மதித்தார். நான் நன்றாக மயிர் வெட்டியதில் அவருக்கு மிகவும் திருப்தி. என்னைத் தட்டிக் கொடுத்து உற்சாகப்படுத்தினார். மற்றத் துரைகளுக்கும் என் திறமையைக் குறித்துக் கூறினார். அவர்களுக்கும் மயிர் வெட்டினேன். என் புகழ் இந்த விதமாகப் பரவியது.

"சில நாள் கழித்து, சீனன் தோட்டத்துக்கு வந்தான். எல்லோருக்கும் மயிர் ஏராளமாக வளர்ந்திருக்குமென்றும், தனக்கு நல்ல வரும்படி கிடைக்குமென்றும் கருதினான். இங்கே வந்து பார்த்தால் எல்லோருக்கும் மயிர் வெட்டியாகியிருந்தது. அவனுக்கு விஷயம் தெரிந்தது. என்னிடம் வந்து கோபமாக, 'நீ போக்கிரிப் பயல். நான் கிராப் வெட்டும் பொழுது நீ கூர்ந்து கவனித்ததைப் பார்த்தபொழுதே எனக்குச் சந்தேகம். கடைசியாக என் பிழைப்பில் மண்ணைப் போட்டுவிட்டாய்' என்றான்.

"என் புதுத் தொழிலில் கொஞ்சம் வருமானம் கிடைத்தது. ஆனால் விருத்திக்கு வழியில்லை. ஆகவே, பட்டணத்துக்கு (ஜார்ஜ் டவுனுக்கு) வந்து ஒரு கடை திறந்தேன். ஒன்று இரண்டாயிற்று; இரண்டு மூன்றாயிற்று. கடைசியில் ஐந்து கடைகள்; நல்ல வருமானம். அந்தத் தொகையை வட்டிக்குக் கொடுத்துப் பெருக்கினேன். பிறகு சொத்துக்கள் வாங்கினேன். பதினைந்து வருஷமாகத் தொழிலை விட்டுவிட்டேன். இப்பொழுது ஓய்வு எடுத்துக் கொள்கிறேன்" என்றார்.

பிரிட்டிஷ் கயானாவில் பல இந்திய அரசியல் தலைவர்களைச் சந்தித்தேன். இவர்கள் அரசியலில் மாறுபட்ட அபிப்பிராயம் உடையவர்கள். ஆனால் முத்துசாமிப் பிள்ளையைப்பற்றி ஒரே விதமான அபிப்பிராயம் கூறினார்கள். அவர்கள் கூறியது இதுதான்: "முத்துசாமிப் பிள்ளை கண்ணியமான மனிதர்."

* * *

மறுமுறை முத்துசாமிப் பிள்ளையின் வீட்டுக்குச் சாப்பிடச் சென்றேன். எத்தனை முறை அவர் வீட்டில் சாப்பிட்டேன் என்று எனக்கே தெரியாது. கடைசியாக விடை பெறுவதற்காகச் சென்றேன். தம்முடன் அன்றிரவு தங்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். சாப்பாட்டுக்குப் பிறகு, "செட்டியாரே, நாளையதினம் நீங்கள் இந்த ஊரை விட்டுப் போகிறீர்கள். எனக்கோ வயதாகிவிட்டது. மறுபடியும் சந்

திக்கக் கொடுத்து வைப்பேனே என்னவோ தெரியவில்லை. எனக்கு ஒரே ஓர் ஆசை. அதைத் தாங்கள் பூர்த்தி செய்யவேண்டும்'' என்றார்.

''என்னால் இயன்றவரை முயன்று பார்க்கிறேன்'' என்றேன்.

''எனக்கு ஒரு நல்ல கதை சொல்லுங்கள்'' என்றார்.

எனக்குத் தூக்கிவாரிப் போட்டது! கதை சொல்லும் பழக்கம் எனக்கில்லை. யாரும் என்னைக் கதை சொல்லும்படி கேட்டதும் இல்லை. ஏதோ ஒரு கதை - பஞ்ச தந்திரக் கதையென்று நினைக்கிறேன் - சொன்னேன். ஒரு குழந்தையைப் போல ஆர்வமாகக் கேட்டார்.

''நல்ல தமிழ் கேட்டு நாளாகி விட்டது. முப்பது வருஷத்துக்கு முன் திவான்பகதூர் கேசவப் பிள்ளை அவர்கள் இங்கே வந்தார்கள். அப்புறம் தமிழ் பேசுகிறவர்களில் நீங்கள்தான் இங்கே வந்திருக்கிறீர்கள். நீங்கள் என்னுடன் தங்கி, அருமையான தமிழில் பேசியது என் பாக்கியம்.

''எனக்குத் தமிழ் பேசவேண்டுமென்று ஆசை ஏற்படும்பொழுது மார்க்கெட்டுக்குச் செல்வேன். கூலி வேலை செய்யும் தமிழர் ஒருவர் அல்லது இருவர் அங்கே வருவார்கள். அவர்களை நிறுத்தித் தமிழில் பேசுவேன். அவர்கள் பேசுவது கொச்சைத் தமிழ்தான். என்றாலும், அதைக் கேட்கச் சந்தோஷமாக இருக்கும். அவர்கள் தங்கள் வேலையை விட்டுவிட்டு என்னுடன் பேசிக்கொண்டிருந்தால் அவர்கள் கூலி போய்விடுமல்லவா? அதற்காக அவர்களுக்கு நான் காசு கொடுப்பேன்'' என்றார்.

மறுநாள் முத்துசாமிப் பிள்ளையிடம் விடை பெற்றேன். என் கைகளை இறுகப் பிடித்துக் கொண்டு, உள்ளம் உருக விடை கொடுத்தார்.

எங்கள் கண்கள் கலங்கின.

## இன்னுமா எழுத விரும்புகிறீர்கள்?

லின்லினட்டி நகரில் உள்ள முன்னேற்ற எழுத்துப் பயிற்சி அளிக்கும் கலாசாலை ஒன்றில், புதிதாய் வந்து சேரும் மாணாக்கர்களைப் பரீட்சிக்கும்போது, இந்த விசித்திரக் கேள்வியைக் கேட்கிறார்கள்:

''கோலரிட்ஜ் கஞ்சா தின்றார். ஆலன் போ மதுபானம் செய்தார். மார்லோ மோசடியாய்க் கொல்ல முயன்ற ஓர் எதிரி, அவரையே கொன்றுவிட்டான். போப் ஒரு பெண்ணின் பெயரைத் தம் கேலிக் கதை ஒன்றில் சேர்க்காது விட லஞ்சம் வாங்கிக்கொண்டார்; அப்படியும் அவளே என்று யாரும் ஊகித்துவிடக்கூடியபடி ஒரு பாத்திரத்தை அதில் நுழைத்துவிட்டார். சாட்டர்ட்டன் தற்கொலை செய்து கொண்டார். பைரன் துன்மார்க்கரென்று குற்றம் சுமத்தப் பெற்றார். இன்னுமா நீர் எழுத்தாளர் ஆக விரும்புகிறீர்? அப்படியானால், என்?''

—'ஆம்னிபுக்'




# யானைக் குட்டியின் பிறப்பு

**காட்டு யானைகளுக்குள்ளேதான் இந்த நிகழ்ச்சி எவ்வளவு பெரிய வைபவமாயிருக்கிறது! இந்தக் கட்டுரையை எழுதியிருப்பவர் இலங்கையின் வன ஜந்து பரிபாலன அதிகாரிகளுள் ஒருவர்.**

நான்கு சந்தர்ப்பங்களில் நான் காட்டு யானையின் பிரசவத்தைக் கண்டிருக்கிறேன். மாணிக்க கங்கையின் படுக்கை, தல்கஸ்மன்கட எலிய, கட்டகமுவக் குளம், குடசிலாவ ஆகிய இடங்களில் முறையே கிட்டத்தட்டக் காலை 10 மணி, மாலை 4 மணி, காலை 6 மணி, காலை 8 மணி நேரங்களில் இந்தச் சம்பவங்கள் நிகழ்ந்தன. இந்த இடங்கள் எல்லாம் யாலவன ஜந்து பரிபாலனப் பிரிவைச் சேர்ந்தவை. குடசிலாவ பரவைக் கடலில் தான் இந்த நிகழ்ச்சியை நான் மிகவும் தெளிவாகவும் அருகிலிருந்தும் பூரணமாகவும் கண்டேன்.

ஒரு நாள் காலை சுமார் 8 மணிக்கு நான் அங்கே இருக்கும்போது காட்டுக்குள்ளிருந்து ஒன்பது யானைகள் பரவைக் கடலைச் சுற்றியுள்ள திறந்த வெளிக்கு வந்தன. அருகில் இருந்த ஒரு கற்பாறையின் மேல் நான் எறிக்கொண்டேன். இந்த யானைகளில் ஒன்று (அதாவது பின்னால் குட்டி ஈன்ற பெண் யானை) முழங்காலிட்டு மெதுவாக ஒரு பக்கமாகச் சாய்ந்து கால்களை

ஸ்ரீலங்கா (தமிழ்: ஜூலை '54), கொழும்பு, இலங்கை.

நீட்டிப் படுத்துப் பல நிமிஷ நேரம் அப்படியே இருந்தது. மீதி எட்டு யானைகளும் அதைச் சுற்றி நின்றுகொண்டு தங்கள் தும்பிக்கைகளால் அதன் உடல் முழுவதையும் தடவிக்கொண்டிருந்தன. பின்பு இந்தப் பெண் யானை எழுந்து சில பாக தூரம் நடந்து சென்று மீண்டும் முன் போலவே படுத்துக்கொண்டது.

ஒரு யானையைத் தவிர மற்ற எல்லா யானைகளும் சுற்றியுள்ள காட்டுக்குள் சென்றுவிட்டன. இந்த யானை பெண் யானையின் பக்கத்திலேயே நின்றுகொண்டிருந்தது. இன்னும் சில நிமிஷங்கள் கழிந்தன. பெண்யானை மீண்டும் எழுந்து சில பாக தூரம் நடந்து சென்று படுத்துக்கொண்டது. இந்தத் தடவை மறுபக்கம் திரும்பிக்கொண்டது. இப்படியே சுமார் பத்து நிமிஷ நேரம் படுத்திருந்து மீண்டும் எழுந்து சில பாக தூரம் நடந்து சென்று மீண்டும் படுத்துக்கொண்டது.

இந்தத் தடவை அது அநேகமாக உடனே எழுந்து நின்றது. இப்படி அது எழுந்திருக்கும்போது, சுமார் இரண்டு அடி குறுக்களவு உள்ள வெளுப்பான இளஞ் சிவப்புப் பையொன்று அதன் ஜன்மேந்திரியத்திலிருந்து வெளிப்பட்டிருப்பதை நான் கண்டேன். வெளிப்பட்ட பை இந்த நிலையில் இருக்க, பெண்யானை எவ்விதக் கஷ்டமும் இல்லாமல் அங்கும் இங்குமாகச் சுமார் 10 நிமிஷ நேரம் வரையில் திரிந்துகொண்டிருந்தது. அப்போது பை வெடித்து அதிலிருந்து ஏதோ ஒரு வகை நீர் கொட்டியது. இதே சமயத்தில் இது வரையில் பெண் யானையோடிருந்த மற்ற யானை, அருகில் இருந்த காட்டில் காத்துக்கொண்டிருந்த யானைக் கூட்டத்தோடு போய்ச் சேர்ந்துகொண்டது. பனிக்குடம் உடைந்து பல நிமிஷ நேரத்துக்குப் பின்பு பெண் யானை மீண்டும் படுத்துக்கொண்டது. இது நிகழும்போது காலை சுமார் 9 மணி இருக்கும். பெண் யானை சுமார் அரைமணி நேரம் இப்படி எவ்விதச் சப்தமும் செய்யாமல் ஒரு முனகலும் இல்லாமல், தன் தும்பிக்கையை மட்டும் வீசிக்கொண்டு அசைவற்றிருந்தது. அதன் வயிறு மட்டும் ஒழுங்காக உயர்வதும் இறங்குவதுமாக இருந்தது. அது பெருமூச்செறிவதைப் போல் தோன்றியது. காட்டிலிருந்த யானைக் கூட்டத்திலிருந்து இரண்டு யானைகள், இங்கே படுத்திருக்கும் பெண்யானைக்கருகில் மெதுவாக வந்து தம் தும்பிக்கைகளால் அதன் ஜன்மேந்திரியத்தைத் தொட்டுப் பார்த்துவிட்டு மீண்டும் காட்டுக்குள் சென்றன.

இது நடந்து கொஞ்சநேரத்தில் பெண்யானை தன் பின்னங்கால்களை அகல விரித்துக்கொண்டது. எனவே, குட்டியின் தலையும் முன்னங்கால்களும் வெளியில் தென்பட்டன. பெண்யானை எவ்விதக் கஷ்டமும் அடைவதாகத் தோன்றவில்லை. உடனே அது எழுந்து நின்று ஒரு சில செகண்டுகளில் மீண்டும் முழங்காலிட்டுப் படுத்துக்கொண்டது. இப்படிப் படுத்துக்கொண்ட உடனே குட்டி கீழே விழுந்தது. பெண் யானை உடனே எழுந்து சுமார் பத்துப் பாகங்கள் வரைக்கும் நடந்து சென்றது. இந்தச் சமயத்தில் பெண் யானையின் ஜன்மேந்திரியத்திலிருந்து ரத்தம் ஏராளமாகப் போய்க்கொண்டிருந்தது. இவ்

வளவு தூரம் நடந்து சென்ற பெண் யானை மீண்டும் ஒரு பக்கமாகச் சாய்ந்து படுத்து, ஒரு பக்கத்திலிருந்து மறு பக்கத்துக்குப் புரண்டு கொண்டும் உருண்டுகொண்டும் இருந்தது. குட்டி அங்கும் இங்குமாக நழுவிக்கொண்டிருந்தது. குட்டியின் உடல் முழுவதும் ஒரு வித நீரால் தோய்ந்திருந்தது.

சுமார் 15 நிமிஷங்களுக்குப் பின் யானைக் கூட்டத்திலிருந்து ஒரு யானை வந்து குட்டியைத் தன் தும்பிக்கையால் நிலத்திலிருந்து சுமார் 4 அடி உயரத்தில் தூக்கிப் பின்பு மெதுவாக நிலத்தில் வைத்தது. பிறகு அந்த யானை உரத்த குரலில் சப்தமிட்டது. உடனே காட்டுக்குள் இருந்த இதர யானைகள் சப்தமிட்டுக்கொண்டும் பலவித ஓசைகளைக் கிளப்பிக்கொண்டும் இங்கே வந்தன. அந்த யானை ஒவ்வொன்றும் ஒன்றன்பின் ஒன்றாகத் தும்பிக்கையாலும் கால்களாலும் குட்டியை அங்குமிங்குமாகத் தூக்கி அதன்மேல் மண்ணை வாரிச் சொரிந்தன. இந்தவிதமாகச் சுமார் அரை மணிநேரம் கழிந்த பின், குட்டி நன்றாகக் காய்ந்து உறுதியுடன் எழுந்து நின்றது. எழுந்து நின்ற குட்டி இதர யானைகளிடம் பால் குடிக்க முயன்றது.

பல நிமிஷ நேரம் அங்குமிங்குமாகப் புரண்டுகொண்டிருந்த தாயின் நச்சுக்கொடி, இப்போது விழுந்தது. பெண்யானை உடனே எழுந்து நச்சுக் கொடியை எடுத்து அதில் ஒரு பகுதியைத் தின்றது. இன்னுமொரு பகுதியைத் துண்டு துண்டாகக் கிழித்துத் தூரத்தில் வீசி எறிந்ததோடு அதில் சில பகுதிகளைக் காலாலும் மிதித்தது. நச்சுக்கொடி ஒரு பெரிய கோணிப் பையைப்போல் காட்சி அளித்தது. அதன் சில பாகங்கள் இறைச்சியைப் போலவும், மீதிப் பாகங்கள் நரம்புக் கூட்டங்களைப்போல் நீலமாகவும் சிவப்பாகவும் இருந்தன.

குட்டிக்குத் தொப்புள் இருந்ததாகத் தெரியவில்லை. குட்டி சுமார் $2\frac{1}{2}$ அடி உயரம் இருந்தது. அதன் தும்பிக்கை சுமார் 12 அங்குல நீளம் இருந்தது. நச்சுப் பை விழுந்து சுமார் 15 நிமிஷத்துக்குப் பின் பெண்யானை, யானைக் கூட்டத்துக்கு மத்தியில் இருந்த குட்டியினிடம் சென்று, சப்தமிட்டு, தன் தும்பிக்கையால் அதைத் தூக்கிக்கொண்டு அப்பால் சென்றது. பின்பு அது குட்டியை நிலத்தில் வைத்தது. குட்டி உடனே தன் தாயிடம் பால் குடிக்க முயன்றது. பெண்யானை முழங்காலிட்டுத் தன் தலையை நிலத்தில் வைத்துக்கொண்டது. குட்டி தாயின் ஸ்தனங்களைப் பிடித்து நீண்ட நேரம் இரண்டு ஸ்தனங்களிலுமிருந்து பால் குடித்தது. பின்பு பெண்யானை எழுந்து குட்டியைத் தன் தும்பிக்கையால் உயரத் தூக்கிக்கொண்டது. யானைக் கூட்டம் தன்னைச் சுற்றி நடந்து வர அப்படியே காட்டை நோக்கிச் சென்றது.

பெண்யானை படுத்துக்கொண்டிருந்த இடத்தில் ரத்தமும் ஒரு வித வழுவழுப்பான நீரும் தோய்ந்திருப்பது தெரிந்தது. எஞ்சியிருந்த நச்சுக் கொடியிலிருந்து ஒரு துண்டை வெட்டி எடுத்தேன். நான் வெட்டிய பாகத்தில் ரத்தமும், சுமார் 2 அங்குலக் குறுக்களவும் 2 அடி நீளமும் உள்ள சில குழாய்களும் இருந்தன.









# தலை அலங்காரம்

பிலோ இருதயநாத்

இன்று கூந்தல் அலங்காரத்துக்காகச் சிலர் நூற்றுக்கணக்கான ரூபாயைச் செலவு செய்கிறார்கள். அஜந்தா, எல்லோரா குகைகளில் உள்ள ஓவியங்களிலும், பழமையான சிற்பங்களிலும் ஓவியர்கள் கூந்தல் அலங்காரங்களைப் பலவகையில் சித்திரித்திருக்கிறார்கள்.

கூந்தலை அழகுபடுத்திக்கொள்ள, ஆதியில் பெண்கள் என்ன செய்தார்கள் என்பது மிகவும் ரஸமான விஷயம்:

இன்றிருப்பதைப் போன்ற சீப்பு அந்தக் காலத்திலே கிடையாது. கொண்டை அலங்காரத்துக்குப் பழங்கால மக்கள் எதை உபயோகித்தார்கள்? அந்தக் காலத்தில் ஆண்களும் சரி பெண்களும் சரி தலைமயிரை நீளமாகவே வைத்திருந்தார்கள். அவர்கள் சிக்கெடுத்துத் தலையைக் கோதுவதற்கு முதலில் தங்கள் கை விரல்களையும், பிறகு காட்டுக் குச்சிகளையும் உபயோகித்தார்கள். பின்னால் கவைக்கொம்பு கொண்டு தங்கள் தலையைச் சீவிக் கொண்டை போட்டு, அந்தக் கவைக் கொம்புகளையே தலையில் செருகிக்கொண்டு, அதில் காட்டுப் பூக்களை வைத்து அலங்கரித்துக்கொண்டார்கள்.




அடுத்தபடியாக, பருந்தின் கால்களை வெட்டி அதை உலர்த்தி அதன்மூலம் தங்கள் கூந்தலைச் சீவி அலங்கரித்துக் கொண்டார்கள்.

அப்புறம், இறந்து போன மிருகங்களின் விலா எலும்புகளைச் சுத்தம் செய்து சீப்பாக உபயோகித்தும், கல்லிலே செய்த ஈர்க்கொல்லிகளை உபயோகித்தும், அலங்காரம் செய்துகொண்டார்கள்.

பின்னால், மூங்கில் சீப்புகளைச் செய்து இன்றுள்ள கொண்டை ஊசிகளைப்போல் குத்தி அலங்கரித்துக்கொண்டார்கள்.

நாகரிகம் வளர வளரத் தங்கள் கூந்தலைச் சேர்த்துத் 'துடைப்பம்' போல் நாரைக் கொண்டு கட்டிவிடக் கற்றுக்கொண்டார்கள்.

சமீபத்தில் தென் ருஷியாவில் 'ஜனமென்கா' என்னும் கிராமத்தில் பூமியைத் தோண்டியபோது அங்கே கி. பி. முதல் நூற்றாண்டில் இருந்த 'ஸிதியன்' அரசனுடைய கல்லறை அகப்பட்டது. தங்கத்திலே செய்த அழகு வேலைப்பாடுகள் அடங்கிய சீப்பு ஒன்று, அந்த அரசனின் நீண்ட கூந்தல் பின்னலில் செருகியிருந்ததாம்.

இப்படி நாளுக்கு நாள் அபிவிருத்தி அடைந்து வந்திருக்கும் இந்தக் கூந்தல் அலங்காரம், இந்தக் காலத்தில் எப்படி எப்படியெல்லாம் கண்ணைக் கவரும் முறையில் அமைந்திருக்கிறது என்பதைப் படங்களில் காணலாம்.




காப்பிரைட்: சுதேசமித்திரன் (தமிழ்: 11, 18, 25-4-'54), சென்னை.



## பட விவரம்

### படம் 1.

'ரிங்லெட்' என்ற ஆங்கிலேயரின் சுருள்.

### படம் 2.

கூடைக் கொண்டை; எல். டி. கொண்டை; பாம்புக் கொண்டை.

### படம் 3.

வலைக்குள் சுருள் கொண்டை (கர்ல்ஸ் இன் ஹேர்நெட்).

### படம் 4.

வட்டக் கொண்டை; பஞ்சாபிக் கொண்டை; சங்குரிங்குக் கொண்டை.

### படம் 5.

இரட்டைச் சுற்றுக் கொண்டை; மலபார் கொண்டை (தமிழ் நாட்டில் கோடாலி முடிச்சு); இரட்டைப் பணியாரக் கொண்டை.

### படம் 6.

இரட்டைப் பின்னல்; அஜந்தா கொண்டை; ஒற்றைப் பின்னல்.

### படம் 7.

பாய் ஜடை; மடிப்பு ஜடை; சம்சார ஜடை.

### படம் 8.

பின்னல் கொண்டை; உலர்த்தும் ஜடை; இரட்டைப் பின்னல் கொண்டை.

### படம் 9.

நர்ஸ் கொண்டை; வங்காளிக் கொண்டை; பந்துக் கொண்டை.

### படம் 10.

சாய்வு மணிபர்ஸ் கொண்டை; மணிபர்ஸ் கொண்டை.




### படம் 11.

இரட்டை வடக் கொண்டை; பூ மணிபர்ஸ் கொண்டை; குஜராத்திக் கொண்டை.




### படம் 12.

ராஜகுமாரி கொண்டை; வளையக் கொண்டை; பர்மாக் கொண்டை.




### படம் 13.

கல்லூரிக் கொண்டை; டிராப் கொண்டை; நாரதர் கொண்டை.




### படம் 14.

ஜோசியக் கொண்டை; வளையல் கொண்டை; கூலிக் கொண்டை.




### படம் 15.

'கொஞ்ஜி கோட்' கொண்டை. நீலகிரியில் வாழும் கோத்த மங்கையர் 'மண்டுங்' இலைகளைச் சிறு கற்றையாக 'ரூல்' தடி அளவுக்கு உருட்டிக் கட்டி, தங்கள் தலை அகலத்துக்கு வெட்டி, மேலே யிருந்து கூந்தலை அதில் சுருட்டி, கழுத்தருகே கொணர்ந்து கெட்டியாகக் கொண்டை ஊசியைக் குத்திவிடுவார்கள். இதுதான் 'கொஞ்ஜி கோட்.'

## உன் குழந்தைகள்

உன் குழந்தைகள் உன் குழந்தைகள் அல்ல.
வாழ்க்கை தன்னிடமே ஆசை கொள்கிறது; அந்த ஆசைக்குப் பிறந்த மக்கள் அவர்கள்.
அவர்கள் உன் வாயிலாக வந்தாலும் உன்னிடமிருந்து வந்தவர்கள் அல்ல.
அவர்கள் உன்னோடு இருந்தாலும் உனக்குச் சொந்தமானவர்கள் அல்ல.

* * *

நீ அவர்களுக்கு உன் அன்பைக் கொடுக்கலாம்; ஆனால், சிந்தனைகளைக் கொடுக்க முடியாது.
ஏனென்றால், அவர்களுக்குச் சொந்தமான சிந்தனைகள் உண்டு.
நீ அவர்களுடைய உடலுக்கு இருப்பிடம் தரலாம்; ஆனால், அவர்களுடைய ஆத்மாவுக்கு இல்லம் கொடுக்க முடியாது.
ஏனென்றால், அவர்களுடைய ஆத்மாக்கள் நாளை என்னும் வீட்டில் வாழ்கின்றன. அங்கே நீ போக முடியாது; உன் கனவிலுங்கூட முடியாது.
நீ அவர்களைப்போலவே இருக்கப் பாடுபடலாம்; ஆனால், உன்னைப்போல அவர்களை ஆக்க முயலாதே.

* * *

ஏனென்றால், வாழ்க்கை பின்னுக்குப் போவதில்லை; நேற்றோடு நின்றுவிடுவதும் இல்லை.
நீ வில். அதிலிருந்து பாயும் உயிருள்ள அம்புகள் உன் குழந்தைகள்.
வில்லாளியான ஆண்டவன், அனந்தமான வழியிலே குறிவைத்து, தன் அம்புகள் வேகமாகவும் தொலைவிலும் பாயும்படியாக, தன் வல்லமையினால் உன்னை வளைக்கிறான்.
வில்லாளியின் கையில் வளைவதிலேயே நீ மகிழ்ச்சி அடை.
ஏனென்றால், பறக்கும் அம்பினிடம் அவனுக்கு எவ்வளவு அன்பு உண்டோ அவ்வளவு அன்பு, உறுதியான வில்லினிடமும் உண்டு.

—கலில் கிப்ரான் எழுதிய 'தீர்க்கதரிசி' என்ற நூலிலிருந்து.

சங்கீதமும் நாட்டியமும் இறைவனை வணங்கும் சாதனமாக வளர்ந்த பழங் கலைகள்.

# கோயிலில் ஆடல் பாடல்

★

கொஞ்ச காலமாகவே தென்னிந்தியாவிலுள்ள கோயில்களில் பரத நாட்டியம், சங்கீதம் முதலிய கலைகளெல்லாம் குன்றி வருகின்றன. முன் காலத்தில் கோயில்களில்தான் இந்தக் கலைகளைப் பயின்று வளர்த்து வந்தார்கள். பிறகு அங்கங்கே சங்கீத சபைகள் ஏற்பட்டுப் பொதுவாகச் சங்கீதம், நாட்டியம் இவைகளுக்குப் புத்துயிர் கொடுத்தன. கல்வி நிலையங்களும் இவைகளைப் பாடமாகப் போதித்து வருகின்றன. இருந்தாலும் மதப்பற்றோடு இந்தக் கலைகளை ஆதரிப்பார் இல்லை. சென்னை, ஆந்திரா இந்த இரண்டு ராஜ்யங்களிலும் கோயிலில் பரத நாட்டியத்தை அநுமதிப்பதில்லை. முன்னெல்லாம் கோயில்களில் ஸ்வாமி சந்நிதியில் ஆரத்தி காட்டும்போது ஆடல்பாடல் நிகழ்வதுண்டு. தேவதாசி வகுப்பைச் சேர்ந்தவர்கள், பூஜை முடியும் போதும், திருவீதிப் புறப்பாட்டின் போதும் ஸ்வாமிக்கு எதிரே நாட்டியம் ஆடுவது வழக்கம்.

இப்படி மதச் சடங்கின்போது நாட்டியமாடுவது இன்று நேற்றைச் சங்கதி அல்ல; ஆதிகாலத்திலிருந்தே தொடர்ந்து நடந்து வருகிறது. 4,500 ஆண்டுகளுக்கு முன் இருந்த சிந்து நதி நாகரிகத்தின் சின்னங்கள் மொகஞ்சதரோவிலும் ஹரப்பாவிலும் கிடைத்த போது, அந்தக் காலத்திலும் இந்த மாதிரி சந்தர்ப்பங்களில் நாட்டியம் ஆடுவது வழக்கம் என்று தெரிந்தது. புராதன இந்திய நாகரிகத்துக்கும் எகிப்தியர், கிரேக்கர், யூதர் இவர்களின் நாகரிகத்துக்கும் நெருங்கின சம்பந்தம் இருப்பதும் இதிலிருந்து தெரிகிறது. ஆதியில் எகிப்தில் கோயிலுக்குப் புறப்பட்டுப் போகும்போது ஆடிக்கொண்டும் பாடிக்கொண்டும் போவார்கள். கிரேக்க நாட்டிலும் அந்தக் காலத்தில் அபாலோ என்ற தேவனையும், தேவராஜனின் மகளான ம்யூஸ் என்ற கலைவாணியையும் துதித்து வழிபடும்போது மொத்தமாகச் சேர்ந்து பலர் நாட்டியம் ஆடுவார்கள். யூதர்கள் சிறப்புற்றிருந்த அந்தக் காலத்தில் மிரியம், வெற்றிப் பாடலுக்குச் சரியாக நாட்டியமாடிக் கடவுளை வழிபட்டதாகச் சொல்வார்கள். கடவுளின் படகெதிரே டேவிட் இப்படி ஆடினானாம். "ஐயனைப் போற்றுவோம். பறையை முழங்கி ஆடுவோம்" என்று அவன் ஒரு பாடலில் கூறுகிறான்.

அலெக்சாண்டர் காலத்தில் வாழ்ந்த மௌரிய சக்கரவர்த்தி சந்திரகுப்தன். அவன் காலத்தில் நாட்டிய மாதர்களைக் கௌரவ

மூலம்: தி வீக்லி மெயில் (ஆங்கிலம்: 31-7-'54), சென்னை.

மாகவே நடத்தி வந்தார்கள் என்று தெரிகிறது. இதற்குக் காரணம் கோயில்களில் அவர்கள் கடவுளுக்குப் பிரீதியாக நாட்டியம் ஆடி வந்ததுதான். சக்கரவர்த்தி சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கும் போதும், தேரில் பவனி வரும் போதும் அவனருகில் இருந்து குடை பிடித்துக்கொண்டும், சாமாரம் வீசிக்கொண்டும் பொன் வட்டில் ஏந்தியபடியும் நிற்பார்கள்.

தென்னிந்தியாவில், 'சிலப்பதிகார' காலத்திலேயே (கி. பி. சுமார் 300-ஆம் ஆண்டில்) கோயிலில் தேவதாசிகள் பரத நாட்டியம் ஆடுவது முக்கியமான சடங்காக இருந்து வந்தது. அதில் வரும் முக்கிய பாத்திரமான மாதவி கோயிலில் நடனம் ஆடுபவள் தான். கி. பி. 5-ஆம் நூற்றாண்டில் குப்த சாம்ராஜ்ய கால நிகழ்ச்சிகளைப்பற்றி எழுதியது 'மிருச்சகடிகம்' (மண் தேர்) என்ற சம்ஸ்கிருத நாடகம். அதில் வரும் வசந்தசேனையைப் போலவே மாதவியும் சிறந்த குணம் உடையவள்தான். தஞ்சாவூரில் இருக்கும் பிருகதீசுவரர் கோயில், சோழ அரசனான ராஜராஜன் கி. பி. 1001-இல் கட்டியது. அதில் உள்ள கல் வெட்டுக்களிலிருந்து அந்தக் கோயிலுக்கென்றே 400 தேவதாசிகள் இருந்தார்கள் என்று தெரிகிறது. அங்கும், மற்றும் பல பெரிய கோயில்களிலும் இதற்கென்றே மண்டபங்கள் இன்றும் இருக்கின்றன. இந்த மாதிரி அற்புதமான நாட்டிய மண்டபத்தை மைசூர் ராஜ்யத்தில் பேலூரில் இருக்கும் சென்னகேசவர் கோயிலிலே காணலாம். கி. பி. 14-ஆம் நூற்றாண்டில் ஹொய்சள மன்னனான விஷ்ணுவர்த்தனன் கட்டியது இந்தக் கோயில்; அழகிய சிற்ப வேலைப்பாடுள்ளது. இங்குள்ள நாட்டிய மண்டபத்தில் கறுப்புச் சலவைக் கல் பாவிய மேடை இருக்கிறது. விஷ்ணுவர்த்தனனுடைய ராணியான நிருத்திய சரஸ்வதி இங்கே நாட்டியமாடியதாகச் சொல்லுகிறார்கள். உள்ளூறப் பக்தியும் தூய்மையும் உள்ளவர்கள் இதை ஓர் உதாரணமாகக் கொள்ளலாமே! மௌரிய சாம்ராஜ்யத்தில் நாட்டிய மாதர்களைக் கௌரவமாக நடத்தியது போலவே விஜயநகர சாம்ராஜ்யத்திலும் தேவதாசிகளை மதிப்போடுதான் நடத்தி வந்தார்கள். இவர்கள் நாட்டியக் கலையில் மிகவும் தேர்ச்சி பெற்றவர்கள். அப்போது விஜயநகர ராஜசபைக்குப் பாரசீக தூதர் ஒருவர் வந்திருந்தார். அவர் பெயர் அப்துர் ரஸ்ஸாக். இந்த மாதிரி சந்தர்ப்பம் ஒன்றில் தேவதாசிகள் நாட்டியமாடியதைப் பார்த்துவிட்டு அவர் அப்படியே சொக்கிப் போய்விட்டாராம். "அந்தப் பெண்கள் காலை மிக நயமாக அசைப்பதைப் பார்த்ததுமே உள்ளூற ஒரு மகிழ்ச்சி எனக்கு ஏற்பட்டது" என்று அவர் எழுதியிருக்கிறார்.

பிற்காலத்தில் தேவதாசிகள் ஒழுக்கங் குன்றிவிட்டார்கள். ஆனாலும் மற்ற யாரும் பரத நாட்டியம் பயிலக்கூடாது என்று ஒரு தடை இருந்துவந்ததால், சங்கீதம், நாட்டியம் இந்த இரண்டு கலைகளையுமே இவர்கள் அழியாதபடி காத்தும் வளர்த்தும் வந்தார்கள். சென்னை, ஆந்திரா இந்த இரண்டு ராஜ்யங்களிலும் தேவதாசிச் சட்டப்படி, 'கோயிலுக்கு இவர்களை அர்ப்பணம் செய்து பொட்டுக் கட்டும் வழக்கம் கூடாது. இதனால்

இவர்கள் வேசித் தொழிலில் இறங்கி விடுகிறார்கள்' என்று முன்னதாகவே இதைத் தடை செய்துவிட்டார்கள். 1947-இல் இரண்டு ராஜ்யமும் இணைந்திருந்தபோதே இந்தச் சட்டம் நிறைவேறிவிட்டது. எந்தப் பெண்களுமே கோயிலில் நாட்டியம் ஆடக்கூடாது என்று வேறு அதில் கண்டிருக்கிறது:

"கும்ப ஆரத்தியோடும் சரி, அது இல்லாமலும் சரி, கோயில் எல்லைக்குள்ளும் மத சம்பந்தமான நிலையங்களுக்குள்ளும் பெண்கள் நாட்டியமாடக்கூடாது. கோயிலையோ அல்லது மதசம்பந்தமான ஒரு நிலையத்தையோ சேர்ந்த தெய்வ விக்கிரகம் அல்லது பூஜிப்பதற்குரிய விசேஷப் பொருளை வெளியில் கொண்டு வரும்போதும் பெண்கள் நாட்டியம் ஆடிக்கொண்டே வரக்கூடாது. கோயிலிலிருந்தோ மதசம்பந்தமான நிலையங்களிலிருந்தோ வந்த தெய்வ விக்கிரகத்தையோ பூஜிப்பதற்குரிய விசேஷப் பொருளையோ உத்தேசித்து உற்சவமோ, வேறு ஏதாவது சடங்கோ நடத்தும்போதும் பெண்கள் அங்கே நாட்டியம் ஆடக்கூடாது."

இப்போதோ கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்கூட நாட்டியம் ஆடப் பழகி வருகிறார்கள். ஏன், வைதிகமாக இருப்பவர்களின் குழந்தைகள்கூடப் பரத நாட்டியம் கற்றுக்கொள்கிறார்கள். அப்படி இருந்தும் இந்தச் சட்டப்படி இவர்களும் தேவதாசிகளைப்போல் கோயில்களில் ஆண்டாள் பாசுரத்தையோ, ஜயதேவருடைய அஷ்டபதியையோ, க்ஷேத்ரக்ஞருடைய பதத்தையோ இவை போன்ற பக்தி ரசமான வேறு பாடல்களையோ பாடுவதோ அதற்கேற்றபடி நாட்டியமாடுவதோ கூடாது என்ற நிலை நீடித்து வருகிறது.

ஆகவே, குலப் பெண்கள் உற்சவம் போன்ற சந்தர்ப்பங்களில் கோயில்களில் இப்படிப் பக்திரசமான பாடல்களைப் பாடி அபிநயம் செய்யலாம் என்று சட்டத்தில் ஒரு திருத்தம் கொண்டு வந்தால் நன்றாக இருக்கும்.

## சகவாச தோஷம்

ஒரு சிறுவன் தன் தகப்பனாரை ஒரு சந்தேகம் கேட்டான்: "அப்பா, ஒரு மனிதனின் நண்பர்களைக் கொண்டு அந்த மனிதனின் இயல்பை அறிந்துவிடலாம் என்கிறார்களே; அது உண்மையா?"

"ஆமாம்; முற்றும் உண்மை" என்றார் தகப்பனார்.

"அப்படியானால், எனக்கு இது புரியவில்லையே: கெட்டவன் சகவாசத்தால் நல்லவன் கெடுவானா? நல்லவன் சகவாசத்தால் கெட்டவன் திருந்துவானா? இதைச் சொல்லுங்கள்" என்று மறுபடியும் கேட்டான் சிறுவன்.

—'மகஸீன் டைஜெஸ்ட்'

# கார்ட்டூன் கதம்பம்




"நேரு நமக்குக் கடவுள் தந்த பாக்கியம்" என்கிருர் ராஜாஜி. காமராஜ்....?

—'சங்கர்ஸ் வீக்லி'




திருவாங்கூர்த் தமிழர் கிளர்ச்சியைச் சர்க்கார் சமாளிக்க முயலும் விதம்.

—'ஃப்ரீ இந்தியா'




பிரிட்டனுக்கும் எகிப்துக்கும் சூயஸ் விஷயமாக ஒப்பந்தம் ஏற்பட்டபோது....

—'அமிர்த பஜார்'




"கம்யூனிஸ்டுகளை ஒழிக்கிறோம்" என்கிறது பாகிஸ்தான் சர்க்கார். அதற்கு அர்த்தம் இதுதான்.

—'பிளிட்ஸ்'

ருஷியரைப் பார்த்தே இந்தப் பயங்கரக் குண்டை
அமெரிக்கர்கள் தயாரித்தார்களாம்!

# ஹைட்ரஜன் குண்டு வர்ணனை

ராஸ் ஹார்க்னெஸ்

போன மார்ச்சு மாதத்தில் பஸிஃபிக் கடல் பிரதேசத்தில் பரீட்சார்த்தமாக வெடித்தார்களே, அந்த ஹைட்ரஜன் குண்டு ஒரு கோடியே நாற்பது லட்சம் டன் வெடி மருந்துக்கு அல்லது 7,000 அணுக்குண்டுக்கு இணையாகும். அதாவது, இந்தக் குண்டுகள் எல்லாம் சேர்ந்து வெடிக்கும் சக்திக்குச் சமமானது ஹைட்ரஜன் குண்டின் வெடிச் சக்தி (எக்ஸ்ப்ளோஸிவ் ஃபோர்ஸ்). ஆனால் ஹைட்ரஜன் குண்டின் நிறை 220 பவுண்டுதான். அளவிலோ அது ஒரு கிரிக்கட் பந்து மாதிரிதான் இருக்கும்.

இரண்டாவது உலக யுத்தத்தின்போது, பெர்லின் நகரில் 1,000 விமானங்கள் போய்க் குண்டு சொரிந்தன. அவை அத்தனைக்கும் சமமானது ஒரே ஒரு ஹைட்ரஜன் குண்டின் வெடிச் சக்தி. ஆனால், அவை எவ்வளவு பரவலாக நாசம் விளைத்தனவோ அவ்வளவு பரவலாக ஹைட்ரஜன் குண்டு நாசம் விளைக்காது. ஏனென்றால், அதன் வெடிச்சக்தி ஒரே இடத்தில் குவிந்து தாக்கும். என்றாலும், ஒரு ஹைட்ரஜன் குண்டு வெடித்தால், ஹைட்ரோ எலக்ட்ரிக் பிளாண்ட் ஒன்றைச் சுக்கு நூறாகச் சிதறி நாசமாகச் செய்யும்; உலகிலேயே மிகப் பெரிய நிக்கல் அல்லது இரும்புச் சுரங்கத்தைப் பல மாதகாலம் பழுதாகிக் கிடக்கச் செய்யும்; ஏரோபிளேன் தொழிற்சாலையை உருத்தெரியாதபடி அழிந்து போகச் செய்யும்; பயிற்சிக்கூடத்தில் உள்ள பல்லாயிரக்கணக்கான ஸோல்ஜர்களைக் கொன்றுவிடும்.

ஹைட்ரஜன் குண்டை இன்ன சக்தி உடையதாக, இவ்வளவு பெரியதாகத்தான் செய்யலாம் என்ற வரம்பு ஒன்றும் இல்லை. ஆயினும் சிறு சிறு குண்டுகள் பலவற்றைப் பரவலாகப் போடுவதால் விளையக்கூடிய நாசத்தைவிட, அவை அத்தனைக்கும் சமமான ஒரே ஒரு பெரிய குண்டால் விளையக்கூடிய நாசம் மிகவும் குறைவாகவே யிருக்கும். இது அநுபவத்தில் கண்ட விஷயம்.

ஒரு கோடி டன் வெடிமருந்துச் சக்திகொண்ட ஹைட்ரஜன் குண்டுதான் சரியான அளவு என்கிறார்கள். இந்த அளவுள்ள குண்டை, நாம் அழிக்க விரும்பும் இடத்துக்கு நாலு மைல் தூரத்தில் போட்டால் போதும். ஏனென்றால், 50 சதுரமைல் வட்டத்தில் உள்ள சகலத்தையும் அடியோடு இது நாசம் செய்துவிடும். 50 சதுர மைல் வட்டம் என்பது சுமார் 8 மைல் குறுக்களவு உள்ளது. உலகத்திலேயே மிகச் சில நகரங்கள்தான் இவ்வளவு அதிகமான பரப்பு உள்ளவை.

காப்பிரைட்: அமிர்த பஜார் பத்திரிகை (ஆங்கிலம்: 8-8-'54), கல்கத்தா.

இப்படிப்பட்ட பெரிய நகரம் ஒன்றில் ஹைட்ரஜன் குண்டு விழுந்தால், என்ன நிகழும் என்று இங்கே பார்க்கலாம்:

குண்டு வெடித்தவுடனே கடுமையான உஷ்ண அலை ஒன்று வீசும். ஐந்து மைல் சுற்றளவுக்குள் ரஸ்தாக்களில் போகும் சகல கார் டிரைவர்களும், நடக்கும் சகல மனிதர்களும் அந்த உஷ்ணம் பட்டதுமே வெந்து மடிவார்கள்.

குண்டு வெடித்ததன் பலனாக அடுத்தாற்போல் பல செகண்டுகள் வரைக்கும் இந்தப் பிரதேசத்தில் புயல் போல் தீயும் புழுதியும் வீசும். அதனால் கட்டிடங்கள், டெலிபோன் கம்பங்கள், மரங்கள் எல்லாம் நிலை குலைந்து சாயும். மிக உறுதியான கான்கிரீட் கட்டிடங்கள் ஒன்றிரண்டைத் தவிர மற்ற எல்லாமே அடியோடு அழிந்து போகும். தொழிற்சாலைகள், ரெயில்வே ஸ்டேஷன்கள், துறைமுகக் கட்டிடங்கள் சகலமும் நாசமாகும். தீப் பற்றக் கூடிய எதுவும் எரிந்து சாம்பலாகும்.

இந்த ஐந்து மைல் வட்டத்துக்கு அப்பாலுங்கூட, எட்டு மைல் சுற்றளவுக்கு உட்பட்ட இடத்திலெல்லாம் கடுமையான சேதம் ஏற்படும். இருபத்தைந்து மைலுக்கு அப்பால் உள்ள கட்டிட ஜன்னல் கண்ணாடிகள் சிதறும்; செங்கல் சுவர்களில் வெடிப்பு விழும்.

'ரேடியோ - ஆக்டிவ்' (கதிர் வீசும்) புழுதி பறந்து காற்றிலே கலந்து வெகு தூரத்தில் உள்ள இடங்களிலெல்லாம் போய் விழும். அந்தப் புழுதி பட்ட அனைத்தும் விஷமாகிவிடும். பிக்கினி என்ற இடத்தில் மார்ச்சு மாதம் நடந்த சோதனையில் இப்படி எழுந்த புழுதிதான் ஜப்பானியச் செம்படவர் சிலர்மீது விழுந்தது. அவர்களையெல்லாம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போய்ச் சிகிச்சை செய்ய வேண்டியதாயிற்று. வெடி விழுந்த பிரதேசத்துக்கு வெகு தூரத்துக்கு அப்பால் பத்திரமான இடத்தில் அவர்கள் இருந்தும், இப்படி நேரிட்டது.

"ஹைட்ரஜன் குண்டிலிருந்து தற்காப்புச் செய்துகொள்ள ஒரே ஒரு வழிதான் உண்டு. அதாவது, அந்தக் குண்டு விழும் இடத்தில் இராமல் ஓடிப் போய்விடுவது தான்" என்று நிபுணர்கள் சொல்லுகிறார்கள். ஆகவே, இதற்கேற்ற முன்னேற்பாடுகளை ஐக்கிய அமெரிக்க சர்க்கார் வகுத்து வருகிறார்கள். குண்டு விழக்கூடிய ஊரில் உள்ள பொதுமக்களை, தற்காப்பு 'ஷெல்டர்'களுக்குள் ஓடி ஒளியச் செய்வதில் பயனில்லை. ஆகவே, எதிரி விமானங்கள் வட துருவத்தைக் கடந்தவுடனேயே அபாய எச்சரிக்கை வரும்; உடனே அத்தனை பொது ஜனங்களையும் ஊரை விட்டே வெளியேற்றி விடுவார்கள்.

ஹைட்ரஜன் குண்டுபற்றிய பல அதிசயங்களுக்குள்ளேயே ஒன்றுதான் மிகப் பெரிய அதிசயம்: அமெரிக்கர் அதைச் செய்ய ருஷியரிடமிருந்தே கற்றார்கள் என்பதே அந்த அதிசயம்.

ஹைட்ரஜன் குண்டு செய்வது சாத்தியமே என்று எல்லா விஞ்ஞானிகளுமே அபிப்பிராயப்பட்டார்கள். "உடனே ஹைட்ரஜன் குண்டு செய்யுங்கள்" என்று அணு சக்திக் கமிஷனுக்கு 1950 பிப்ரவரி முதல் தேதி ஜனாதிபதி ட்ரூமன் உத்தரவும் போட்டுவிட்டார். ஆயினும் அதை எப்படிச்

ருஷியரைப் பார்த்தே இந்தப் பயங்கரக் குண்டை அமெரிக்கர்கள் தயாரித்தார்களாம்!

# ஹைட்ரஜன் குண்டு வர்ணனை

**ராஸ் ஹார்க்னெஸ்**

போன மார்ச்சு மாதத்தில் பஸிஃபிக் கடல் பிரதேசத்தில் பரீட்சார்த்தமாக வெடித்தார்களே, அந்த ஹைட்ரஜன் குண்டு ஒரு கோடியே நாற்பது லட்சம் டன் வெடி மருந்துக்கு அல்லது 7,000 அணுக்குண்டுக்கு இணையாகும். அதாவது, இந்தக் குண்டுகள் எல்லாம் சேர்ந்து வெடிக்கும் சக்திக்குச் சமமானது ஹைட்ரஜன் குண்டின் வெடிச் சக்தி (எக்ஸ்ப்ளோஸிவ் ஃபோர்ஸ்). ஆனால் ஹைட்ரஜன் குண்டின் நிறை 220 பவுண்டுதான். அளவிலோ அது ஒரு கிரிக்கட் பந்து மாதிரிதான் இருக்கும்.

இரண்டாவது உலக யுத்தத்தின்போது, பெர்லின் நகரில் 1,000 விமானங்கள் போய்க் குண்டு சொரிந்தன. அவை அத்தனைக்கும் சமமானது ஒரே ஒரு ஹைட்ரஜன் குண்டின் வெடிச் சக்தி. ஆனால், அவை எவ்வளவு பரவலாக நாசம் விளைத்தனவோ அவ்வளவு பரவலாக ஹைட்ரஜன் குண்டு நாசம் விளைக்காது. ஏனென்றால், அதன் வெடிச்சக்தி ஒரே இடத்தில் குவிந்து தாக்கும். என்றாலும், ஒரு ஹைட்ரஜன் குண்டு வெடித்தால், ஹைட்ரோ எலக்ட்ரிக் பிளாண்ட் ஒன்றைச் சுக்கு நூறாகச் சிதறி நாசமாகச் செய்யும்; உலகிலேயே மிகப் பெரிய நிக்கல் அல்லது இரும்புச் சுரங்கத்தைப் பல மாதகாலம் பழுதாகிக் கிடக்கச் செய்யும்; ஏரோபிளேன் தொழிற்சாலையை உருத்தெரியாத படி அழிந்து போகச் செய்யும்; பயிற்சிக்கூடத்தில் உள்ள பல்லாயிரக்கணக்கான ஸோல்ஜர்களைக் கொன்றுவிடும்.

ஹைட்ரஜன் குண்டை இன்ன சக்தி உடையதாக, இவ்வளவு பெரியதாகத்தான் செய்யலாம் என்ற வரம்பு ஒன்றும் இல்லை. ஆயினும் சிறு சிறு குண்டுகள் பலவற்றைப் பரவலாகப் போடுவதால் விளையக்கூடிய நாசத்தைவிட, அவை அத்தனைக்கும் சமமான ஒரே ஒரு பெரிய குண்டால் விளையக்கூடிய நாசம் மிகவும் குறைவாகவே யிருக்கும். இது அநுபவத்தில் கண்ட விஷயம்.

ஒரு கோடி டன் வெடிமருந்துச் சக்திகொண்ட ஹைட்ரஜன் குண்டுதான் சரியான அளவு என்கிறார்கள். இந்த அளவுள்ள குண்டை, நாம் அழிக்க விரும்பும் இடத்துக்கு நாலு மைல் தூரத்தில் போட்டால் போதும். ஏனென்றால், 50 சதுரமைல் வட்டத்தில் உள்ள சகலத்தையும் அடியோடு இது நாசம் செய்துவிடும். 50 சதுர மைல் வட்டம் என்பது சுமார் 8 மைல் குறுக்களவு உள்ளது. உலகத்திலேயே மிகச் சில நகரங்கள்தான் இவ்வளவு அதிகமான பரப்பு உள்ளவை.

காப்பிரைட்: அமிர்த பஜார் பத்திரிகை (ஆங்கிலம்: 8-8-'54), கல்கத்தா.

இப்படிப்பட்ட பெரிய நகரம் ஒன்றில் ஹைட்ரஜன் குண்டு விழுந்தால், என்ன நிகழும் என்று இங்கே பார்க்கலாம்:

குண்டு வெடித்தவுடனே கடுமையான உஷ்ண அலை ஒன்று வீசும். ஐந்து மைல் சுற்றளவுக்குள் ரஸ்தாக்களில் போகும் சகல கார் டிரைவர்களும், நடக்கும் சகல மனிதர்களும் அந்த உஷ்ணம் பட்டதுமே வெந்து மடிவார்கள்.

குண்டு வெடித்ததன் பலனாக அடுத்தாற்போல் பல செகண்டுகள் வரைக்கும் இந்தப் பிரதேசத்தில் புயல்போல் தீயும் புழுதியும் வீசும். அதனால் கட்டிடங்கள், டெலிபோன் கம்பங்கள், மரங்கள் எல்லாம் நிலை குலைந்து சாயும். மிக உறுதியான கான்கிரீட் கட்டிடங்கள் ஒன்றிரண்டைத் தவிர மற்ற எல்லாமே அடியோடு அழிந்து போகும். தொழிற்சாலைகள், ரெயில்வே ஸ்டேஷன்கள், துறைமுகக் கட்டிடங்கள் சகலமும் நாசமாகும். தீப் பற்றக் கூடிய எதுவும் எரிந்து சாம்பலாகும்.

இந்த ஐந்து மைல் வட்டத்துக்கு அப்பாலுங்கூட, எட்டு மைல் சுற்றளவுக்கு உட்பட்ட இடத்திலெல்லாம் கடுமையான சேதம் ஏற்படும். இருபத்தைந்து மைலுக்கு அப்பால் உள்ள கட்டிட ஜன்னல் கண்ணாடிகள் சிதறும்; செங்கல் சுவர்களில் வெடிப்பு விழும்.

'ரேடியோ - ஆக்டிவ்' (கதிர் வீசும்) புழுதி பறந்து காற்றிலே கலந்து வெகு தூரத்தில் உள்ள இடங்களிலெல்லாம் போய் விழும். அந்தப் புழுதி பட்ட அனைத்தும் விஷமாகிவிடும். பிக்கினி என்ற இடத்தில் மார்ச்சு மாதம் நடந்த சோதனையில் இப்படி எழுந்த புழுதிதான் ஜப்பானியச் செம்படவர் சிலர்மீது விழுந்தது. அவர்களையெல்லாம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போய்ச் சிகிச்சை செய்ய வேண்டியதாயிற்று. வெடி விழுந்த பிரதேசத்துக்கு வெகு தூரத்துக்கு அப்பால் பத்திரமான இடத்தில் அவர்கள் இருந்தும், இப்படி நேரிட்டது.

"ஹைட்ரஜன் குண்டிலிருந்து தற்காப்புச் செய்துகொள்ள ஒரே ஒரு வழிதான் உண்டு. அதாவது, அந்தக் குண்டு விழும் இடத்தில் இராமல் ஓடிப் போய்விடுவதுதான்" என்று நிபுணர்கள் சொல்லுகிறார்கள். ஆகவே, இதற்கேற்ற முன்னேற்பாடுகளை ஐக்கிய அமெரிக்க சர்க்கார் வகுத்து வருகிறார்கள். குண்டு விழக்கூடிய ஊரில் உள்ள பொதுமக்களை, தற்காப்பு 'ஷெல்டர்'களுக்குள் ஓடி ஒளியச் செய்வதில் பயனில்லை. ஆகவே, எதிரி விமானங்கள் வட துருவத்தைக் கடந்தவுடனேயே அபாய எச்சரிக்கை வரும்; உடனே அத்தனை பொது ஜனங்களையும் ஊரை விட்டே வெளியேற்றி விடுவார்கள்.

ஹைட்ரஜன் குண்டுபற்றிய பல அதிசயங்களுக்குள்ளேயே ஒன்றுதான் மிகப் பெரிய அதிசயம்: அமெரிக்கர் அதைச் செய்ய ருஷியரிடமிருந்தே கற்றார்கள் என்பதே அந்த அதிசயம்.

ஹைட்ரஜன் குண்டு செய்வது சாத்தியமே என்று எல்லா விஞ்ஞானிகளுமே அபிப்பிராயப்பட்டார்கள். "உடனே ஹைட்ரஜன் குண்டு செய்யுங்கள்" என்று அணுசக்திக் கமிஷனுக்கு 1950 பிப்ரவரி முதல் தேதி ஜனாதிபதி ட்ரூமன் உத்தரவும் போட்டுவிட்டார். ஆயினும் அதை எப்படிச்

செய்வது என்ற நிச்சயமில்லாமல் அதைரியத்துடனேயே அந்த வேலையில் அமெரிக்க விஞ்ஞானி கள் ஈடுபட்டார்கள்.

ஒரு ஹைட்ரஜன் குண்டையும் செய்தார்கள். 1952 நவம்பர் 17-இல் அதைப் பஸிஃபிக் சமுத்தி ரத்தில் வெடித்துப் பரீட்சை செய்தார்கள். அது வெடிக்கத் தான் வெடித்தது. ஆனாலும் திருப்திகரமானதாக இல்லை. அந்த மாதிரி ஹைட்ரஜன் குண்டுகளை வெகு நாளைக்குப் பாதுகாத்து வைப்பது சாத்தியமில்லை. நாளாக ஆக அவை சக்தி இழந்துபோகும். அவைகளைச் செய்வதிலோ அசாத் தியச் செலவு. ஒரு குண்டின் அளவோ ஒரு 'கார் ஷெட்' அவ் வளவு பெரியதாக வேறு இருந் தது. தவிர, அந்தக் குண்டு பல சிக்கல் நிறைந்ததாயிருந்தது.

இதன் பிறகு 1953 ஆகஸ்ட் ஒன்பதாந் தேதி ஸைபீரியா காடு களில் ருஷியர் ஒரு ஹைட்ரஜன் குண்டை வெடித்துப் பரீட்சித்தார் கள். அது முற்றும் திருப்திகரமான குண்டு. அமெரிக்கர் அது வரை யில் செய்திருந்த எந்தக் குண்டை யும் விட வெகுதூரம் அபிவிருத்தி அடைந்ததாக இருந்தது ருஷி யரின் குண்டு. அந்தக் குண்டைப் பற்றி அறிந்ததும், அமெரிக்கத் தற்காப்பு நிபுணர்கள் பெரிதும் திகிலடைந்து போனார்கள். ஆயி னும், அப்போது அதை வெளி யிலே காட்டிக்கொள்ளவில்லை.

ருஷியரின் குண்டு பிரமாதமாய் வெடித்ததால் எழுந்த புழுதி, பல்லாயிரம் அடி உயரம் வானத் தில் கிளம்பிப் பரவியது. அதில் ஒரு பகுதியைக் காற்று அடித்துக் கொண்டு போய் அமெரிக்காவில் சொரிந்தது. அந்தப் புழுதித் துகளில் மிகச் சிறு துணுக்கை அமெரிக்க விஞ்ஞானிகள் சலித் தெடுத்து ஆராய்ந்து பார்த்தார் கள். அதில் லிதியம் என்ற லேசான உலோகத்தின் சிறு கூறு இருந்தது. இந்த உலோகத்தை ஹைட்ரஜன் குண்டில் ருஷியர்கள் ஏன் உபயோகித்தார்கள் என்ற காரணத்தைக் கண்டுபிடிக்க அமெ ரிக்கர்கள் முயன்றார்கள். ஹைட் ரஜன், லிதியம் இரண்டையும் கொண்டு தயாரிக்கும் குண்டு நீண்ட காலம் கெடாதிருக்கும் என்று புலனாயிற்று. 'குண்டின் செலவு மிகவும் குறையும்; அளவு, மிகச் சிறிதாகும்' என்று வேறு தெரிந்தது.

ருஷியரின் குண்டுக்குச் சமமான ஹைட்ரஜன் குண்டை ஏழே மாதத்தில் அமெரிக்கரும் செய்து விட்டார்கள். இந்த மார்ச் முதல் தேதி அதைப் பஸிஃபிக் கடலில் போட்டுப் பரீட்சையும் செய்து பார்த்துவிட்டார்கள். இனி, யாரால் ஹைட்ரஜன் குண்டு செய்ய முடியும், யாரால் முடியாது என்ற கேள்வி கேட்டுப் பயனில்லை. யார் அதி சீக்கிரமாக மிக அதிக மான குண்டுகளைச் செய்யப்போகி றார்கள் என்பதைத்தான் பொறுத் திருக்கிறது இருவருடைய பலா பலமும்.

ருஷியரின் குண்டுக்கும் அமெ ரிக்கரின் குண்டுக்கும் சில அம்சங் களில் வித்தியாசம் இருக்கக் கூடும். ஆகவே, அமெரிக்கர் தங் கள் குண்டுபற்றிய விஷயங்களை மிகவும் ரகசியமாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். குண்டு வெடித்த நிகழ்ச்சியைக் கலர் போட்டோக்கள் எடுத்திருக் கிறார்கள். என்றாலும், வர்ணத்தில் அடிப்படையான திருத்தங்கள்

செய்யாமல் அந்தக் கலர் போட்டோக்களை அமெரிக்கர் வெளியிடவில்லை. ஏனென்றால், போட்டோவின் உண்மையான வர்ணத்தைப் பார்த்தால், குண்டில் உள்ள உலோகத்தைத் திட்டமாகக் கண்டு பிடித்து விட முடியும்.

ஒவ்வோர் உலோகமும் எரியும் போது, அதன் தழலின் வர்ணம் வெவ்வேருக இருக்கிறது. இந்த உண்மையை ஆதாரமாகக் கொண்டுதான், சூரியன் நட்சத்திரங்கள் இவற்றில் உள்ள உலோகங்களை வானசாஸ்திரிகள் நிர்ணயிக்கிருர்கள். இதேபோல, ஹைட்ரஜன் குண்டு வெடித்த போட்டோவின் உண்மையான வர்ணத்தைப் பார்த்தால், அதன் அமைப்பில் இருந்திருக்கக் கூடிய உலோகங்களை விஞ்ஞானிகள் திட்டமாய்க் கண்டுபிடித்து விடுவார்கள்.

இந்த ஹைட்ரஜன் குண்டையும் விட மிகப் பயங்கரமான 'கோபல்ட்' குண்டு செய்ய முடியும் என்று விஞ்ஞானிகள் இப்போது சொல்லுகிருர்கள். 'ரேடியோ ஆக்டிவிட்டி' (கதிர் வீச்சு) உள்ள 'கோபல்ட்' என்ற உலோகத்தால் உறை செய்து, அதற்குள் ஹைட்ரஜன் குண்டை வைப்பார்களாம். இதுதான் 'கோபல்ட்' குண்டு. இந்தக் 'கோபல்ட்' என்ற உலோகம் வெடித்துச் சிதறினுல், அந்தத் துகள் பட்ட பொருளெல்லாம் விஷமாகிவிடுமாம்.

உலகத்தில் உள்ள அத்தனை ஜீவராசிகளும் அழிந்து போகச் செய்ய ஒரு டன் நிறையுள்ள 400 'கோபல்ட்' குண்டுகள் போதுமாம். ஆனுல், இந்தக் குண்டைக் கையாள்வதே பேரபாயம். ஆகையால், இதை யாரும் செய்வார்கள் என்றே தோன்றவில்லை.

தங்கள் நாட்டில் ருஷியர்கள் வந்து குண்டு போடக்கூடிய முக்கிய இடங்களாக 70 நகரங்களை அமெரிக்கச் சர்க்கார் குறித்து வைத்திருக்கிருர்கள். அவைகளுக்குள்ளேயும் வாஷிங்டன், நியூயார்க் இரண்டு நகரங்களிலும் தான் முதல் முதலிலே குண்டு விழும் என்று அமெரிக்கர் அஞ்சுகிருர்கள். நியூயார்க் நகரின் இருதயம் போன்றது மன்ஹாட்டன் தீவு. அணுகுண்டு விழுந்தால், அந்தத் தீவு இருந்த இடமே தெரியாமல் மறைந்து போகுமாம். அவசர நெருக்கடி ஏற்பட்டால், வாஷிங்டன் நகரை உடனே காலி செய்து, ஜனங்களை யெல்லாம் வெளியேற்றிவிட அமெரிக்க அதிகாரிகள் சில திட்டங்கள் தயாரித்திருக்கிருர்கள்.

### ஓட்டுக் குறி

"எலெக்ஷனில் ஓட்டுக் கொடுக்க × இந்தக் குறி ஏன் போடுகிருர்கள்?"

"ஓட்டுக் கொடுத்தது தவறு என்று பின்னுல் தோன்றப் போகும் எண்ணத்தை முன்னுலேயே காட்டுவதற்குத்தான்."

—'தமிழ் ஒளி', ஹைதராபாது.

# காதே கண்

★

**செவிடருக்குக் காது கேட்க உதவும் மின்சாரக் கருவி ஒன்று வெகு நாளைக்கு முன்பே வந்துவிட்டது. குருடருக்கு வழி காட்டக் கருவி எதுவும் இல்லையே என்ற குறையை இப்போது நிவர்த்தி செய்திருக்கிறார்கள் இரண்டு விஞ்ஞானிகள். அதுபற்றிய இந்த விவரத்துக்கு ஆதாரம் 'இல்லஸ்டிரேடட்'டில் உள்ள சில குறிப்புகள்.**

குருடர்களுக்கு 'ஆறாவது புலன்' என்று சொல்லக் கூடிய அபூர்வ சக்தி ஒன்று இருக்கிறதாம். அந்தச் சக்தியால், அவர்கள் வழியில் உள்ள தடைகளை உணர்ந்துகொள்ளுகிறார்களாம். நடக்கும்போது இடறி விழாமல் அவர்கள் சமாளித்துக் கொள்ளுவது இதனால்தானாம். இப்படியெல்லாம் சிலர் சொல்லுகிறார்கள்.

இதன் மர்மம் என்ன என்பதை இப்போது இரண்டு ஆஸ்டிரிய விஞ்ஞானிகள் ஆராய்ந்து உண்மையைக் கண்டுபிடித் திருக்கிறார்கள். அவர்களில் ஒருவர் பெயர் தியோடர் எரிஸ்மான்; மற்றவர் பெயர் இவோ கோஹ்லர். குருடர்கள் இன்னும் நன்றாக வழியறிந்து செல்ல உதவும் நூதன யந்திரம் ஒன்றையும் அவர்கள் செய்திருக்கிறார்கள்.

குருடர்கள் நடந்து செல்லும்போது, எதிரிலே என்னவாவது தடை இருந்தால், சிலந்தி வலை மாதிரி அவர்களுடைய உடம்பில் ஏதோ வந்து மோதுவதுபோல் அவர்களுக்கு உணர்ச்சி ஏற்படும் என்று சிலர் சொல்லுகிறார்கள்.



பெர்கால்ட் என்ற குருடரும் கண்ணைக் கட்டிக்கொண்ட ஒரு விஞ்ஞானியும் புதிய 'ஒலி எறியும் கருவி'யைக் கட்டிக்கொண்டு, வழி நடந்து காட்டுகிறார்கள்.

இது தவறு என்று இந்த விஞ்ஞானிகளின் சோதனையில் புலனாயிற்று. அடியோடு செவிடாயிருக்கும் குருடர்கள் நடக்கும்போது, எதிரில் உள்ள தடைகளை இப்படி

உணரும் சக்தி ஒன்றும் அவர்களுக்கு இல்லை என்று தெரிந்தது. குருடர்கள் நடக்கும்போது அவர்களுடைய காலடிச் சத்தம் எதிரேயுள்ள பொருள்களில் பட்டு, நுண்மையான எதிரொலி உண்டாகிறதாம். அதைக் காதால் கேட்டே குருடர்கள் வழியறிந்து கொள்கிறார்கள். 'ரேடார்' கருவி வேலை செய்கிறதே, அதேபோலத்தான் இதுவும்.

ஆண்டன் பெர்கால்ட் என்ற ஒருவன், குழந்தைப் பருவத்திலிருந்தே குருடன். எதிரே கொஞ்ச தூரத்தில் ஏதோ பொருள் இருக்கிறது என்பதை உணரும் சக்தி அவனுக்குப் பெரிதும் ஏற்பட்டிருக்கிறது. அவனைக்கொண்டு தான், இந்த இரண்டு விஞ்ஞானிகளும் ஆராய்ச்சி புரிந்தார்கள். அவனுடைய கைகளையும் தலையையும், துணியும் பசையும் கொண்டு கட்டி மூடிவிட்டார்கள். தலையைக் கட்டும்போது, காதுகளை மட்டும் திறந்து வைத்திருந்தார்கள். எதிரில் உள்ள பொருள்களை இந்த நிலையில் மூக்கால் மோப்பம் பிடித்தோ, உடம்பிலே படும் சீதோஷ்ண உணர்ச்சியாலோ, அவன் அறிய முடியாது. அப்படியும் வழி உணரும் சக்தி அவனுக்கு இன்னமும் இருந்தது. காதிலே தான் இருக்கிறது ரகசியம் என்று இதிலிருந்து புலனாயிற்று.

இரண்டு விஞ்ஞானிகளும் பிறகு இன்னொரு பரீட்சையும் செய்தார்கள். குருடனுக்கு வலது காதுக்கு அருகே ஒரு குழாயின் ஒரு வாயை நீட்டி, அதன் மறு வாயை அவனுக்கு இடது பக்கத்திலே கொண்டுபோய் விட்டுவிட்டார்கள். இதனால் அவனுக்குத் தடுமாற்றம் ஏற்பட்டது. தன் வலது பக்கத்தில் உள்ள பொருள்களெல்லாம் இடது பக்கத்தில் இருப்பதாக அவன் மயங்கி விட்டான்.

மறுபடியும் அவன் காதை மட்டும் விஞ்ஞானிகள் பொத்திவிட்டுப் பரீட்சித்தார்கள். அப்போது தன் எதிரில் உள்ள பொருள் எதையும் கண்டு பிடிக்காமல் அவன் இடறி விழுந்தான்.

இந்தச் சோதனைகளிலிருந்து, குருடர்களுக்குக் காதே கண்ணாக உதவுகிறது என்று தெளிவு பட்டது. எதிரொலி இன்னும் பலமாக வரச் செய்து, 'ரேடார்' கருவி போல் குருடர்களுக்கு உதவத் தக்கதாக, 'ஒலி எறியும் கருவி' (ஸவுண்ட் த்ரோயர்) ஒன்றை இந்த விஞ்ஞானிகள் இப்போது செய்து முடித்திருக்கிறார்கள். அதைக் குருடன் தன் மார்பில் அணிந்துகொண்டு நடக்க வேண்டும். அப்போது அதிலிருந்து 'புஸ்' என்று ஒரு சப்தம் கிளம்பி எதிரேயுள்ள பொருள்கள் மீதெல்லாம் பட்டு, எதிரொலியாகத் திரும்பிவரும். குருடனுக்கு இயற்கையாக வழி உணரும் சக்தி இருப்பதைவிட மிக அதிகமாக அந்தச் சக்தியை இந்தக் கருவியின் உதவியைக்கொண்டு அவன் பெறுகிறான்.

**தந்தியும் வதந்தியும்**

"தந்தி, வதந்தி இவைகளின் வித்தியாசம் என்ன?"

"தந்தியின் மூலம் நாம் அனுப்பும் செய்தி மட்டுமே போய்ச் சேரும். வதந்தியின் மூலமோ நாம் அனுப்பாத செய்திகள்கூடப் போகும்." —"தமிழ் ஒளி', ஹைதராபாத்.

ஒரு கம்ப ராமாயணம், ஒரு துளசீ ராமாயணம் மட்டும் அல்ல; இன்னும் எத்தனையோ இலக்கியங்கள் வால்மீகி ராமாயணத்திலிருந்து எழுந்திருக்கின்றன.

# வங்க இலக்கியமும் ராமாயணமும்

நரேந்திர தேவ்

வால்மீகி ராமாயணம் பொதுவாக இந்தியாவுக்குரிய லட்சிய காவியம். வால்மீகி முனிவரின் உத்தரவுப்படி லவகுசர்கள் ராமபிரான் எதிரில் அதைப் பாடிய போது, தங்கள் தந்தைதான் ராமர் என்று அவர்களுக்குத் தெரியாது. சீதா வனவாச காலம் அது. அந்த நாள்முதல் ராமாயண காவியம் இந்தியாவின் மூலை முடுக்கெல்லாம் பரவி, மக்கள் அதைப் பாடி வருகிறார்கள். இந்தியாவைச் சுற்றிலும் ஜாவா, பலி, சுமாத்ரா, சியாம் முதலிய இடங்களில் இன்றும் இனிய ராமாயணப் பாடல்களைக் கேட்டு மகிழலாம்.

பிற்காலத்தில் இந்தியாவில் அங்கங்கே அந்த அந்தப் பிரதேச மொழிகளில் மாற்றியும் சேர்த்தும் வால்மீகி ராமாயணத்தை யொட்டி ராமகதைகள் தோன்றின. மக்கள் இவைகளைத் தமக்குச் சொந்தமாகவே கருதி, சிற்றூர்களிலும் நகரங்களிலும், சந்தைகளிலும் கோயில் எதிரிலும் இவைகளைப் பாடி ஆடி மகிழ்வார்கள். ராமர், சீதை, வீர ஹநுமான், லட்சுமணர் இவர்களை யெல்லாமே தெய்வங்களாகப் போற்றி வருகிறார்கள். எல்லாம் ராமாயணத்தின் மகிமை! ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக வால்மீகி தம் அமரகாவியத்தில் அளித்த ராமனை லட்சிய மன்னனாக இந்தியர் கருதிவருகிறார்கள். தூய வடமொழியில் இருந்த வால்மீகி ராமாயணம் சாதாரண மக்களுக்கு எளிதில் புரியாதிருந்ததால் கி. மு. 6-ஆம் நூற்றாண்டுக்கும் 4-ஆம் நூற்றாண்டுக்கும் இடையில் முதல் முதலாகப் பாளி பாஷையிலும் பின்னால் மக்கள் அந்தக் காலத்தில் பேசிவந்த பிராகிருதத்திலும் ராமாயணத்தை மொழி பெயர்த்தார்கள்.

இப்படிப் பொதுமக்கள் கைக்கு வந்ததும் நாளடைவில் ராமாயணத்தில் விநோதக் கிளைக் கதைகள் சேர்ந்தன; இடைச் செருகல்கள் வேறு வந்துவிட்டன. புத்த ஜாதகக் கதைகளில் ராமாயணத்திலுள்ள பல கதைகள் வெவ்வேறு உருவில் அமைந்திருப்பதைக் காணலாம். இப்படி இந்தியா முழுதும், முக்கியமான மொழிகளில் எல்லாம் ஆகி, இது ஒவ்வொரு குக்கிராமத்திலும் எளியவர்கள் வீடுகளிலும் பரவிவிட்டது.

ராமாயணக் கதையின் எளிமையும் நயமுமே இந்த மாதிரி அது பிரசித்தி பெற்றதற்குக் காரணம்.

காப்பிரைட்: மாடர்ன் ரெவ்யூ (ஆங்கிலம்: ஆகஸ்ட் '54), கல்கத்தா.

தசரதன் புத்திர சோகத்தால் திடீரென்று மரணம் அடைவது, பட்டாபிஷேக சமயத்தில் ராமன் தந்தையின் சொல்படி அதைத் துறப்பது, சீதை தயங்காமல் கணவனுடன் காட்டுக்குப் புறப்படுவது, லட்சுமணபரதர்களின் விசுவாசம், வீரனான ஹநுமான் ஆபத்துக் காலத்திலும் எஜமானனுக்காக உழைக்கத் தயாராக இருந்தது, விசித்திரமான வானரக்கூட்டம், இலங்கையில் வாழ்ந்த பலம் மிகுந்த ராட்சசக் கும்பல் - இவையெல்லாம் பொதுவாக நம் நாட்டு மக்களின் மனத்தைக் கவர்ந்தன. பெண்களும் குழந்தைகளும் இவைகளை மிகவும் ரசித்தார்கள்.

மகாகவி காளிதாசன், பவபூதி போன்ற பிரபல கவிகள்கூட 'ரகுவம்சம்', 'மேகதூதம்', 'உத்தர ராம சரிதம்' இவைகளை எழுதும் போது ராம கதையிலிருந்துதான் விஷயங்களை எடுத்துக்கொண்டார்கள். அதனால்தான் அவர்கள் பெயர் எடுக்க முடிந்தது.

கி. பி. 15-ஆம் நூற்றாண்டில் முதல்முதலாக வங்காளியில் ராமாயணத்தைக் கிருத்திவாச ஓஜா என்ற கவி மொழிபெயர்த்தார். சாந்திபுருக்கு அருகிலுள்ள பூலியா என்ற கிராமத்தில் வாழ்ந்துவந்தவர் கிருத்திவாசர். சிறந்த கற்பனா சக்தி உள்ளவர். சில புதிய சம்பவங்களையும் உள்ளூர் மெருகிட்டுப் பிரமாதமாக எழுதியிருக்கிறார். இந்த மாதிரி ஒன்றுதான் 'தாரிணி சேனின் வீழ்ச்சி' என்ற படலம். இவன் உடம்பெல்லாம் ராமநாமத்தை எழுதிக்கொண்டு ராமனோடு சண்டையிடப் போனான். அங்கதன் ராவணன் சபையில் தூதனாகப் போய் அவனை எள்ளி நகையாடியது, வயிறு குலுங்கச் சிரிப்பூட்டும் அஹி ராவணன் மஹிராவணன் கதை, கும்பகர்ணனை அவவேளையில் எழுப்பிச் சாக அடித்தது - இந்த மாதிரி இன்னும் பல ரசமான சம்பவங்களையும் இதில் காணலாம். வங்காள நாட்டில் மிகவும் புகழ் பெற்று வால்மீகிக்கு ஈடாகவே விளங்கினார் கிருத்திவாசர்.

கி. பி. 16-ஆம் நூற்றாண்டில் பக்தகவி துளசீதாசர் எழுதிய 'ராமசரித மானசம்' என்ற காவியத்தைப் போலவே இதுவும் வெறும் மொழிபெயர்ப்பாக இராமல் தனிச் சிறப்புள்ளது என்பது அறிஞர்கள் பலரின் கருத்து. வங்காளத்தில் கிருத்திவாசருடைய ராமாயணம் இல்லாத வீடே இல்லை என்று சொல்லலாம். வங்காளத்தில் ஒவ்வொரு ஜில்லாவிலும் ராமாயண பாடகர்கள் என்று ஒரு கோஷ்டியார் விழாக் காலங்களிலும் வருஷாந்தச் சந்தைகளிலும் கிருத்திவாச ராமாயணத்தைப் பாடி மக்களை மகிழ வித்துவந்தார்கள். கிருத்திவாசருக்குப் பின் வந்த சுமாரான கவிகள் கூட அவரையே தமக்குத் தோன்றிய விதத்தில் எல்லாம் பின்பற்றி வந்தார்கள். இவர்களில் கவி சந்திரர், அத்புதாசார்யர் இந்த இரண்டுபேரும் முக்கியமானவர்கள். இதனால் என்ன சேர்ந்தது தெரியுமா? இந்த மட்ட ரகமான கவிதைகள் எல்லாங்கூட இடைச்செருகலாகக் கிருத்திவாச ராமாயணத்தில் புகுந்துவிட்டன!

கி. பி. 14-முதல் 18-ஆம் நூற்றாண்டுக்குள் தோன்றிய வங்க இலக்கியத்தை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம்: (1) பதாவளி; இது காவியச் சுவை மிகுந்தது. (2) பாஞ்சாலி; இது சில சம்ப

வங்களை எடுத்துக்கொண்டு அவை களைப் பாடலாக அமைத்தது. (3) சந்தர்ப்பம்; இவை ஆராய்ச்சி செறிந்த வசன நூல்கள்; படிக்க ரசமானவை.

பதாவளியில் வைஷ்ணவ பதாவளி, பிற சமயங்களைப்பற்றிய பதாவளி, காதல் சம்பந்தமான பதாவளி, நாடோடிப் பாடல்களும் கிராம சம்பந்தமான கவிதைகளும் கொண்ட பதாவளி இப்படி நாலு வகை உண்டு.

பாஞ்சாலியிலே மூன்று வகை: (1) சம்ஸ்கிருதத்திலுள்ள இதிகாசங்களான ராமாயண மகாபாரதங்களிலிருந்தும், பாகவத புராணத்திலிருந்தும் மொழி பெயர்த்தவை; (2) மங்கல காவியம், தெய்வங்கள் துஷ்ட நிக்கிரக சிஷ்டபரிபாலனம் செய்த வரலாறுகள்; (3) சாதாரண நாடோடிக் கதைப் பாடல்களும் சமூகத்தில் வழங்கிவரும் பழங்கதைகளும்.

பாஞ்சாலி வகையில் ராமாயணம், மகாபாரதம், பாகவதம் இந்த மூன்றுமே மக்களின் மனத்தை மிகவும் கவர்ந்துவிட்டன. அந்தக் காலத்திலே சிறந்து விளங்கிய வங்க இலக்கியங்கள் ராமாயண தத்துவத்தில் ஊறி எழுந்தவை தான்.

வைஷ்ணவ பதாவளியில் ஸ்ரீ கிருஷ்ணன் பிருந்தாவனத்திலிருந்து மதுரைக்குப் புறப்படும் கட்டத்தில் கோபிமார்கள் பிரிவாற்றமல் வேதனையுற்றுக் கண்ணீர் பெருக்குகிறார்கள். அவனைப் போகவேண்டாமே என்று வேண்டுகிறார்கள். இது சீதா ராம லட்சுமணர்கள் அயோத்தியை விட்டுக் காடு செல்லும் காட்சியை நினைவூட்டுகிறது. காசிராமதாசர் மொழிபெயர்த்த 'மகாபாரத'த்தில் 'வனபர்வ'த்தைப் படிக்கும் போது ராமாயணத்திலுள்ள ஆரண்ய காண்டம் நினைவுக்கு வரும்.

ஜனங்கள் ஏதோ சொன்னதால் சீதையை ராமர் வனவாசம் செய்ய அனுப்பும் கட்டம் போன்ற சில உருக்கமான நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு சந்திரவதி தேவி என்பவள் அழகிய பாடல்கள் பல பாடியிருக்கிறாள். இதனால் வங்காளம் முழுதும் பெயர் எடுத்தாள். இவள் வடக்கு வங்காளத்தில் அந்தக் காலத்தில் பிரசித்தி பெற்று விளங்கிய கவி வம்சீதாசரின் மகள். ராமாயண கதாகாலட்சேபத்தில் மிகவும் தேர்ந்தவர் வம்சீதாசர்.

மங்கலகாவிய வகையிலும் ராமாயண தத்துவம் அடங்கியிருப்பதைக் காணலாம். தட்சிண் ராய்க்கும் அவனுடைய எதிரிக்கும் நடந்த போர் லங்கா காண்டத்தை நினைவூட்டும்.

'சண்டிமங்கல்' என்ற காவியம் முகுந்தராம் என்பவர் எழுதியது. இதில் தலைவி அக்கினிப்பிரவேசம் செய்யும் காட்சி ராமாயணத்தில் சீதை அக்கினிப் பிரவேசம் செய்கிறமாதிரியே அமைந்திருக்கிறது. இதில் வரும் காலகேது என்ற தலைவன் வால்மீகி சிருஷ்டித்த ராமபிரானின் பிரதிபிம்பம் என்றே சொல்ல வேண்டும்.

காசிராமதாசர் எழுதிய மகாபாரதத்திலிருந்து தம் 'அசுவமேத பாஞ்சாலி'யில் ரகுநாததாசர், ஏராளமான கருத்துக்களை எடுத்துக்கொண்டிருக்கிறார். என்றாலும், ராமாயணத்தில் ராமனுடைய அசுவமேத யாகக் காட்சிகளைப் போலவே இதுவும் விரிவாக அமைந்திருக்கிறது. சீதை வன

வாசத்தில் இருக்கும்போது லவ குசர்களை எதிர்த்துப் பரதனும் லட்சுமணனும் தோற்றுப் போகும் காட்சியைப்போலவே இருக்கிறது, அசுவமேத பாஞ்சாலியில் பப்ரு வாஹனனுக்கும் அர்ஜுனனுக்கும் நடக்கும் போர்.

வங்காள நாடோடிப் பாடல்கள், பிரபல கதைப் பாடல்கள், தேவதைக் கதைகள் இவைகள் எப்போது தோன்றின என்று நிச்சயமாகத் தெரியவில்லை. இருந்தாலும், பின்னால்தான் ஏற்பட்டிருக்கவேண்டும். சீதவசந்தன் கதை, காஞ்சனமாலையின் கதை இவைகளில் எல்லாம் ராஜகுமாரர்கள் ராட்சச ராஜ்யத்திலிருந்து ராஜகுமாரிகளை மீட்டுவந்த வரலாறுகள் ராமாயணக் கருத்திலிருந்து தோன்றியவைதான்.

இப்படி இடைக்காலத்திலும் பிற்காலத்திலும் தோன்றிய நூல் எதை எடுத்தாலும் நேராகவோ மறைமுகமாகவோ ராமாயணக் கருத்துக்கள் அதில் ஆழ்ந்திருப்பதைக் காணலாம். இருந்தாலும் தங்களை அறியாமலேயே இந்த நூல்களின் ஆசிரியர்கள் இந்தக் கருத்துக்களை ஏற்று எழுதினார்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.

வங்காளத்தில் நாடோடி இலக்கியத்திலும், கிராமவாசிகள் நடத்திவந்த 'ஜாத்ரா' என்ற கூத்து வகைகளிலும் இதிகாசங்களிலிருந்து-அதுவும் முக்கியமாக, ராமாயணத்திலிருந்து - சம்பவங்களை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ராமாயணம் இவர்களுக்கு ஒரு கற்பகவிருட்சமாக இருந்து உதவியது என்று நிச்சயமாகச் சொல்லலாம். 'கிருஷ்ண லீலை' சம்பந்தமான ஆட்டம் பாட்டம் வருவதற்கு முன்பு ராமனையும் சீதையையும்பற்றிய நாடகங்கள் தான் கிராமங்களில் பிரபலமாக இருந்தன.

இப்போதும் உத்தரப் பிரதேசம், பிஹார் இங்கெல்லாம் 'ராமலீலா' நாடகங்கள் நடைபெறுகின்றன. வங்காளத்தில் நடக்கும், 'புதுல் நாச்' என்ற பொம்மலாட்டத்தில் பெரும்பாலும் ராமாயண பாத்திரங்களைத்தான் காட்டிவந்தார்கள். கிராமங்களில் வழங்கும் தனிப் பாடல்கள், சிந்துகள் இவைகளில் ராமாயண சம்பந்தமான அரிய விஷயங்களைக் காணலாம். இந்தக் காலத்து இலக்கியங்களிலும் உபமானமாக அநேக இடங்களில் ராமாயண சம்பவங்களைக் காணலாம். ராம்மோகன் ராய், ஈசுவரசந்திர வித்தியாசாகரர், பங்கிம்சந்திரர் இவர்கள்தான் 19-ஆம் நூற்றாண்டின் இடையில் தற்கால வங்க இலக்கியத்துக்கு வழி கோலியவர்கள்.

மைக்கேல் மதுசூதன தத்தர் சமீபகாலத்தில் வாழ்ந்த வங்க கவிகளில் முக்கியமானவர். அவருடைய 'மேகநாத வத காவியம்' ராமாயண சம்பவம் ஒன்றிலிருந்து எடுத்ததுதான். அதேமாதிரி இந்தக் காலத்து நாடகங்களுக்கும் ராமாயணக் கதை உதவியிருக்கிறது. கிரீஷ்சந்திர கோஷ் பிரபல வங்க நாடகாசிரியர். சிறந்த நடிகராகவும் விளங்கினவர். இவர் ராமாயணம், மகாபாரதம், ராஜபுத்திரக் கதைகளிலிருந்தெல்லாம் தாராளமாக எடுத்துப்பல அற்புதமான நாடகங்களை எழுதினார். சினிமாவில்கூட இன்னும் ராமாயணம், மகாபாரதம் சம்பந்தமான கதைகளைத்தான் எடுத்து வருகிறார்கள். உதாஹரணம், சீதா

வனவாசம், லட்சுமண வர்ஜனம், ராமசந்திர ராஜ்யாபிஷேகம், சீதா அக்கினி பரீட்சை, ஹரதநுபங்கம், வாலி வதம், லங்கா தகனம் இவை இந்த மாதிரி சமீபகாலத்தில் தோன்றிய வங்க நாடகங்கள்.

கவிகுரு ரவீந்திரநாதர், சரத் சந்திரர் இவர்களுடைய நூல்களிலும் ராமாயணக் கருத்துக்கள் நன்றாக ஊறியிருக்கின்றன. ரவீந்திரரின் 'வால்மீகி பிரதிபா' இந்த மாதிரி ஓர் அரிய காவியந்தான்.

ரவீந்திரர், ராமாயணத்தைக் 'குடும்பகாவியம்' என்பது வழக்கம். பாரத நாட்டின் நிரந்தர சரித்திரமே அதில் அமைந்திருக்கிறது என்று சொல்லலாம். இந்தியா ஒழுக்கம், ஆத்மிகத் துறைகளில் சிறந்து விளங்குவதற்கு ராமாயணமே காரணம். மனிதனுடைய உலர்ந்த லட்சியம் இன்னது என்ற கருத்து ராமாயணத்தில் அடங்கியிருக்கிறது. "பாரத நாடும் ராமாயணமும் இணை பிரியாதவை. இரண்டும் ஒன்றே" என்றுகூடச் சொல்லிவிட்டார் ரவீந்திரர். 'நம் வாழ்விலும் இலக்கியத்திலும் ராமாயணக் கருத்துப் பதிந்து, நம் பரம்பரைச் சொத்தாகவே விளங்குகிறது. அது வற்றாத சுரக்கும் ஊற்று; நம் மனத்துக்கும் ஆத்மாவுக்கும் நிரந்தரமான சக்தி தந்து வளர்க்கிறது என்பது கவியின் கருத்து. ராமாயணத்தின் அடிப்படையான நீதி இன்றும் நம் உள்ளத்தில் எதிரொலிப்பதைக் காணலாம்.

அது நம்மைச் செம்மையாக்கி உள்ளத்தை நிறைவுபடுத்துகிறது. என்றென்றும் அது நம் அறிவு ஒளிரத் துணை புரிகிறது; சிறந்தோங்கச் செய்கிறது. எந்தக் காலமும் எந்தத் துறையிலும் அதன் செல்வாக்குப் பரவி நித்தியமாக விளங்கும்.

## புகழுரையின் சக்தி

ஒருவரைப் புகழ்ந்தால், அவருக்கு அது இன்பந் தருகிறது. இதுமாத்திரம் அல்ல; அவருக்கு அதிகமான சக்தியும் தருகிறது. இதை இப்போது விஞ்ஞான ஆராய்ச் சிக்கூடத்தில் ஒரு கருவி மூலம் அளந்து பார்த்து விட்டார்கள்.

அந்தக் கருவிக்கு 'எர்கோகிராஃப்' என்று பெயர். நியூ ஜெர்ஸி என்ற ஐக்கிய அமெரிக்க மாகாணத்தில், டாக்டர் ஹென்றி எச். கொடார்டு என்பவர் இதைக் கொண்டு பரீட்சைகள் செய்தார்.

களைத்துப் போயிருந்த ஒரு குழந்தையை இந்தக் கருவியின் முன்பு உட்கார்த்தி வைத்தார்கள். உதவி டாக்டர் ஒருவர், "பேஷாயிருக்கிறாயே, ஜான்" என்று உற்சாகமாகப் பையனிடம் சொன்னார். உடனே அவனுடைய சக்தி உயர்ந்ததைக் கருவி காட்டியது. குற்றமும் குறையும் சொன்னபோதோ இதேபோல அவனுடைய சக்தி குறைந்தது.

—ஆர். டி.

# என்னைக் கேளுங்கள்

காப்டன் என். சேஷாத்திரிநாதன்

**வைத்தியம், சுகாதாரம், ஆரோக்கியம் இவைபற்றி 'மஞ்சரி' வாசகர்கள் கேட்கும் கேள்விகளுக்கு இயன்றமட்டில் பதிலளிக்க இந்த டாக்டர் இசைந்திருக்கிறார். இவர் வைத்தியத் துறையில் கல்வியும் அநுபவமும் நிறைந்தவர்; ரத்தப் பரிசோதனை நிபுணர்; கிண்டி இன்ஸ்டிட்யூட் அதிகாரியாக இருந்தவர். நோயுள்ளவரின் தனித்தனி நிலையை நேரில் கவனித்தே டாக்டர் வைத்தியம் செய்ய வேண்டும். ஆகவே, இதில் வரும் பதில்களைப் பொதுவாகக் கொள்ளலாமே தவிர, வைத்தியமே இவற்றைக் கொண்டு செய்துகொள்ளலாம் என்று நண்பர்கள் நினைக்கக் கூடாது.**

கல்பகம், லட்சுமிபுரம்:

**கேள்வி 1:** கர்ப்பத் தடையைப் பற்றி எல்லாரும் தனிமையில் பேசிக்கொள்கிறார்கள். சில பத்திரிகைகளிலும் அதுபற்றி எழுதுகிறார்கள். ஆனால் அதை வெளிப்படையாகப் பிரசாரம் செய்ய ஏன் பயப்படுகிறார்கள்?

**விடை:** இந்தக் கேள்வி நல்ல கேள்வி. அநேக விஷயங்களை நாம் வெளிப்படப் பேசமாட்டோம்; வெளிப்படச் செய்யமாட்டோம். எந்த விஷயத்திலேனும் காம இச்சைத் தொடர்பிருந்தால், அதை நாம் பகிரங்கமாய்ப் பேச மாட்டோம். இது மனித நாகரிகம் ஆரம்பித்த காலம் முதல் பழக்கத்தில் இருந்து வருகிறது. அப்படிப் பகிரங்கமாய்ப் பேசுகிறவர்கள் இரண்டிலொரு காரணத்தால் பேசலாம். காதலுணர்ச்சிக்கு இடங் கொடுக்காமல் காம இச்சைக்கு வசமாகிறவர்கள் இப்படிப் பகிரங்கமாய்ப் பேசுவார்கள்; காமத்தை அடக்கி வைத்திருப்பவர்களும் இந்த விஷயங்களைப்பற்றி வெளிப்படப் பேச அஞ்சமாட்டார்கள்.

கர்ப்பத்தடையை இரண்டு காரணங்களால் ஒருவர் கோரலாம். சுயேச்சையாகக் காமசுகம் அநுபவிக்க வேண்டுமென்று ஒரு சிலரும், தங்கள் ஆரோக்கியம் குறையாமல், காப்பாற்றிக்கொள்வதோடு பிறக்கும் குழந்தைகளைச் சீராக வளர்க்க வேண்டுமே என்ற கவலையால் வேறு சிலரும் கர்ப்பத்தடையை விரும்புகிறார்கள். இரண்டாவது வகுப்பைச் சேர்ந்தவர்களுக்குத் தக்க உபாயம் கற்றுக்கொடுக்க ஆஸ்பத்திரிகளில் வசதி செய்து வருகிறார்கள். இவர்கள் துணிந்து அங்கே சென்று கர்ப்பத்தடை முறைகளைக் கற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

**கே. 2:** நவீன நாகரிகக் குடும்பப் பெண் ஒருத்தி தன் வியாதிக்காரக் குழந்தையை வீட்டில்

விட்டு 'லேடீஸ் கிளப்' புக்குப் போவது நியாயமா?

வி: இந்த விஷயத்தில் நியாய அநியாயங்களை வகுப்பது எளிதல்ல. 'லேடீஸ் கிளப்' போன்றவற்றில் கலந்துகொள்ள விரும்பும் பெண்கள், பொது விஷயங்களில் ஈடுபட ஆசை கொண்டவர்கள். அவர்கள் மணம் புரிந்துகொண்டு குடும்ப வாழ்க்கையில் புகும்படி செய்வது நியாயமா என்று நான் பதிலுக்குக் கேட்க வேண்டி வருகிறது.

கே. 3: அம்மை, காலரா போன்ற நோய்களைத் தடுப்பதற்காக அம்மை குத்துவது போன்ற முறைகளைக் கையாண்டும் பலர் அந்த வியாதிகளுக்கு வசமாகிறார்களே; இது ஏன்?

வி: இந்த நோய்களைத் தடுக்கும் உபாயமாக அம்மை குத்தும்போது, அது இந்த நோய்க் கூறுகளைச் சிறிதளவு தோற்றுவிக்கிறது; அதனால் உடம்பில் எதிர்ப்புப் பொருள் உற்பத்தியாகிறது. ஆனால் இந்த எதிர்ப்புப் பொருள் வெகு நாள் உடம்பில் தங்கி இராது. சிறிது காலந்தான் தங்கியிருக்கும். அதற்குப் பிறகு திரும்பவும் அம்மை குத்திக்கொள்ள வேண்டும். சில நோய்களில் எதிர்ப்புப் பொருளைச் செயற்கையாக உற்பத்தி செய்ய



அம்மை குத்துவது போன்ற முறை பலிப்பதில்லை. அம்மை குத்திக்கொண்டவர்களுக்கும் சில வேளை நோய் தோன்றலாம். ஆனால் அது வீரியம் குறைந்தே தோன்றும்.

கே. 4: மூன்று வயதான குழந்தை சாதம் சாப்பிடாமல் 'பாலையே சாப்பிடுவேன்' என்று இருந்தால், நாம் என்ன செய்வது?

வி: இந்தக் குழந்தைக்கு அடுத்தாற்போல் ஒரு குழந்தை தாய்க்குப் பிறந்திருக்கவேண்டும். அந்தக் குழந்தைபற்றி முதல் குழந்தைக்குப் பொறாமை உண்டாகலாம். இதனால் தானும் அதைப்போல் பால்குடிக்க வேண்டு



மென்று குழந்தை விரும்புவது இயல்பே. ஆகையால் கட்டாயப் படுத்தாமல் மாவுகள் கலந்த பாலை மெல்ல மெல்லக் கொடுத்து, பிறகு கூழ் கொடுத்து, இப்படியே படிப் படியாகச் சாப்பாட்டில் கொண்டு வந்து விடலாம்.

அபுபேக்கர், வெள்ளவாட்டா:

கே: இளம்பிள்ளை வாதம் தொத்து வியாதியா? அப்படியானால் தொத்திக்கொள்ளாமல் இருக்க என்ன பாதுகாப்புக்களைக் கைக்கொள்ள வேண்டும்?

இளம்பிள்ளை வாதம் சுகப்படுத்த முடியாத வியாதியா? அல்லது அதற்கு எவையேனும் சிகிச்சை முறைகள் உண்டா?

வி: இளம்பிள்ளைவாதம் தொத்துநோயே. தொத்திக் கொள்ளாதிருக்கத் தூய்மையான வாழ்க்கை வசதிகள் வேண்டும். மலமூத்திராதிகளின் மூலம் இந்த வியாதி பரவக் கூடுமாகையால், அவை ஈ மூலமாகவோ, அருந்தும் நீர் உணவு மூலமாகவோ உடம்பில் சேரக்கூடாது. உணவுகளை நன்றாக வேக வைக்கவேண்டும். அருந்தும் நீர் பரிசுத்தமாக இருக்கவேண்டும்.

இதற்கு 'வாக்ஸின்' தயாரிக்கும் முறை ஒன்றை அமெரிக்காவில் ஆராய்ச்சி செய்து வருகிறார்கள். விரைவில் பலன் கிடைக்கலாம். அப்போது இந்த 'வாக்ஸின்' நம் நாட்டிலும் அகப்படலாம்.

இந்த நோயைக் குணப்படுத்தக் கூடிய மருந்து ஒன்றும் இப்போது இல்லை. ஆனால் வியாதி தோன்றித் தசைகள் தளர்ந்து போனால், அதனால் விளையும் கேடுகளைக் கூடிய மட்டும் குறைக்கத் தக்க கருவிகள் இருக்கின்றன. அவைகளை உபயோகிக்கலாம்.

மூச்சுவிட அவசியமாயிருக்கும் தசைகள் சில வேளை தளர்ந்து போனால், திரும்பவும் ஓரளவு வேலை செய்து மூச்சு ஏற்படச் செய்யும் வரையில் செயற்கைச் சுவாசகோசம் என்ற கருவியை உபயோகிக்கலாம். நோயாளி இறந்துவிடாமல் இது காப்பாற்றும்.

இந்த நோய்க்கு மருந்து உபயோகித்துத் தசைத் தளர்ச்சியைத் தடுக்க முன்னெச்சரிக்கைக் குறிகள் தெளிவாகத் தோன்றுவதில்லை.

வி. ஜி. ராஜன், சென்னை:

கே. 1: காபிக்கும் தயிர் மோருக்கும் பவுடர் பால் உபயோகிக்கலாமா? பவுடர் பால் நுரைப்பது ஏன்?

வி: பவுடர் பாலை உபயோகிக்கலாம். ஆரோக்கியத்தை அது பாதிக்காது. ஆனால் பவுடர் பாலை உபயோகித்தவர்கள் கறிகாய் கட்டாயமாய்ச் சேர்த்தால்தான், வேண்டிய அளவு வைட்டமின் சத்துக்கள் உடம்பில் சேரும். பவுடர் பால் நுரைப்பதற்குக் காரணம் அதில் அடங்கிய அதிக அளவு சத்தேயாகும்.




கே. 2: புளிக்குப் பதில் சமையலில் சிட்ரிக் ஆஸிட் உபயோகிக்கலாமா?

வி: புளியில் சிட்ரிக் ஆஸிட்டைத் தவிர ருசியும் சுவையுமுள்ள வேறு பொருள்களும் இருக்கின்றன. ஆகவே, சிட்ரிக் ஆஸிட்டை மட்டும் உபயோகித்துச் சமையலுக்குரிய முழுப் பலனையும் பெற முடியாது.

**நஜீர், தாராபுரம்:**

கே: சும்மா இருந்தாலும் வேலைசெய்தாலும் வேர்வை உண்டாகிறதே; இதற்குக் காரணம் என்ன?

வி: சிலருக்குச் சுபாவமாகவே இப்படி வேர்வை உண்டாகலாம். இதற்குப் பரிகாரம் தேடினால், அது வேறு கோளாறுகளில் கொண்டுபோய்விடக்கூடும். க்ஷயரோகம் ஏற்பட்டிருந்தால் சாதாரண அளவை விட அதிகமாய் வேர்வை உண்டாகலாம். அதுவும் இரவில்தான் அதிகமாகும். அந்த ரோகம் இல்லையா என்பதைத் தெரிந்துகொள்ள வைத்தியரை நேரில் கண்டு தேகஸ்திதியை ஆராய்ந்துகொள்ள வேண்டும்.

**லட்சுமி அம்மாள், சென்னை:**

கே: குழந்தைகளுக்கு எப்படித் துப்புரவு முறைகளைக் கற்றுக்கொடுப்பது?

வி: குழந்தைகள் விஷயத்தில் அவர்களுக்கு நாம் கற்றுக் கொடுப்பதென்று புறப்பட்டால் வெற்றி அடைய மாட்டோம். அவர்கள் தாங்களே கற்றுக் கொள்ள வசதி யளிப்பதே நல்ல உபாயமாகும். குழந்தைகள் இருக்கும் இடத்தில் துப்புரவு ஓரளவு குறைவாகத்தான் இருக்கும்; சாமான்களையும் ஒழுங்காக அவர்கள் வைத்திருக்க மாட்டார்கள். நாம் வீட்டில் எவ்வளவுக்கு எவ்வளவு சாமான்களை ஒழுங்கு படுத்தித் துப்புரவாய் வைக்கிறோமோ அவ்வளவுக்கு அவ்வளவு குழந்தைகளிடமும் ஒழுங்கையும் துப்புரவையும் எதிர்பார்க்கலாம். ஆயினும், ஒரு குழந்தைக்கும் மற்றொரு குழந்தைக்கும் இந்த விஷயங்களில் வித்தியாசங்கள் இருக்கத்தான் இருக்கும்.

**செல்வம், சென்னை:**

கே: 10 மாதம் முதல் இரண்டு வயது முடியும் வரை உள்ள குழந்தைகள் இரவு பத்து மணிக்கு மேல் 1 மணிக்கும் 5 மணிக்கும் எழுந்து பசி என்று அழுது தாய்ப் பாலும் இல்லையானால் அவர்களுக்கு என்ன கொடுப்பது நல்லது?

வி: குழந்தைகள் ஒழுங்குக்கு வசப்படுகிறவர்கள். இரவில் பத்து மணிக்கு மேற்பட்டு எழுந்திருந்து பாலூட்டக் கேட்கும் குழந்தைகள் மிகக் குறைவே. அழுதவுடனே பாலூட்டும் பழக்கத்தாலேயே இப்படி எழுந்து அழுகின்றன. பத்து மணிக்கு வயிறு நிறையும்படி பால் கொடுத்துவிட்டால், ஆரோக்கியமான குழந்தை ஐந்து அல்லது ஆறு மணிக்குத்தான் எழுந்திருக்கும். ஆரோக்கியக் குறைவாயுள்ள குழந்தைக்கு வைத்தியரை நேரில் கேட்டுத் தக்க சிகிச்சை செய்ய வேண்டும்.

**தெளிவில்லாத கடிதம்:**

பெரிய குடும்பத்தினர் ஒருவர் கர்ப்பத்தடை விஷயமான கேள்விகளைக் கேட்டிருக்கிறார். எழுத்தும் தெளிவாக இல்லை; விலாசமும் கொடுக்கவில்லை. ஆகவே, நான் விடையும் கொடுக்கவில்லை.

### விதி விட்ட வழி

விதி விட்ட வழி விடட்டும் என்று ஒருவன் அதற்குப் பணிந்துவிட்டால், விதி சட்டென்று அவனை ஆட்கொண்டு விடுகிறது.

—ஓ. எ. பாட்டிஸ்டா

ஜப்பானிலேயே பெரியது, 10 லட்சம் பிரதி செலவாவது இவருடைய தினசரி.

# தந்திரமான பத்திரிகைக்காரர்

★



உலக நாடுகளுக்குள் எழுதப் படிக்கத் தெரிந்தவர் விகிதம் மிக அதிகமாக உள்ளது ஜப்பான்தான். அங்கே உள்ள மக்களில் நூற்றுக்குத் தொண்ணூற்றெட்டுப் பேர் எழுதப் படிக்கத் தெரிந்தவர். அங்கிருக்கும் செய்திப் பத்திரிகைகள் மிகப் பெரியவை; பரபரப்பூட்டும் சமாசாரங்களையே பெரும்பாலும் பிரசுரிப்பவை. ஆசிரியர்கள் செய்தி சேகரிக்கச் சர்வ சாதாரணமாய்த் தங்கள் சொந்த விமானங்களை விடுகிறார்கள்; படை படையாக நிருபர்களை அனுப்புகிறார்கள்; மணிக்கு மணி செய்தி கொண்டு வரும் புறாக்களை வளர்க்கிறார்கள்.

ஜப்பானுக்குள்ளேயே மிகப் பெரிய தினசரிப் பத்திரிகை 'யோமியூரி' என்பதுதான். இது டோக்கியோ நகரில் வெளியாகிறது. தினந்தோறும் 21 லட்சம் பிரதி செலவாகிறது. இதன் பிரசுரகர்த்தர் 69 வயதுள்ள மட்ஸுடாரோ ஷோரிகி. இவருக்கு இணையாக ஆடம்பர ஆர்ப்பாட்டங்கள் செய்யக்கூடியவர் வேறு எவருமே இல்லை. இந்தத் தினசரியைத் தவிர வேறே எட்டுப் பெரிய சஞ்சிகைகளையும் இவர் வெளியிடுகிறார். தவிர, டெலிவிஷன் காட்சி நிகழ்த்தும் பெரிய ஸ்தாபனம் ஒன்றும் இவருக்குச் சொந்தமாயிருக்கிறது. ஜப்பானில் இருப்பதே இவருடைய ஒரே டெலிவிஷன் ஸ்தாபனந்தான்.

சமீபத்தில் ஷோரிகி தமக்குத் தாமே டோக்கியோ நகரில் ஞாபகச் சின்னம் ஒன்று எழுப்பிக் கொண்டு விட்டார். நகரிலேயே மிக உயரமான கட்டிடம் என்று சொல்லத் தக்க டெலிவிஷன் கோபுரம் ஒன்றை எழுப்பினார். அதன் உயரம் 436 அடி. அதற்கு 'லிஃப்ட்' உண்டு. அந்தக் கோபுரத்தில் ஏறி, பட்சிகளுக்குச் சமமாக டோக்கியோ நகரக் காட்சியை ஜனங்கள் பார்க்கலாமாம்.

இப்போது ஜப்பான் சக்கரவர்த்தியாயிருப்பவர், 1924- இல் ஜப்பான் ராஜகுமாரராக இருந்தார். அப்போது அவரைக் கொல்ல ஒரு முயற்சி நடந்தது. ஷோரிகி அந்த நாளில் போலீஸ் இலாகாவில் உதவித் தலைமை அதிகாரியாக இருந்தார். போது

காப்பிரைட்: டைம் (ஆங்கிலம்: 16-8-'54), சிக்காகோ, ஐக்கிய அமெரிக்கா.

மான பாதுகாப்பு அளிக்கத் தவறினார் என்று இவரை வேலையிலிருந்து தள்ளினார்கள். "அப்போது நான் ஹரகிரி (தற்கொலை) செய்துகொண்டிருக்க வேண்டும்; அதற்குப் பதிலாகச் செய்திப் பத்திரிகை ஒன்றை வாங்கிவிட்டேன்" என்று இப்போது சொல்கிறார் ஷோரிகி. கொஞ்சம் பணம் கடன் வாங்கினார். 40 ஆயிரம் பிரதி விற்பனையோடு சிரமப்பட்டுக்கொண்டிருந்த 'யோமியூரி'யை, அந்தப் பணத்தைக் கொண்டு வாங்கினார்.

அவருக்குத்தான் போலீஸ் இலாகாவில் இருந்து நல்ல அநுபவம் உண்டே; அதனால் டோக்கியோவில் பரபரப்பூட்டும் கொலை, களவு முதலிய செய்திகளையெல்லாம் விடாமல் சேகரித்துத் தம் பத்திரிகையில் வெளியிட்டார். அதோடு ஜப்பானிலேயே முதல் முதலாக ரேடியோ பகுதி, 'காமிக்ஸ்' என்ற சித்திரக் கதைகள் எல்லாம் சேர்த்தார். நாலே வருஷத்தில் 'யோமியூரி' விற்பனை ஐந்து மடங்காகப் பெருகியது.

பிறகு, ஐக்கிய அமெரிக்காவிலிருந்து பேப் ரூத், லூ கெரிக், ஜிம்மி ஃபாக்ஸ் ஆகிய பிரபல நட்சத்திரங்களையெல்லாம் இறக்குமதி செய்தார். அவர்களுடைய நடமாட்டங்களையெல்லாம் துளி விடாமல் 'யோமியூரி'யில் பிரசுரித்தார். "இதனாலெல்லாம் பத்திரிகை விற்பனை மேலும் மேலும் ஏறிக்கொண்டே போயிற்று" என்று ஷோரிகியே சொல்கிறார்.

இரண்டாவது உலக யுத்தம் நெருங்கி வருவதை அவர் கண்டார். உடனே தம் கொள்கையை மாற்றிக்கொண்டார். அமெரிக்காவை ஆதரிக்கும் கொள்கையைக் கைவிட்டார். ஜப்பானின் ராணுவ பலத்தை வளர்க்க வேண்டும், நாடு பிடிக்க வேண்டும் என்றெல்லாம் பலத்த கூச்சல் எழுப்பத் தொடங்கினார். 'யோமியூரி'யின் விற்பனை பத்து லட்சம் பிரதிகளுக்கு ஏறியது. யுத்தம் முடிந்தது. ராணுவத் திமிரை வளர்க்கும் விதத்தில் பத்திரிகை நடத்தினார் என்று ஜப்பானிய யுத்தக் கைதியாக அவரைச் சிறை செய்தார்கள். ஆனால், விசாரணைக்குக் கொண்டு வரவேயில்லை. இருபத்தொரு மாதங் கழித்து அவரை விடுதலை செய்தார்கள்.

சமயத்துக்குத் தகுந்தாற்போல் வேஷம் போடுவதில் அவர் நிபுணர். குண்டு பட்டுத் தகர்ந்து கிடந்த தம் கட்டிடத்திலே போய், டஜன் கணக்கான தக்காளி, கக்கரிக்காய் ஸாண்ட்விச்சுகளைத் தின்றுகொண்டும் காலன் கணக்கான ஐஸ் க்ரீமை விழுங்கிக் கொண்டும், மறுபடியும் ஆபீஸைத் தொடங்கினார். தாங்கள் எப்படி எப்படி வேலை செய்ய வேண்டும் என்பதைக் கேட்டுக்கொள்ளுவதற்காக, ஆசிரியர் பட்டாளமும் அணி அணியாய் வந்து சேர்ந்தது. 1951 - ஆம் ஆண்டு ஜப்பானிய சமாதான உடன்படிக்கையின்படி 'யோமியூரி'க்கு மீண்டும் அவரே சட்டப்படி சொந்தக்காரரானார். பத்திரிகையைத் திரும்பப் பெற்று, அச்சு யந்திரங்களையெல்லாம் புதுப்பித்தார்.

பத்திரிகை விற்பனைக்கேற்றபடி தம் அரசியலை மாற்றிக் கொள்வதில் ஷோரிகிதான் சமர்த்தராயிற்றே! அமெரிக்க - ஜப்பான் சிநேகத்தை ஆதரிக்கத் திரும்பிவிட்டார். மிக்க ஆத்

திரத்தோடு கம்யூனிஸ்டுகளைத் திட்ட ஆரம்பித்தார். ஐக்கிய அமெரிக்காவின் 'பேஸ்பால்' என்ற பந்தாட்டச் செய்திகள், நியூயார்க் பங்கு மார்க்கட் அட்டவணைகள், பெண்கள் பகுதி, ஸினிமாத் தொழில் ஆகிய இனங்களையெல்லாம் பத்தி பத்தியாக வெளியிடலானார். ஜப்பான் சர்க்கார், நாஜிகள், ஐக்கிய அமெரிக்க சர்க்கார், வில்லியம் ரண்டால்ஃப் ஹார்ஸ்ட் ஆகியவரிடமெல்லாம் அவர் வெவ்வேறு சமயங்களில் பணம் வாங்கிக் கொண்டார் என்று அவர்மீது சிலர் குறை கூறுகிறார்கள். இதற்கு அவர் சொல்லும் பதில் இதுதான்: "மூளை உள்ளவனுக்கு இவ்வளவெல்லாம் பணம் எதற்கு?"

## ஞாபகக் குறிப்பு

மாக்ஸ் ஷூஸ்டர் என்பவர் பிரபல பிரசுரகர்த்தர். நாள் முழுவதும் சம்பாஷணைகளில் கேட்ட விசேஷக் கருத்துக்கள், வசனங்கள், புஸ்தகப் பிரசுர யுக்திகள் எல்லாவற்றையும் துண்டு துண்டாக எழுதித் தம் ஜேபிக்குள் அவர் போட்டுக்கொண்டேயிருப்பார். இரவில் தனியே உட்கார்ந்து, இத்தனை ஞாபகக் குறிப்புக்களையும் வெகு கவனமாய் ஆராய்ந்து, விளக்கமாக எழுதி, பத்திரப்படுத்தி வைத்து விட்டுத்தான் தூங்குவார்.

மாக்ஸ் ஈஸ்ட்மான் என்பவர் பிரபல ஆசிரியர். அவர் ஒரு நாள் ஒரு சிறு காகிதத் துண்டில் 'டிங்கிள்ஸ்பீல்' என்று ஒரே ஒரு வார்த்தையை எழுதினார். இந்தப் பிரசுரகர்த்தருக்குத் தெரியாமல் இவருடைய ஜேபிக்குள் அந்தக் காகிதத் துண்டைப் போட்டுவிட்டார்.

பிரசுரகர்த்தர் அன்றிரவு தம் ஜேபியிலிருந்த ஞாபகக் குறிப்புக்களையெல்லாம் எடுத்து ஆராய்ந்தபோது, இந்த 'டிங்கிள்ஸ்பீல்' துணுக்கு வந்து சேர்ந்தது. 'இதை எதற்காகக் குறித்தோம்?' என்று வெகு நேரம் யோசித்து யோசித்துப் பார்த்தார். எவ்வளவு நாழிகை கண் விழித்தும் ஒன்றும் புரியவில்லை. தூக்கமே பிடிக்கவில்லை. ஒரு வார காலம் இதே சிந்தனை. ஆபீஸுக்குப் போனால், அங்கேயும் ஆழ்ந்த சிந்தனையோடு, "டிங்கிள்ஸ்பீல், டிங்கிள்ஸ்பீல், டிங்கிள்ஸ்பீல்" என்று தமக்குத் தாமேயும் சில சமயம் உரத்தும் ஜபித்துக் கொண்டே அங்குமிங்கும் உலாத்துவார்.

ஒரு வாரத்துக்குப் பிறகுதான், 'இந்த ஞானத் துணுக்கு நமக்கு வேண்டாம்; இதனால் பைத்தியம் பிடிக்காமல் தப்பித்துக்கொண்டால் போதும்' என்று தீர்மானித்து, 'டிங்கிள்ஸ்பீ'லை அடியோடு விட்டொழித்தார்.

—'காரோனெட்'

## அப்பாவுக்காக

**கா**ல்பந்தாட்டப் பயிற்சி அளிப்பதில் லூ லிட்டில் என்ற அமெரிக்கர் ஒரு நிபுணர்.

அவரிடம் பயிற்சி பெற்ற ஒரு கோஷ்டியில் அலாதியான ஒரு வாலிபன் இருந்தான். அப்படி ஒன்றும் சிறப்பாக அவன் ஆட மாட்டான். ஆனல், அவனைக் கண்டாலே மற்றவருக் கெல்லாம் ஒரு குஷி. பந்தாட்ட மைதானத்தில், அந்த வாலிபனும் அவனுடைய தந்தையும் அடிக்கடி கைகோத்துக் கொண்டு நடப்பார்கள். அவர்கள் ஒய்யாரமாய் நடப்பதைக் காண்பவரெல்லாம் ஆனந்தம் அடைவார்கள். பயிற்சி கொடுக் கும் நிபுணருக்கு அந்தப் பையனிடம் தனியான ஒரு பிரியம். ஆனல், அவனை அவர் அதிகமாய் ஆட விடுவதில்லை.

ஒரு சமயம் பெரிய போட்டி ஆட்டம் ஒன்று நடக்க ஒரு வாரம் இருந்தது. அப்போது வீட்டிலிருந்து, இந்த வாலிப னின் தந்தை மாரடைப்பால் இறந்ததாகச் செய்தி வந்தது. வாலிபன் துக்கத்தோடு வீடு போய்ச் சேர்ந்தான்.

மூன்று நாளைக்கெல்லாம் அவன் திரும்பி வந்தான். "இறுதிப் போட்டியில் ஆட எனக்குக் கட்டாயம் நீங்கள் இடங் கொடுக்க வேண்டும். என் அப்பாவின் மனசு திருப்தி அடைய இது அவசியம்" என்று நிபுணரைக் கெஞ்சினன்.

"சரி, பையா. ஒன்றிரண்டு ஆட்டம் ஆடு. அப்புறம் நீ பயனில்லை. உனக்கே தெரியும்" என்ருர்.

பையன் ஆடத் தொடங்கினன். ஒரு மணி நேரம் பார்த்தவரெல்லாம் பிரமிக்கும்படி அற்புதமாய் ஆடினன். ஆட்டத்தை விட்டு வரும்படி கடைசி வரையில் அவனை நிபுணர் அழைக்கவேயில்லை. அவன் கோஷ்டிக்கு அவ னலேயே பெரிய வெற்றி கிடைத்தது.

ஆட்டம் முடிந்த பிறகு, அன்போடு வாலிபன் தோளிலே கையைப் போட்டுக்கொண்டு, "இன்று இவ்வளவு அற்புதமாய் ஆடினயே! முன்னெல்லாம் இப்படி ஏன் ஆடவில்லை?" என்று கேட்டார் நிபுணர்.

"என் அப்பாவும் நானும் கை கோத்துக்கொண்டு நடப் பதை எல்லாரும் கண்டிருக்கிறீர்கள். அவரைப்பற்றிய ஒரு விஷயம் உங்களுக்கெல்லாம் தெரியாது. தெரியக்கூடாது என்பது அவர் விருப்பம். அவர் முழுக் குருடர். இன்று தான் முதல் முதலாக என் ஆட்டத்தைப் பார்த்தார்" என்ருன் வாலிபன்.

—பென்னெட் ஸெர்ஃப், 'ஆம்னிபுக்.'

மனித நாகரிக வளர்ச்சியோடு கலந்திருப்பது இதன் வளர்ச்சியும்.

# எதற்கும் உதவும் சுண்ணாம்பு

**பி. பி. ஸ்ரீரங்கன்**

சுண்ணாம்புக் கல் எல்லோருக்கும் தெரிந்த ஒரு சாதாரணப் பொருள். ஆனால் சிறந்த ரசாயனப் பொருள்களில் ஒன்று அது என்பது அநேகருக்குத் தெரிந்திருக்காது.

சுண்ணாம்பின் சரித்திரம் மனித வளர்ச்சியுடன் ஒன்று கலந்திருக்கிறது. பல ஆயிரம் ஆண்டுகளாகச் சுண்ணாம்புக் கல்லையும் சுண்ணாம்பையும் மனிதன் உபயோகித்து வருகிறான். சுண்ணாம்பு சுடுவது வெகு பழமையான ரசாயனத் தொழில்களில் ஒன்று. எகிப்து தேசத்தில் இருக்கும் உலகப் பிரசித்தி பெற்ற 'பிரமிட்ஸ்' என்னும் கோபுரங்கள் இதற்குத் தெளிவான சான்று.

இந்தக் காலத்தில் சுண்ணாம்பு ஒரு நாட்டின் தொழில் வளத்துக்கு இன்றியமையாத பொருளாக இருக்கிறது.

சுண்ணாம்புக் கல் (கால்ஷியம் கார்பனேட்), சுட்ட சுண்ணாம்பு (கால்ஷியம் ஆக்ஸைடு), நீர்த்த சுண்ணாம்பு (கால்ஷியம் ஹைட்ராக்ஸைடு) இவைகள் கீழ்க்கண்ட மூன்று துறைகளிலும் பின்வரும் விகிதங்களில் உபயோகப் படுகின்றன:

1. கட்டிட வேலைகள்— 58 சதம்
2. தொழிற்சாலைகள் — 29 ,,
3. விவசாயம் — 13 ,,

கட்டிட வேலைகளில் சுண்ணாம்பு மிக அதிகமாக உபயோகப்படுகிறது. முன் காலத்தில் சுண்ணாம்பை அப்படியே உபயோகித்துக் கட்டிடங்கள் கட்டிவந்தார்கள். இப்போதோ சுண்ணாம்பிலிருந்து 'சிமெண்ட்' என்னும் பொருளைத் தயாரித்து உபயோகிக்கிறார்கள். சுண்ணாம்பையும் களிமண்ணையும் கலந்து இரும்பு உருளைகளில், 1400 டிகிரி சென்டிகிரேடுக்குச் சூடேற்றினால் சிமெண்ட் கிடைக்கும். இது சுண்ணாம்பைவிட மிகவும் வலிமையுள்ள பொருள். பெரிய கட்டிடங்கள், அணைகள் இவைகளை எழுப்ப, சிமெண்ட் மிகவும் பயன்படுகிறது.

சுண்ணாம்பையும் மணலையும் கலந்து சுட்டுக் கற்கள் தயாரிக்கிறார்கள். அவைகளை இரும்பு முதலிய பல தொழிற்சாலைகளில் பெரிய அடுப்புகள் கட்டுவதற்கு உபயோகிக்கிறார்கள். கல்நார் (ஆஸ்பெஸ்டோஸ்) என்னும் பொருளோடு கலந்து உஷ்ணத்தைக் காக்கும் பொருள்களைத் தயாரிக்கிறார்கள்.

சுண்ணாம்பின் பல வகைகளும் விவசாயத் துறையில் உபயோகப் படுகின்றன. மண்ணில் அமிதமாக இருக்கக் கூடிய 'ஆஸிட்' என்ற அமிலத்தைக் குறைப்பதுடன், தாவர வளர்ச்சிக்குத் தேவையான

மூலம்: மெட்கெம் பத்திரிகை (தமிழ்: மார்ச்—ஜூன் '54), திருச்சி.




'கால்சியம்', 'மக்னீசியம்' முதலிய உலோகப் பொருள்களையும் சுண்ணாம்பு கொடுக்கிறது. பல உரங்களில் இதைக் கலக்கிறார்கள். மேலும், தாவரங்களை அழிக்கும் பூச்சிகளோடு போரிடுவதில், விவசாயிகளுக்கு முக்கிய ஆயுதமாகச் சுண்ணாம்பு பயன்படுகிறது. 'போர்டோ மிக்சர்,' சுண்ணாம்பு கந்தகம் (லைம் ஸல்ஃபர்) போன்ற பல ரசாயனப் பொருள்கள் தயாரிப்பதிலும் இது உபயோகப்படுகிறது.

பல உலோகங்களைத் தயாரிப்பதில் சுண்ணாம்பு இன்றியமையாத பொருள். எஃகு தயாரிப்பதில் மிகவும் முக்கியமாகச் சுண்ணாம்பு உபயோகப்படுகிறது. மூன்று டன் எஃகு தயாரிக்க ஒரு டன் சுண்ணாம்புக் கல் தேவை. எஃகு, இரும்பு இவைகளிலுள்ள அசுத்தங்களைச் சுண்ணாம்பு அகற்றுகிறது. பல ஆயுதங்களும், நுணுக்கமான அளவு கருவிகளும் செய்வதற்கு வேண்டிய கடினமான உயர்ந்த ரக எஃகு தயாரிப்பதிலும் இது உபயோகப்படுகிறது.

பாக்ஸைட் என்னும் அலுமினியக் கனிப்பொருளிலிருந்து மணலைப் பிரிக்கவும், பொன், வெள்ளி, நிக்கல் முதலிய உலோகங்களை அவைகளின் தாதுப் பொருள்களிலிருந்து தயாரிக்கவும், சுட்ட சுண்ணாம்பும் நீர்த்த சுண்ணாம்பும் பயன்படுகின்றன.

'பிளீச்சிங் பவுடர்' தயாரிப்பதில் முக்கியப் பொருளே சுண்ணாம்புதான். நீர்த்த சுண்ணாம்பையும் குளோரினையும் ஒன்று கலப்பதால் பிளீச்சிங் பவுடர் கிடைக்கிறது. இதற்குச் சுண்ணாம்பு மிகவும் சுத்தமாக இருக்கவேண்டும். சங்கரிதுர்க்கத்திலிருந்து நமக்குக் கிடைக்கும் சுண்ணாம்புக் கல் இதற்கு மிக உகந்ததாயிருக்கிறது. பிளீச்சிங் பவுடரில் சாதாரணமாகச் சுமார் 30 சதவிகிதம் குளோரின் இருக்கும். ஐரோப்பிய நாடுகளில் இப்போது பல ஆராய்ச்சிகள் செய்து இதை 80-இலிருந்து 90 சதவிகிதம் வரைக்கும் உயர்த்தியிருக்கிறார்கள். துணிகளைச் சலவை செய்யவும் வியாதிக் கிருமிகளைக் கொன்று தொத்து வியாதிகள் பரவாமல் தடுக்கவும் பிளீச்சிங் பவுடர் உபயோகப்படுகிறது.

சால்வே முறையில் வாஷிங் சோடாவையும் நீர்த்த சுண்ணாம்பையும் கலந்து சோடாக் காரம் (ஹைட்ராக்ஸைடு) தயாரிக்கிறார்கள்.

சுண்ணாம்பையும் நிலக்கரியையும் கலந்து அதிக உஷ்ணப்படுத்தினால் 'கால்ஷியம் கார்பைடு' உண்டாகும். இதைத் தண்ணீருடன் கலந்தால் 'அஸிடிலீன்' என்னும் வாயு கிடைக்கிறது. அமெரிக்காவில் இப்போது இந்த வாயுவிலிருந்து நவீனமான பல்வேறு செயற்கைப்




பொருள்களைத் தயாரிக்கிறார்கள். 'அலிடிலீன் கெமிஸ்ட்ரி' என்றே ரசாயனத்தில் ஒரு தனிப் பெரும் பிரிவு ஏற்பட்டிருக்கிறது.

கண்ணாடி உற்பத்திக்கு இன்றியமையாத மூலப் பொருள்களில் சோடா உப்புக்கும் மணலுக்கும் அடுத்தபடியாகச் சுண்ணாம்பைச் சொல்லலாம். கண்ணாடி உற்பத்தித் தொழிற்சாலைகள் சிலவற்றில் சுண்ணாம்புக் கல்லையும், சிலவற்றில் சுட்ட சுண்ணாம்பையும், வெவ்வேறு சதவிகிதங்களில் உபயோகிக்கிறார்கள்.

காகிதம் செய்வதற்குத் தேவையான பொருள்களைச் சமைப்பதற்கு உகந்த திரவம் தயாரிப்பதற்குச் சுண்ணாம்பு உபயோகப்படுகிறது. கருநீர் என்ற கழிவு நீரிலிருந்து, விலையுயர்ந்த சோடாக் காரத்தை வீணாக்காமல் மறுபடி எடுப்பதற்கும் சுண்ணாம்பு உதவுகிறது.

சர்க்கரைப் பாகிலிருந்து அசுத்தங்களை நீக்கி அதை வெண்மையானதாகச் செய்யச் சுண்ணாம்பைப் பாகில் கலந்து சிறிது நேரம் வைத்திருந்து பிறகு வடிகட்டுகிறார்கள்.

தொழிற்சாலைகளிலிருந்து வெளியே போகும் கழிவு நீரிலுள்ள அமிலங்களையும், மற்றும் பல தீய ரசாயனப் பொருள்களையும் சுண்ணாம்பு அகற்றுகிறது.

இவை தவிர, வேறு பல தொழிற்சாலைகளிலும் பலவகைப் பொருள்களைத் தயாரிக்கச் சுண்ணாம்பு உபயோகப்படுகிறது. அப்படிப் பட்ட சில பொருள்களும், சில வற்றில் உபயோகம் ஆகும் முறைகளும் இவை:

1. சாயப் பொருள்கள்.

2. கால்ஷியப் பொருள்கள்.

3. பாலிலிருந்து தயாரிக்கும் சில பொருள்கள்.

4. 'ஜிலேடின்' என்ற கோந்து, 'குளுகோஸ்,' 'டெக்ஸ்டிரின்' முதலியன.

5. வெள்ளைப் 'பெயின்ட்.'

6. தோல் பதனிடும் தொழிலில் தோலிலிருந்து ரோமத்தை நீக்கித் தோலை மிருதுவாக்க.

7. 'பெட்ரோலியம்' என்ற மண்ணெண்ணெயிலிருந்து அசுத்தங்களை நீக்க.

தண்ணீரைச் சுத்தப்படுத்துவதில் சுண்ணாம்பு முக்கியமாக உபயோகப்படுகிறது.

'கால்ஷியம் ஆக்ஸைடு', 'கார்பன் டை யாக்ஸைடு' இரண்டும் ஒன்று சேர்ந்ததே சுண்ணாம்புக் கல். இயற்கையில் கிடைக்கும் சுண்ணாம்புக் கல்லைச் சுட்டால், 'கார்பன் டை யாக்ஸைடு' அகன்றுவிடும்.

மிகுந்திருக்கும் பொருளே 'கால்ஷியல் ஆக்ஸைடு' என்ற சுட்ட சுண்ணாம்பு.

சுண்ணாம்பு சுட, சுமார் 60 அடி நீளமும், 6 அடி குறுக்களவுமுள்ள ஓர் இரும்பு உருளையை, ஒரு முனை உயரமாகவும் மற்றொரு முனை தாழ்வாகவும் இருக்கும்படி, சிறு சிறு இரும்பு உருளைகளின்மீது பொருத்தியிருக்கும். இந்தப் பெரிய உருளை சுற்றிக்கொண்டேயிருக்கும். உருளையின் உள் பக்கத்தில் உஷ்ணத்தைத் தாங்கக் கூடிய கற்கள் (ஃபயர் ப்ரிக்ஸ்) பதித்திருக்கும். மேல் முனையில் பொடியாக்கிய சுண்ணாம்புக் கல் தொடர்ச்சியாக விழுந்து உருளையின் வழியே சென்று கீழ்முனையில் விழுந்துகொண்டேயிருக்கும். இந்த முனையில்தான் எண்ணெயையோ கரித்தூளையோ இட்டு எரிப்பார்கள். அமுக்கப் பெற்ற காற்றினால் தீக்கொழுந்து உருளைக்குள் வெகு தூரம் பரவும். சுமார் 1000 டிகிரி ஸெண்டிகிரேடு உஷ்ணத்தில் கற்கள் வெளியே விழுவதற்குள் பூராவாகச் சுட்டுவிடும். உஷ்ணக் காற்று வெளியேறுவதற்கு முன்னால், உள்ளே விழும் கற்களைச் சூடாக்கிவிட்டுப் போகிறது. இந்த முறையில் கிடைக்கும் சுண்ணாம்பு மிகவும் சுத்தமாக இருக்கும். உஷ்ணத்தை மேலும் சுமார் 1500 டிகிரிக்கு அதிகப்படுத்தினால் முழுவதும் சுட்ட சுண்ணாம்பு (டெட் பர்ன்ட் டாலமைட் என்ற ஒரு ரகம்) கிடைக்கும். இதைச் சில தொழிற்சாலைகளுக்காகப் பிரத்தியேகமாய்ச் செய்கிறார்கள்.

சுட்ட சுண்ணாம்பிலிருந்து நீர்த்த சுண்ணாம்பு செய்வதற்கும் சுற்றும் உருளையே உபயோகப்படுகிறது. சுட்ட சுண்ணாம்பை உருளைக்குள் போட்டு அதன்மேல் தண்ணீரைத் தெளித்தால், நீர்த்த சுண்ணாம்பு உண்டாகும். அது உருளையிலுள்ள துவாரங்களின் வழியே மற்றோர் உருளையில் போய் விழுந்து அங்கிருந்து துடுப்புக்களின் உதவியால் தொடர்ச்சியாக வெளியேறும்.

சுண்ணாம்பு வீரியமுள்ள பொருளாகையால் அது தனியே கிடைப்பதில்லை.

'கார்பன் டை யாக்ஸைடு' என்ற கரியமில வாயுவுடன் கலந்து சுண்ணாம்புக் கல் கிளிஞ்சில், சலவைக் கல் முதலிய பொருள்களாகக் கிடைக்கிறது.

இங்கிலாந்தில் போர்ட்லாண்டு என்னும் இடத்தில் கிடைக்கும் சுண்ணாம்புக் கல் உலகப் பிரசித்தி பெற்றது. இந்தியாவிலும் பல இடங்களில் சுண்ணாம்புக் கல் அகப்படுகிறது. முக்கியமாக ஜப்பல்பூர், சில்ஹெட் முதலிய இடங்களைக் குறிப்பிடலாம். தென்னிந்தியாவில் சேலம், திருநெல்வேலி ஜில்லாக்களில் இது கிடைக்கிறது. மேட்டூர் கெமிக்கல் தொழிற்சாலைக்கு வேண்டிய சுண்ணாம்புக் கற்களைச் சங்கரிதுர்க்கத்திலிருந்து கொண்டு வருகிறார்கள். அங்கே சுமார் 28 ஏக்கர் பரப்பில் பூமிக்கடியில் சுண்ணாம்புக் கல் இருக்கிறது. சுமார் 7 லட்சம் டன் இருக்குமென்று கணக்கிட்டிருக்கிறார்கள். அங்கே கிடைக்கும் கற்கள் அநேகமாக மிகவும் சுத்தமானவையாகவே ($CaCO_3$ 98%) இருக்கின்றன.

சிறு கதை:

# திரும்பிய காதல்

## பீட்டர் ஜேகப்ஸன்

இந்தக் கதாசிரியர் சென்ற நூற்றாண்டில் (1847-'85) டென்மார்க் நாட்டில் வாழ்ந்தவர். புதியதொரு நடையிலும் பாணியிலும் கதைகள் எழுதி, டேனிஷ் இலக்கியத்திலே சிறப்பாக இடம் பெற்றவர். இந்தச் சிறுகதையை மொழிபெயர்த்தவர் தி.ஜா.

போன்ஸூம் அவள் பெண் எல்லினாரும் ஒரு பெஞ்சியின்மீது உட்கார்ந்திருந்தார்கள். உட்கார்ந்திருந்த இடம் ஒரு தோட்டம். எதிரே ரோன் நதி ஓடுவது நன்கு தெரிந்தது. அதற்கு அப்பால் ஒரே குன்றுகள், வயல்கள்! நகரத்தின் வீடுகளும் மாதா கோயில்களுங்கூடத் தெரியும்.

ஆற்றின்கரை சாம்பல் நிறம். வயல்களில் ஒரு பசும் புல்கூட இல்லை. ஒரே பழுப்பு. குன்றுகளும் பழுப்பு. ரஸ்தாக்களில் ஒரு சாம்பல் நிறம். அங்குமிங்கும் வெண்ணிற வீடுகளுக்கிடையே, குபபல் கும்பலாக, கன்னங்கறேலென்று புதர்களும் மரங்களும் மண்டிக் கிடந்தன. எல்லாவற்றுக்கும் மேலே வெள்ளைவானம். அதன் ஒளி பட்டு ஒவ்வொரு பொருளும் இன்னும் ஒளிர்ந்தது. ஆனால் கண் குளிரும் ஒளி அல்ல அது; வெளுத்த சோகை நிறம். காற்றிலோ ஓர் ஒலியும் இல்லை. புல்லறுக்கும் ஓசை, ஒரு வண்டி ஓடும் ஓசை— ஏதாவது கேட்கவேண்டுமே? ம்ஹ்ம்.. நகரம் முழுவதும் மௌனத்தினால் கட்டியதுபோல் இருந்தது. தெருக்களில் மாலையின் மௌனம்; வீடுகள் யாவும் கதவுகளும் ஜன்னல்களும் இறுக மூடியபடி, மௌனம் சாதித்தன.

உயிரற்ற இந்த ஏக்கத்தைப் பார்த்து, போன்ஸின் உதட்டில் ஒரு புன்னகை தவழ்ந்தது. எல்லினாருக்கு அலுத்தே போய் விட்டது. கொட்டு கொட்டென்று மழை பெய்வதை விடாமல் பார்த்துக்கொண் டிருந்தால் எப்படி இருக்கும்? அறையில் உட்கார்ந்து, டிக் டிக் என்று மூளையில்லாமல் ஓசையிடும் கடிகாரத்தைக் கேட்டுக்கொண்டிருந்தால் எப்படி இருக்கும்? அப்படித் தான் இருந்தது எல்லினாருக்கு. இந்த நிலக்காட்சி அவள் சரீர பலத்தையே உறிஞ்சி, மூர்ச்சை போடச் செய்தது. சின்னபின்னமாக உடைந்து போன ஒரு நம்பிக்கையை நினைவுறுத்தியது இந்தக் காட்சி. அவளுடைய இனிய கனவுகள் கசந்து போய் விட்டன. ஆனால் மறக்க முடியாத கனவுகள். இந்தக் காட்சியைக் கண்டதும் அவை கிளர்ந்து வேதனைப்படுத்தின. தொலைவில்,

தன் ஊரில் நடந்த சம்பவங்களை இந்தக் காட்சி ஏன் ஞாபகப்படுத்துகிறது?

இளம் உள்ளங்களின் பழைய துயரம் அது. அவள் காதலித்து நம்பிக்கொண்டிருந்த ஒரு யுவன் கடைசியில் வேறு யாரையோ கலியாணம் செய்துகொண்டு விட்டான். ஏன்? அவள் செய்த தவறு தான் என்ன? மாறிவிட்டாளா? திரும்பத் திரும்ப இதே கேள்விகள் தான். அம்மாவிடம் இதைப் பற்றி வாயே திறக்கவில்லை அவள். அம்மாவுக்கு மட்டும் எப்படியோ இது புரிந்துவிட்டது. குழந்தையிடம் ஒரு தனிப் பரிவு உண்டாயிற்று அவளுக்கு. இந்தப் பரிவுதான் எல்லினுரை என்னவோ செய்தது. அம்மாவின் பரிவு தெரிகிறது. தெரிந்ததாகக் காண்பித்துக்கொள்ளவும் கூடாது. அம்மா இதையும் புரிந்துகொண்டாள். இருவரும் டென்மார்க்கை விட்டு வெளியே சென்று கொஞ்சகாலம் கழிக்கலாம் என வந்தார்கள். பெண் தன் துக்கத்தை மறக்க வேண்டும் என்பதே நோக்கம்.

பெண்ணின் உள்ளத்தில் என்ன நினைவுகள் ஓடுகின்றன என்று போன்ஸ் உற்றுக் கவனிக்கக்கூட வேண்டியதில்லை. படுக்கையில் புரளுகிற நோயாளியைப்போல அந்த இளங் கைகள் பெஞ்சியின் கைப்பிடியில் நிலைகொள்ளாமல் தவிப்பதைப் பார்த்தாலே போதும். அந்த இளங் கண்கள் தொலைவிலே சூன்யத்தைப் பார்த்துக்கொண்டிருப்பது, முகம் மூச்சுக்கு மூச்சு நடுங்கும் நடுக்கம், அதன் வெளுப்பு, துயரம், பொட்டில் தெரிகிற பச்சை நரம்பு - எல்லாம் அந்தக் கையைப் பார்த்தே அவளுக்குத் தெரிந்தன.

பெண்ணுக்காக அவள் பட்ட துயரம் கொஞ்சமில்லை. அவளை மார்பில் சாத்திக்கொண்டு ஆறுதல் சொல்லத் தாயின் உள்ளம் துடித்தது. ஆனால் சில துயரங்கள் வெளியே தெரியாமல்தான் மடிய வேண்டும்; வார்த்தைகளில் வெளிப்படக்கூடாது. ஒரு சமயம், நிலைமை மாறி இன்பமும் போகமும் வரும்போது, இந்த வார்த்தைகளை ஏன்தான் பிறர் காது படச் சொன்னோம் என்று ஆகிவிடும். இந்த உண்மை போன்ஸுக்கு நன்கு தெரிந்திருந்தது.

அதுவுமில்லாமல், நம்முடைய சோகம் நமக்கே உரியது. நம் அந்தராத்மாவின் மர்மங்களைப் பிறருக்கு ஏன் காட்டவேண்டும்? அதனால் கோடி ஆறுதல் கிடைக்கட்டுமே. அதைவிட ஓர் அவமானம் உண்டா?

எல்லினுருக்கும் ஒரு பிடிவாதம் உண்டு. வாயைத் திறக்கவில்லை. அம்மாவுக்குத் தன் மாதிரியே பெண்ணும் இருப்பதைக் கண்டு ஒன்று தனி மகிழ்ச்சி ஏற்பட்டது.

அவளுக்கே - அந்த அம்மாவுக்கே-இந்த அநுபவம் புதிதல்ல. பதினெட்டு வயதில் நெஞ்சார, மனமார, வேறு நம்பிக்கையோ நினைவோ இல்லாமல் ஒரு காதல். ஆனால் எல்லாம் வியர்த்தமாகிவிட்டது. அவனும் வேறு நினைவில்லாமல் அவளைப் போற்றினான். அதைத் தவிர அவன் ஒன்றும் செய்யவில்லை. கலியாணம் ஒத்திப் போய்க்கொண்டே இருந்தது. அவள் வீட்டு நிலைமையோ, ஒரு கணம் காத்திருக்க இடங் கொடுக்கவில்லை. கடைசியில் அப்பா அம்மாவாகப் பார்த்து வைத்த ஒருவனை அவள் ஏற்றுக் கொண்டுவிட்டாள். கலியாண

மாயிற்று. குழந்தைகள் பிறந்தன: இதோ உட்கார்ந்திருக்கிறதே இந்தப் பெண்ணும், டாகே என்ற பிள்ளையும். பிள்ளையும் அவர் களோடுதான் வந்திருக்கிறுன். அந்தக் கலியாணம் ஓர் ஏமாற்றம் என்று சொல்வதற்கில்லை. அவள் நினைத்ததைவிட இன்பமாக- சந்தோஷமாகத்தான் - இருந்தது. எட்டு வருஷம் அந்த வாழ்க்கை. பின்பு அவள் கணவன் இறந்து விட்டான். மனப்பூர்வமாகத்தான் அவள் துக்கம் கொண்டாடி ஞள்.ரொம்பப் பண்பட்ட புருஷன் அவன். ரத்தபாசமும் குடும்ப பாசமும் அவனுக்கு அசாத்தியம். தன் குடும்பபாசங்களைத் தவிர, உலகில் வேறு எதையும் சட்டை செய்யாத அளவுக்குக்கூட அது வளர்ந்திருந்தது. தன் மனைவி, தன் குழந்தைகள் என்ற பாசம்.

அந்தப் பிரிவுக்குப் பிறகு, குழந் தைகளுக்காக அவள் வாழத் தொடங்கினுள். ஆனுல் தனிமை யில் ஒதுங்கிவிடவில்லை. இளமை யும் பணமும் உள்ள ஒரு விதவைக்கு இயல்பான ஆர்வத் துடன் எல்லாரோடும் கலந்து பழகினுள். பிள்ளைக்கு இப்போது வயது இருபத்தொன்று. அவ ளுக்கே நாற்பதாகிறது. இன்னும் அழகாகத்தான் இருந்தாள். அள்ளி நிறைந்து நின்ற அவளுடைய பொன்னிற கேசபாரத்தில் ஒரு நரை காண முடியாது. முகத் தில்தான் ஒரு சுருக்கம் உண்டா? உடல்கூட மெல்லியதாக, வெட வெடவென்று, முழுமையும் வனப் பும் கொண்டு விளங்கிற்று. நல்ல பலம். வளைந்த அந்த உதட்டில் தோன்றிய புன்னகையில் ஓர் இனிமை. பனித்துளியின் ஒளி வீசும் அந்தக் கண்களில் யௌவ னம் இன்னும் பொலிந்தது. ஆனுல் நன்கு வளர்ந்த அந்தக் கன்ன மும், அழுத்தம் நிறைந்த மோவா யும் அந்த அம்மாளின் சோபை யைத் தெளிவுறக் காட்டின.

* * *

புதருக்கப்பால் சிரிப்பொலி கேட்டது.

ஆமாம், டாகேதான் அது. அவனேடுகூட, கோபன்ஹேகனி லிருந்து வந்திருந்த காஸ்டேஜரும் அவர் தங்கையும் பெண்ணும் வந் தார்கள். காஸ்டேஜரின் மனை விக்கு உடம்பு குணமில்லை. ஹோட் டலிலேயே படுத்திருந்தாள்.

காஸ்டேஜர் குடும்பத்தாரும் பிரயாணிகள்தான். பெல்போர்டில் இரு குடும்பங்களும் சந்தித்தன. அங்கிருந்து சேர்ந்தே பிரயாணம் செய்ததால், போகிற இடங்களி லெல்லாம் சேர்ந்தே தங்கினுர்கள். காஸ்டேஜரின் பெண் டாகேயின் நெஞ்சைக் கொள்ளை கொண்டு விட்டாள். போன்ஸுக்கு என் னவோபோல் இருந்தது. பிள்ளை புத்திசாலிதான். இருந்தாலும் கலியாணத்துக்கு ஒன்றும் அவசர மில்லை. இடா நல்ல பெண்தான். அவள் தாய் பண்பட்ட நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவள்தான். காஸ்டேஜரும் திறமையும் செல்வ மும் படைத்தவர். ரொம்ப வெகுளி. ஓயாமல், உரக்கப் பேசு வார்; உற்சாகி.

மறுநாள் காலையில் டாகே அம்மாவை அழைத்துக்கொண்டு மியூசியம் பார்க்கப் போனுன். தலை யில்லா முண்டம், ரோமானிய சமாதிகள், திமிங்கிலக் கூடு, பழங் காலச் சிற்பங்கள் இல்லையா, எல்லா மியூசியத்திலும் இருப்பவை தான் - இந்த அதிசயங்களைப்

பார்த்துவிட்டு வாசலுக்கு வந்தார்கள்.

அங்கே யாரோ நின்றுகொண்டிருந்தான். நல்ல உயரம். தாட்டி. வெயிலில் நின்று நின்று பழுத்துப்போன முகம். கையில் பிரயாணிகளுக்கு வழிகாட்டும் புத்தகம். எங்கேயோ கவனித்துக்கொண்டிருந்தவன் போன்ஸைப் பார்த்தான்.

"மன்னிக்கவேண்டும், அம்மணி, இங்கே. ஏதாவது. ." என்று ஆரம்பித்தான்.

"நாங்களும் இந்த ஊருக்குப் புதிதுதான்."

பிரெஞ்சு மொழியில் இந்தப் பேச்சு நடந்தது.

"என் நாட்டவர்களோடு பேசுகிறேனோ?" என்று திடீரென்று டேனிஷ் மொழியில் கேட்டான் அவன்.

"ஆமாம்."

ஒதுங்கி நின்றவன், சரேலென்று போன்ஸிடம் வந்தான். "அம்மணி, நாம் இருவரும் பழைய சிநேகிதர்களில்லையா?" என்று கேட்டான்.

"நீங்கள் வந்து எமில் இல்லை?" என்று ஆச்சரியத்துடன் கையைக் கொடுத்தாள் போன்ஸ்.

"நானேதான், எமில்தான். நீதானா, நீதானா?" என்று பூரித்துப் போய் அவள் கையைப் பற்றினான் அவன்.

அவளைப் பார்க்கும்போதே, அவன் கண்களில் நீர் ததும்பி நின்றது.

போன்ஸ் தன் பிள்ளையை அறிமுகப்படுத்தினாள்.

எமில் தார்பிராக்கரைப்பற்றி டாகே இதுவரை கேள்விப்பட்டதுகூட இல்லை.

"நீங்கள் தானே நேற்றுக் குதிரை மீது போனீர்கள். தென் அமெரிக்காவில் குதிரைமீது ஏறிச் செல்வார்களே கவ்கோக்கள், அது மாதிரி இருந்தது. நீங்களும் ஒரு கவ்கோ என்றுதான் நினைத்தேன்" என்றான் டாகே.

"ஆமாம்... இல்லை. நீ நினைத்தது சரிதான். எனக்கு டென்மார்க்தான் நாடு. ஆனால் தென் அமெரிக்காவில் பிளேட் நதிப் புல்வெளிகளில் இருபத்தொரு வருஷம் இருந்துவிட்டேன். இத்தனை வருஷமும் காலால் நடந்ததைவிட நான் குதிரைமேல் இருந்ததுதான் அதிகம்" என்றான் எமில்.

இப்போது?

ஆடு மாடு குதிரைகளை விற்றுவிட்டு மீண்டும் ஐரோப்பாவுக்கே திரும்பிவிட்டான். அதுதான் அவன் பிறந்த மண். ஆனால் உண்மையைச் சொல்லப் போனால், ஐரோப்பா அவனுக்கு அலுப்பைத்தான் கொடுத்தது. இந்த உல்லாசப் பிரயாணத்தில் அவனுக்கு உற்சாகம் ஒன்றும் இல்லை.

அந்தப் புல்வெளிகளை நினைத்து அவன் ஏங்குகிறானோ?

இல்லை. அவனுக்கு எந்தச் சீமையும் ஒன்றுதான். வேலை செய்யாமல் பொழுது போக்குவதுதான் அவனுக்குப் பிடிக்கவில்லை.

இப்படியே பேச்சுப் போயிற்று. வெகுநேரம் பேசினார்கள். பழைய கதைகள்; பிரிந்ததிலிருந்து ஒவ்வொருவருக்கும் ஏற்பட்ட அநுபவங்கள் - எல்லாவற்றையும் பேசினார்கள்.

போன்ஸ் அந்த நாளில் காதலித்தது இந்த எமிலைத்தான்.

இருவரும் சேர்ந்தே பொழுதைக் கழித்தார்கள்; பேசினார்கள். பிரிந்து கூடிய பழைய

சிநேகிதர்கள் என்று அவர்களைத் தனியாக விட்டுவிடுவார்கள் மற்றவர்கள். இந்தத் தனிமை நேரங்களில் அந்த இருவருக்கும் ஒன்று நன்கு புரிந்தது. காலம் எவ்வளவு அவர்களை மாற்றிவிட்டாலும், இதயங்கள் ஒன்றைக்கூட மறக்கவில்லை என்று உணர்ந்தார்கள்.

யௌவனத்தின் நடுக்கம், இனிமை, ஏக்கங்கள் எல்லாம் அவனை வந்து தாக்கின. இவ்வளவு காலமாக அவன் பழகிப் பெற்ற நிதானமும் தன்னம்பிக்கையும் சிதறுவதைக் கண்டு - அதுவும் இத்தனை வயதுக்குமேல் - அவன் மனம் துணுக்குற்றது.

போன்ஸ் தன்னை யுவதி என்று நினைத்துக்கொள்ளவில்லை. ஆனால் மடை திறந்தாற்போலக் கண்ணீராய் வந்தது-ஆனந்தக் கண்ணீர்; ஆறுதல் அளிக்கும் கண்ணீர். என்னவோ புதையலைக் கண்ட மாதிரி இருந்தது அவளுக்கு. உலகத்திலுள்ள அனைத்தின்மீதும் ஓர் ஆசை பிறந்தது. அதாவது, இளமை திரும்பிவிட்ட உணர்வு வந்துவிட்டது.

ஒரு நாள் இரவு ஹோட்டலில் தனியாக உட்கார்ந்திருந்தாள் அவள். எல்லினருக்கு நல்ல தூக்கம். காஸ்டேஜர் குடும்பத்தோடு நாடகத்துக்குப் போயிருந்தான் டாகே. மெழுகுவர்த்தியின் மங்கிய ஒளியில் கனவுகள் கண்டுகொண்டே உட்கார்ந்திருந்தாள் அவள். உடம்பில் ஒரு களைப்பு. ஆனால் இனிய களைப்பு. இன்ப நினைவுகள் நெஞ்சில் நிறையும்போது வரும் களைப்பு அது.

சற்றுக் கழித்துக் கீழே பத்திரிகைகள் போட்டிருந்த அறைக்குப் போனாள். ஆனால் ஒன்றும் ஓடவில்லை. காஸ் விளக்குகள் மௌனமாகப் பளிச்சென்று எரிந்துகொண்டிருந்தன. என்ன செய்வதென்று புரியவில்லை. நெஞ்சு இன்னும் கனவு கண்டது. உடலில் ஒரு புதிய பலம். நீண்ட, ஒளி மிக்க நாளைப் போல வாழ்க்கை அவள் முன் கிடந்தது. ஒளியும் வேகமும் வலுவும் தெம்பும் நிறைந்த எல்லை இல்லாத வெளியைப் போல வாழ்க்கை பரந்து கிடந்தது. வாழ்க்கை எவ்வளவு நிறைந்த பொருள்! - அதை நினைத்து ஏங்கினாள் அவள்.

ஏதோ அடியோசை கேட்டது. சற்றுத் தேய்ந்து மீண்டும் அது திரும்பி வந்தது. எமில் உள்ளே வந்தான்.

இருவரும் ஏதோ பேசினார்கள். பத்திரிகையைப் புரட்டிக்கொண்டிருந்தாள் அவள். அவனுக்கு அதிலெல்லாம் மனம் செல்லவில்லை. அவள் நிமிர்ந்து பார்த்தபோது, இருவர் கண்களும் சந்தித்தன.

பேச வாயெடுத்தான் அவன். உதடு நடுங்கிற்று. என்ன பேசப் போகிறான் என்று அவளுக்குத் தெளிவாகத் தெரிந்தது. அவன் முகம் சிவந்தது. அந்த வார்த்தைகளைத் தடுத்து நிறுத்துவதுபோல, கையிலிருந்த பத்திரிகையை அவனிடம் நகர்த்தி ஒரு படத்தைச் சுட்டிக் காண்பித்தாள். காட்டு எருதுகளைச் சுருக்குக் கயிற்றை வீசிப் பிடிக்கச் சில கவ்போக்கள் முயன்றுகொண்டிருந்தார்கள். அதுதான் சித்திரம்.

அவனுக்குச் சிரிப்பாக வந்தது. ஓவியன், மாடு பிடிக்கும் அந்தக் கலையை ரொம்ப எளிதாக நினைத்தது போல் தோன்றிற்று, படத்தைப் பார்த்தால். பேசுவதற்கு நல்ல விஷயம். ஆனால் மனத்தை

உறுதிப் படுத்திக்கொண்டு, பத்திரிகையை நகர்த்தி விட்டு, அவன் குனிந்தான்.

"உன் நினைவாகவே தான் இருக்கிறேன், இப்போதெல்லாம். எப்போதுமே உன்னைப்பற்றிய நினைவு தான் எனக்கு இருந்திருக்கிறது-டென்மார்க்கிலும் அமெரிக்காவிலும். இப்போது மீண்டும் உன்னைச் சந்தித்ததும், இப்போது உன்னிடம் வரும் பிரியம் போல, ஒரு போதும் வந்ததில்லை என்று படுகிறது. ஆனல்... அது உண்மை இல்லை. எப்போதும் இந்தப் பிரியம் குறைந்ததே இல்லை. இப்போது உன்னை நான் அடைய முடியுமா? எனக்குக் கிட்டாமல் போய்விட்டாய்.. நீ திரும்பியும் வந்தால்..?"

சற்று மௌனமாக இருந்தவன் எழுந்து அருகே வந்தான்.

"ஒன்றும் பேசவில்லையே நீ! நான் பாட்டுக்கு நின்று பேசிக் கொண்டே இருக்கிறேன்...நான் உன் இதயத்திடம் எப்படிப் பேசுவது? எனக்கு இடம் உண்டா? நான் உனக்கு அருகில் இருக்கிறேனு? இல்லை, தூரத்தில்தான் இருக்க வேண்டுமா? ஒரு வேண்டுகோள் என் இதயம் நிறைந்து வழிகிறது. அதை வாய் விட்டுச் சொல்ல மட்டும் எனக்குத் துணிச்சல் வந்தால்—?"

அவளுக்குப் பக்கத்தில் இருந்த நாற்காலியில் உட்கார்ந்தான் அவன்.

"எனக்கு அந்தத் துணிச்சல் வந்தால், எனக்கு... பிறகு பயமில்லை... இல்லையா?"

"நம்மைப் பிரித்து வைப்பதற்கு இனி ஒன்றும் இல்லை" என்ருள் அவள். அவளுடைய கை அவன் கையில் இருந்தது. "எது வந்தாலும், ஒருதரமாவது சந்தோஷமாக இருக்க உரிமை உண்டு எனக்கு. பூர்ணமான, இயற்கையான வாழ்க்கையை வாழவும், என் ஆசைகளையும் கனவுகளையும் நிறைவேற்றிக்கொள்ளவும் உரிமை உண்டு. ஆனந்தம் என்னிடம் வரத் தவறிவிட்டது. அதற்காக, வாழ்க்கையே உப்புச் சப்பில்லாத வெறும் கடமை என்று நான் எண்ணியதே இல்லை. யாரும் சந்தோஷமாக இருக்க முடியும் என்று எனக்குத் தெரியும்!"

மௌனமாக அவள் கையை முத்தமிட்டான் அவன்.

அவள் மேலும் சொன்னுள்: "நீங்கள் என்னிடம் அன்பு கொண்டிருக்கிறீர்கள் என்ற நினைவின் இன்பம் எனக்கு உண்டு. அந்த இன்பத்தை நான் அடைவதை யாரும் மறுக்கமாட்டார்கள். ஆனல் இதுவரை நான் பெற்ற சுகம் போதும் என்று அவர்கள் நினைக்கத்தான் நினைப்பார்கள்."

"ஆனல் எனக்குப் போதுமா? இப்படிச் சொல்லி என்னைக் கை விட்டுவிடுகிருயா நீ?"

"இல்லை.. இல்லை."

சிறிது கழித்து எல்லினுரிடம் சென்ருள் அவள். எல்லினருக்கு நல்ல தூக்கம். அந்த வெளிறிய முகத்தைப் பார்த்துக்கொண்டே நின்ருள் போன்ஸ்.

ஆம். எல்லினருக்காகவாவது அவர்கள் காத்திருக்கத்தான் வேண்டும். இன்னும் இரண்டு நாளில் இவர்கள் இந்த ஊரை விட்டுக் கிளம்பி, வேறு ஊரில் தங்கப் போகிருர்கள். ஆனல் நாளைக்கு, குழந்தைகளிடம் நடந்ததைச் சொல்லிவிட வேண்டும். அவர்கள் அந்தச் செய்தியை ரசிக்கிருர்களோ இல்லையோ, அந்த ரகசி

யத்தை மூடி வைக்க முடியாது. ஒரு சுமை அது. குழந்தைகளின் இதயங்களையும் அவளையும் பிரித்து வைக்கும் சுவர் அது. சுமையை இறக்கினால்தான் நிம்மதி வரும். மேலும் இந்தப் புதிய நடப்புக்குத் தங்களைத் தாங்களே பழக்கிக்கொள்ள அவகாசம் வேண்டாமா அவர்களுக்கு? பாதைகள் பிரியும் கட்டம் அது. தன்னையும் எமிலையும்பற்றிய வரையில் அவர்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதை நிர்ணயித்துக்கொள்ளும் முழு உரிமையும் அவர்களுக்கு உண்டு.

அறையில் டாகேயின் காலோசை கேட்டது. எழுந்து அவனைப் பார்க்கச் சென்றாள் போன்ஸ்.

என்றும் இல்லாத ஒரு மலர்ச்சியை அவன் முகத்தில் கண்டாள்! அதே சமயம் அதில் ஒரு கூச்சமும் தென்பட்டது. ஏதோ நடந்திருக்க வேண்டும் என்று அவள் ஊகித்தாள்.

அவனே, மனத்திலுள்ளதைச் சொல்ல, பீடிகை போடுகிற வகையில், நாடகத்தைப்பற்றிப் பேச ஆரம்பித்தான் - அதுவும் எங்கேயோ பார்த்துக்கொண்டு. போன்ஸ் அருகில் சென்று அவன் நெற்றியைத் தடவிக் கொடுத்து, முகத்தைத் திருப்பிய பிறகுதான் விஷயத்தைச் சொன்னான். இடா விடம் தன் காதலைத் தெரிவித்து விட்டானாம். அவளும் ஏற்றுக் கொண்டுவிட்டாளாம்.

நிச்சயதார்த்தத்தைப்பற்றி வெகுநேரம் பேசினார்கள். ஆனால் போன்ஸ் மனம் விட்டுப் பேச வில்லை. அவளுடைய உள்ளமே எழுச்சி நிறைந்து நின்றது. இரண்டு உள்ளங்களும் ஒரே சுருதியில் ஒலிக்கத் தொடங்கி விடுமோ என்ற பயம் அவளுக்கு. அன்றிரவு அவளுக்குத் தூக்கமே இல்லை. என்ன ஆச்சரியம்! இத்தனை வருஷங் கழித்து எமிலும் அவளும் மீண்டும் சந்திப்பதும் - அதுவும் அதே பழைய உணர்வுடன், அந்த நாளில் இருந்த அதே உணர்வுடன்!

அந்த நாளிலா? ஆம்.. அவள் இன்னும் சின்னப் பெண் அல்ல. அது மாதிரி நினைத்துக்கொள்ளத்தான் முடியுமோ? அவள் இன்னும் பதினெட்டு வயது மங்கை இல்லை என்ற நிலைக்கு எமில் பழகிக் கொள்ள வேண்டும். அவளுக்கு என்னவோ இளமை திரும்பி விட்டாற் போல்தான் இருந்தது. நடை, பாவனை, ஜாடை, புன்னகை எல்லாவற்றிலும் புறத்துக்கு வயதாகிவிட்டது. அகத்தில் இளமை துள்ளுகிறதே!

எத்தனையோ நினைவுகள் வந்து வந்து மறைந்தன. ஆனால் ஒரு கேள்வி மீட்டும்மீட்டும் எழுந்தது. குழந்தைகள் என்ன சொல்வார்கள்?

மறு நாள் மாலை விஷயத்தைச் சொல்ல ஆரம்பித்துவிட்டாள் போன்ஸ்.

அறையில் உட்கார்ந்திருந்தார்கள் அவர்கள்.

"ரொம்ப முக்கியமான ஒரு செய்தி சொல்லவேண்டியிருக்கிறது. நம்முடைய வாழ்க்கையை முழுவதும் மாற்றக்கூடிய விஷயம். உங்களுக்குப் பெரிதும் வியப்பாகத்தான் இருக்கும். நிதானமாக, பதட்டமில்லாமல் நீங்கள் கேட்க வேண்டும். உணர்ச்சி வசப்படுவதில் பயனில்லை. ஏனென்றால், என் முடிவு மாற்ற முடியாதது. எதுவும் மாற்ற முடியாது அதை...

நான் மறுபடியும் கலியாணம் செய்துகொள்ளப் போகிறேன்'' என்று ஆரம்பித்து, அவர்களுடைய தந்தை பழக்கமாகுமுன் எமிலேத் தான் காதலித்தது, பின்பு அவன் பிரிந்தது, இப்போது மீண்டும் சந்தித்தது எல்லாவற்றையும் சொல்லி முடித்தாள்.

எல்லினுருக்கு அழுகை வந்தது. டாகே திகைத்துப் போய், நாற்காலியிலிருந்து எழுந்து, தாயின் பக்கத்தில் வந்து முழந்தாளிட்டு அவள் கையைப் பற்றிக்கொண்டான். குழம்பிப் போய், கண்டம் தழுதழுக்க அந்தக் கையைக் கன்னத்தில் அன்புடன் சாத்திக் கொண்டான்.

''அது சரி, அம்மா! நாங்கள் என்ன செய்துவிட்டோம் உனக்கு? உன்மேல் எப்போதும் பிரியமாக இல்லையா? இந்த உலகத்தில் அருமையான வஸ்துவுக்கு ஏங்குவதைப் போல உன்னைப் போற்றி வந்திருக்கிறோமே. அப்பாவைக்கூட எங்களுக்கு தெரியாது. உன் மூலமாகத்தான் அந்த அறிவு ஏற்பட்டது. நீதான் அவரிடம் பிரியமாயிருக்கக் கற்றுக் கொடுத்தாய் எங்களுக்கு. எல்லினுரும் நானும் இவ்வளவு அந்நியோந்நியமாக இருப்பதற்குக்கூட நீ தானே காரணம்! ஒவ்வொருவரிடமும் பிரியம் வைக்கத் தகுந்த பண்பு இருப்பதை நீதானே எடுத்துக் காட்டினாய். நாங்கள் மட்டும் இல்லை; வேறு யாரோடு நாங்கள் பழகினாலும், நீ தானே அவர்களுடைய பண்பை எங்களுக்கு எடுத்துக் காட்டிப் பிரியம் கொள்ளச் செய்தாய். எங்களுக்கு இருக்கும் பண்பெல்லாம் உன்னிடமிருந்து பெற்றது தானே! உன்னை நெஞ்சில் வைத்துக் கும்பிடுகிறோம். உனக்கு மட்டும் தெரிந்திருந்தால்...உனக்காக எவ்வளவு ஏங்கியிருக்கிறோம் என்று உனக்குத் தெரியவில்லை. எங்களை நாங்களே எப்படி அடக்கிக்கொள்வது என்று நீ கற்றுக் கொடுத்தாய். எங்கள் இஷ்டம் போல உன்னிடம் நெருங்கிவரத் துணிந்ததேயில்லை, நாங்கள். இப்போதானால் எங்களை நீ விட்டு விட்டுப் போக வேண்டும் என்கிறாய், எங்களை ஒதுக்கிவிட்டு! அம்மா, முடியவே முடியாது! இதைவிடப் பெரிய தீங்கு யார் இழைக்க முடியும்? எங்களுக்குத் தீங்கு இழைப்பதா உன் விருப்பம்? அல்லது நல்லது செய்வதா? நீ சொல்வதெல்லாம் உண்மையில்லை என்று சொல்லம்மா. 'டாகே, இது நிஜமில்லை. எல்லினுர் இது நிஜமில்லை' என்று சொல்லம்மா'' என்று டாகே கெஞ்சினான்.

''டாகே, கொஞ்சம் நிதானப் படுத்திக்கொள். இல்லாவிட்டால் உனக்கும் கஷ்டம்; எல்லாருக்கும் கஷ்டம்.''

''கஷ்டமா, கஷ்டம்! கஷ்டமாக இருக்க வேண்டாம் என்றுதான் நான் நினைக்கிறேன். ஆனால் இது பயங்கரமாக இருக்கிறதே! இயற்கைக்கு முரணாக இருக்கிறதே! யாரையும் பைத்தியமாக அடித்துவிடுமே இது! எங்கள் சிந்தைக்கு எவ்வளவு விஷயம் கொடுத்திருக்கிறாய் என்பதை நீ உணர்ந்தாயா, அம்மா? என் தாயை யாரோ ஒருவன் கொஞ்சுவதை நான் ஒப்புக்கொள்வதா? இன்னொரு மனிதனின் காமத்துக்கு என் அம்மா ஆளாவதா? அவன் தழுவ, அவனைத் தழுவி... ஒரு பிள்ளை நினைக்கும் விஷயமா இது? இதைவிடவேறு அவமானம் வேண்

மோ என்ன? முடியவே முடியாது. நடக்கவே நடக்காது. ஒரு பிள்ளையின் பிரார்த்தனைக்குப் பலம் இல்லையா? எல்லினுர், சும்மா கண்ணைப் பிழிந்துகொண்டு உட்கார்ந்திருக்கிருயே. அம்மாவை வந்து கெஞ்சேன்!''

போன்ஸுக்கு அவனை அடக்க முடியவில்லை. "எல்லினுரை இழுக்காதே! அவளுக்கு உடம்பு சரியாயில்லை. தவிர ஒன்றையும் மாற்றுவதற்கில்லை என்று நான்தான் சொல்லிவிட்டேனே.''

"நான் இறந்திருந்தால் எவ்வளவோ நல்லது'' என்று எல்லினுர் மெதுவாகச் சொன்னுள்; "அம்மா, டாகே சொல்வது சரிதான். எங்களுக்கு இத்தனை வயசான பிறகு மாற்றுன் தகப்பன் ஒருவனைக் கொடுக்க உனக்கு உரிமை கிடையாது.''

"மாற்றுன் தகப்பனு? அவனுக்கு அவ்வளவு தைரியம் வந்துவிடுமா? ...அம்மா, உனக்குப் புத்தி சரியாயில்லை... அவன் மட்டும் வரட்டும். நான் உடனே இந்த இடத்தை விட்டுப் போய்விடுவேன். அந்த மனுஷனேடு உறவாடுவதை நான் சகிக்க முடியாது. சகிக்கும்படி என்னை எந்தச் சக்தியும் செய்யவும் முடியாது. உனக்கு நாங்கள் வேண்டுமா? அவன் வேண்டுமா? தம்பதிகள் டென்மார்க்குக்குப் போனுல் நாங்கள் இங்கே இருக்கிருேம் - நாடுகடத்தினுற் போல. தம்பதிகள் இங்கே தங்கினுல், நாங்கள் போய்விடுகிருேம்'' என்றுன் டாகே.

"டாகே, இதுதான் உன் முடிவா?''

"சந்தேகம் என்ன? குடும்பம் எப்படி நடக்கும் என்று நீயே கொஞ்சம் கற்பனை செய்துபாரேன். இடாவும் நானும் ராத்திரி மொட்டை மாடியில் உட்கார்ந்திருப்போம். செடிக்குப் பின்னுல் யாரோ காதோடு காதாகப் பேசுவது காதில் விழும். 'யார் பேசுகிருர்கள்?' என்று இடா கேட்பாள். 'அது வா, எங்கம்மாவும் அவளுடைய புதுக் கணவனும்' என்று நான் பதில் சொல்லுவேன்...எனக்குச் சொல்லவே கூசுகிறது. என் மனமே உலுங்கிவிட்டது. எல்லினுரும் இந்த அவஸ்தையைப் படத்தான் போகிருள்.''

குழந்தைகள் இருவரையும் போகச் சொல்லிவிட்டு, போன்ஸ் தனியாக உட்கார்ந்துகொண்டாள்.

டாகே சொன்னது சரிதான். செய்தியைச் சொன்னதால் நல்ல பயன் ஒன்றும் ஏற்படவில்லை. ஒரு மணி நேரத்துக்குள், எவ்வளவு தூரம் பிரிந்துவிட்டார்கள்! அவர்கள் பார்ப்பதுகூட, அவளுடைய குழந்தைகளைப் போல இல்லை. அவர்களுடைய தந்தையின் குழந்தைகளைப் போலல்லவா இருக்கிறது! அவளுடைய இதயம் முழுவதும் தங்களுக்கு இல்லை என்று தெரிந்த மறு கணமே இப்படிக் கீழே போட்டுவிட்டார்களே அவளை! எப்படி இருந்தால் என்ன? தன் குழந்தைகளுக்குத் தாய் என்ற ஒன்றேடு வாழ்க்கை முடிந்துவிடவில்லை. அவளுக்கும் ஒரு தனித்தன்மை உண்டு. வாழ ஒரு வாழ்க்கை, நம்பிக்கை எல்லாம் உண்டு. அவர்களுக்கு இதில் சம்பந்தமில்லை. ஒரு கால், அவள் நினைத்த மாதிரி இளமை அவளிடம் இல்லையோ? ஆம்... குழந்தைகளோடு பேசும்போது இந்த உணர்வு தோன்றத்தான் தோன்றியது. டாகே பேசும்

போது அவள் நடுங்கிக்கொண்டே, தான் இளமையின் உரிமைகளை ஆக்கிரமிப்பது போன்ற உணர்ச்சியுடன்தான் உட்கார்ந்திருந்தாள். அவர்கள் பேசிய பேச்சிலோ இளமையின் சுயநலமும் கொடுங்கோலும் எதிரொலித்தவண்ணம் இருந்தன: 'எங்களுக்குத்தான் காதல் புரியும் உரிமை உண்டு. வாழ்க்கை எங்களுடையது; எங்களுக்காக வாழ்வதுதான் உன் கடமை.'

குழந்தைகளின் மனம் மாறும் என்று தோன்றவில்லை. எமில் உடனே அந்த இடத்தை விட்டுப் போய்விட்டால், குழந்தைகளின் மனம் நிதானம் அடையலாம். அப்போது அவர்களுடைய நலத்துக்காகத் தான் படும் கவலைகளை ஒருவாறு தெரிவிக்க முடியும். இதனால் முதல் கசப்பு மறைந்தாலும் மறையும்...மறையுமா? ம்ஹ்ம்...

எமில் டென்மார்க் சென்று, கலியாண ஏற்பாடுகளைச் செய்துவிட்டு, அங்கேயே தங்கியிருக்க வேண்டும் என்று முடிவாயிற்று. ஆனால் இதனால் பயன் ஒன்றும் கிட்டவில்லை. குழந்தைகள் அவளிடம் நெருங்கவே இல்லை. டாகே இடாவோடும், எல்வினார் காஸ்டேஜரின் மனைவியோடும் பொழுதைப் போக்கினார்கள். எல்லோரும் சேர்ந்திருக்கிற சமயங்களில் பழைய அந்தரங்கமான பேச்சுக்களே காணவில்லை. பேசவும் விஷயம் இல்லை. விஷயம் இருந்தாலும், ஏதோ விருந்தாளியும் விருந்தளிப்பவரும் பிரியும்போது பேசுவதுபோல் இருந்தது. விருந்தாளி பிரயாணத்தையும், விருந்தளிப்பவர், அவர்கள் போனதும் பார்க்க வேண்டிய அன்றாட வேலைகளையும் நினைத்துக்கொண்டே பேசுவார்கள்.

குழந்தைகளுக்கும் அவளுக்கும் இருந்த உறவு உணர்ச்சி அற்றுவிட்டது. செய்யவேண்டிய காரியங்களைப்பற்றி யோசனை செய்யும் போது ஒட்டுறவு, பாசம் ஒன்றும் இல்லை.

குழந்தைகள் ஒன்று சரியாக இல்லாவிட்டால், செய்த ஆயிரத்தையும் மறந்துவிடுமே... அந்த மாதிரி டாகேயும் எல்வினாரும் தாய் செய்தவற்றையெல்லாம் மறந்துவிட்டார்கள்.

டாகேக்குத் தாயிடம் பாசம் ரொம்ப அதிகம். அதனால் அவனுக்குத்தான் அதிர்ச்சியும் அதிகமாக இருந்தது. தூக்கமே வரவில்லை அவனுக்கு. தாயின் அன்பு பறி போய்விட்டதை எண்ணி எண்ணி அழுதான். ஒரு நாள் இரவு, அவளிடம் போய், "அம்மா நீ எங்களுக்குத்தான் உரிமை. எங்களுடையவள்தான் நீ. நீ போகாதே" என்று கெஞ்சினான். "முடியாது" என்ற பதில் தான் வந்தது. இந்தப் பதில் அவன் நெஞ்சில் உள்ள உணர்ச்சிகளை வற்ற அடித்துவிட்டது. பயங்கரமான ஒரு கடினமும் சூன்யமும் உள்ளத்தில் தோன்றின.

எல்வினாரின் உணர்ச்சிகள் வேறு வகையாக இருந்தன. இறந்துபோன தகப்பனாருக்கு அநீதி இது என்று அவளுக்குத் தோன்றிற்று. எப்போதும் அவர் நினைவாகவே இருந்தாள். அவரைப்பற்றிக் கேள்விப்பட்டதையெல்லாம் கிளறிக் கிளறிக் கற்பனையில் கொண்டுவந்தாள். காஸ்டேஜரிடமும் டாகேயிடமும் அவரைப் பற்றியெல்லாம் விசாரித்தாள்.

தினம் காலையில் அவருடைய படத்தை எடுத்து வணங்கி முத்த மிட்டாள். அவர் எழுதிய கடிதங் களையும், அவருக்குச் சொந்தமான பொருள்களையும் - அவைகள் டென்மார்க்கில் இருந்தன-காணத் துடியாகத் துடித்தாள். அம்மா இப்போது அவள் கண்ணில், மாசில்லாத, அறிவே வடிவான, மனிதவர்க்கத்திலேயே அழகு நிறைந்த அம்மாவாக இல்லை. மற்ற ஸ்திரீகளைப் போலத்தான் அவளும் என்று ஓர் அலட்சியம் உண்டாயிற்று: 'நல்ல வேளையாக என் காதலைப்பற்றி அம்மாவிடம் சொல்லாமல் இருந்தேனே!'

நாட்கள் ஓடின. வாழ்க்கை பொறுக்க முடியாத சுமையாக இருந்தது. சமரசத்துக்கு வழியே காணவில்லை.

காஸ்டேஜரின் மனைவி உடம்பு குணமாகி எழுந்ததும், நடுநிலைமை யுடன் எல்லாவற்றையும் கேட் டாள். போன்ஸ் சொல்லுவது நியாயமாகத்தான் இருந்தது. பக்கத்திலுள்ள நைஸ் நகரம் வரை யில் போன்ஸ் குழந்தைகளோடு சென்றுவிட்டு, திரும்பி வந்து எமிலைக் கலியாணம் செய்துகொள் வது, கலியாணத்துக்குச் சாட்சி யாகக் காஸ்டேஜர் இருப்பது என்று அவள் யோசனை சொன் னாள். குழந்தைகளிடம் இதைச் சொன்னபோது, மௌனமாக இருந்தார்கள். கடைசியில், "அம் மாவின் இஷ்டம்" என்று சொல்லி விட்டார்கள்.

* * *

நைஸ் நகரம் வரையில் குழந்தைகளோடு சென்று, போன்ஸ் விடை பெற்றுக்கொண்டு திரும்பினாள். எமில் வந்தான். கலியாணம் ஆயிற்று.

இருவரும் ஸ்பெயினில் வந்து குடியேறினார்கள். ஆட்டுப் பண் ணைக்கு வசதியான நாடென்று எமில் அந்த நாட்டைத் தேர்ந் தெடுத்தான். டென்மார்க் செல்ல இருவரும் விரும்பவில்லை. ஸ்பெயி னிலேயே இன்பமாக வாழ்ந் தார்கள்.

இரண்டு தடவை குழந்தை களுக்குக் கடிதம் எழுதினாள் அவள். இருந்த கோபத்தில் குழந்தைகள் அவைகளைத் திருப்பி அனுப்பிவிட் டார்கள். பின்பு தாங்கள் செய் ததை நினைத்து வருந்தினார்கள். இருந்தாலும் அம்மாவுக்குக் கடிதம் எழுதவதைப் பிடிவாதம் தடுத் தது. கடைசியில் எல்லாத் தொடர்பும் அற்றுவிட்டது. எப்போதாவது நண்பர்கள் மூலம் சமாசாரம் தெரிந்துகொள்வ தோடு சரி.

ஐந்து வருஷமாயிற்று. எமிலும் போன்ஸூம் சந்தோஷமாக வாழ்ந்தார்கள். பின்பு ஒரு நாள் அவளுக்கு நோய் கண்டது. ஏதோ தீராத வியாதியாக அது வளர்ந் தது. வேகமாக, உக்கிரமாக வளர்ந்தது. மரணத்தில் கொண்டு விடும் நோய். மணிக்கு மணி அவள் பலம் மறைந்து தேய்ந்தது. ஒரு நாள், இடுகாடு நெருங்கிவிட்டது என்று உணர்ந்தவுடன் குழந்தை களுக்குக் கடிதம் எழுதினாள் அவள்:

"அருமைக் குழந்தைகளுக்கு, நீங்கள் இதைப் படிக்கும்போது எனக்கு உயிர் இராது என்று தோன்றுகிறது. பயப்பட வேண் டாம். உங்களைக் கடிந்துகொண்டு நான் எழுதவில்லை. என் அன்பு

முழுவதையும் கொட்டித்தான் எழுதுகிறேன்.

"அருமை டாகே, அருமை எல்லி னூர், இரண்டு பேர் அன்பு கொள் ளும்போது, ஒருவர் தாழ்ந்து போகவேண்டியிருக்கிறது. அதனால் நான் தணிந்து உங்கள் நினைவில் மீண்டும் வரு கிறேன். சாகப் போகிறவர்கள் ஏழைகள். நான் இப்போது மிக மிக ஏழை. எனக்கு இன்பமும் செல்வமும் நிறைந்த வீடாக இருந்த உலகம் என்னை விட்டு விடப் போகிறது. என் நாற்காலி இனி வெறுமையே கிடக்கும். கதவு எனக்குப் பின் மூடிக்கொள்ளும். இந்த உலகில் மீண்டும் காலடி வைக்க என்னால் முடியாது. ஆகை யால், உலகம் என்னிடம் அன்பாக இருக்கவேண்டும் என்று இறைஞ்சு கிறேன். நீங்களும் பழைய அன் புடன் என்னை நினைக்கவேண்டு மென்பது என் பிரார்த்தனை. இனி மேல் நான் போகும் உலகத்தில் எனக்குக் கிடைக்கக் கூடிய ஆறு தல் ஒன்றே ஒன்றுதானே - என் னிடம் அன்பு வைத்தவர்கள் என்னை ஞாபகம் வைத்துக்கொள் வதுதான் அது. அதைத் தவிர வேறு ஆறுதலே கிடையாது.

"உங்கள் அன்பைப்பற்றி எந்தச் சந்தேகமும் நான் கொண்டதே இல்லை. உங்கள் கோபத்துக்குக் காரணம், எல்லையில்லாத உங்கள் அன்புதான் என்று எனக்குத் தெரி யும். உங்கள் அன்பு குறைவாக இருந்திருந்தால், 'எப்படியாவது போ!' என்று என்னை விட்டுவிட் டிருப்பீர்கள். ஆகவே, ஒன்று சொல்லுகிறேன்: என்றாவது துயரத்தினால் உடைந்து போன ஒருவர் உங்களிடம் வந்து என்னைப்பற்றிப் பேசி - தம் துயரத் தைப்பற்றிப் பேசி - ஆறுதல் காண விரும்பினால், அவரை உதாசீனம் செய்யாதீர்கள். அவரைப் போல யாரும் என்னிடம் அன்பு வைத்த தில்லை. மனித இருதயத்திலிருந்து வரக்கூடிய இன்பம் எல்லாம் அவ ரிடமிருந்து எனக்கு வந்தது. இன் னும் சிறிது காலத்தில், அந்தக் கடைசிக் கணம் வரும்போது, இருள் கவ்வும்போது, அவர்தான் என் கையைப் பற்றிக்கொண் டிருப்பார். அவருடைய வார்த் தைகள்தான் நான் கடைசியாகக் கேட்கும் வார்த்தைகளாக இருக் கும்.

"உங்களிடம் விடை பெற்றுக் கொள்கிறேன். ஆனால் இது கடைசி விடை இல்லை. ஏனென்றால் கடைசிக் கணத்தில்தான் விடை கொடுக்க ஆசை, எனக்கு. அதில் என்னுடைய அன்பெல்லாம் இருக் கும். உங்களுக்காக நான் இத்தனை ஆண்டுகள் ஏங்கியதும், நீங்கள் சின்னக் குழந்தைகளாக இருந்த காலம் முதல் சேர்ந்த நினைவுகளும், என்னுடைய ஆயிரம் ஆசிகளும், ஆயிரம் நன்றிகளும் அதில் இருக் கும். டாகே, வரட்டுமா? எல்லி னூர், வரட்டுமா? என் கடைசி விடைக்கு முன்னால் இது: வரட்டுமா?

—"அம்மா"

---

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
FOR MANJARI AT THE M. L. J. PRESS, MADRAS-4.
MANAGING EDITOR: T. J. RANGANATHAN.